28 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி: 28 | பாலம்: 02 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 15, 2018

# மாகாணத் தேர்தலில் போட்டி தீவிரமாகிறது!

கடந்த நொவம்பர் மாதம்வரை ஒன்ராரியோ மாகாண மக்களின் கருத்துக்கணிப்பில் முன்னணியில் இருந்த பழமைவாதக்கட்சி தற்போது லிபரல் கட்சியுடன் சமனான செல்வாக்குடன் இருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.



ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்தில் 2016 ஒக்ரோபரில் அமலாக்கப்பட்ட தேர்தல் சட்டத்திருத்தத்தின் மூலம் ஒன்ராரியோ மாகாணத்திற்கு நாடாளுமன்றத் தேர்தல் நான்கு வருடத்திற்கு ஒருமுறை யூன் மாதத் தின் முதலாவது வியாழக்கிழமையில் நடை பெறவேண்டும். அதன்படி 2018 யூன் 7இல் ஒன்ராரியோ மாகாணத்திற்கான தேர்தல் நடைபெற உள்ளது.

தற்போது ஒன்ராரியோ மாகாண நாடாளு மன்றத்தில் உள்ள 107 ஆசனங்களில், கதலீன் வின்ஜ தலைவராகக் கொண்ட லிபரல் கட்சி 56 ஆசனங்களுடனும், பற்றிக் பிறவுண்ஜ தலைவராகக் கொண்ட பழமை வாதக்கட்சி 29 ஆசனங்களுடனும் அன்ரியா ஹோவத்ஜ தலைவராகக் கொண்ட புதிய ஜனநாயகக் கட்சி 18 ஆசனங்களுடனும் ஏனைய கட்சி 1 ஆசனமும் மற்றும் 3 ஆசனங்கள் வெற்றிடமாகவும் உள்ளன.

2017 யூன் மாதத்தில் நடைபெற உள்ள தேர்தலில் 17 புதிய மற்றும் மீள வரையறுக் கப்பட்ட தொகுதிகளுடன் சேர்ந்து 124 நாடா ளுமன்ற உறுப்பினர் ஒன்ராரியோ நாடாளு மன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட உள்ளனர். இவர்களில் 63 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் கட்சி பெரும்பான்மை அரசை அமைக்க உள்ளது.

'Campaign' ஆய்வு நிறுவனம் மாதம் தோறும் ஒன்ராரியோ மக்களிடையே கருத்துக் கணிப்பை நடத்தி வருகிறது. இவர்களின் கருத்துக் கணிப்பின்படி கடந்த யூன் முதல் செப்ரெம்பர் மாதம்வரை 38% மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த பழமைவாதக்கட்சி, ஒக்ரோபர் மாதத்தில் 36% ஆகி, நொவம் பரில் 35%ஆகி, டிசம்பரில் 34%ஆன மக்களின் ஆதரவுடன் இருக்கிறது. ஆனால் லிபரல் கட்சியோ கடந்த யூன் மாதத்தில் 30% ஆன மக்களின் ஆதரவைப் பெற்றிருந் தது. இது ஒக்ரோபர் மாதத்தில் 32% ஆகி, டிசம்பரில் 35%ஆன மக்களின் ஆதரவுடன் இருக்கிறது. இதேவேளை புதிய ஜனநாயகக் கட்சி கடந்த யூன் மாதத்தில் 24%ஆன மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. இது டிசம்பர் மாதத்தில் 23%ஆன மக்களின் ஆதரவுடன் இருக்கிறது.

'Campaign' ஆய்வு நிறுவனத்தகவலின்படி பழமைவாதக்கட்சி 65 வயதுக்கும் மேற்பட் டோரின் அதீத ஆதரவைப் (49%) பெற்ற கட்சியாகவும், லிபரல் கட்சி இளம் வயதின ரின் (18 தொடக்கம் 24 வயதுவரை) அதீத ஆதரவைப் (49%) பெற்ற கட்சியாகவும் இருக்கின்றன.

**லிபரல் கட்சி:** தற்போதைய லிபரல் கட்சியின் ஒன்ராரியோ அரசாங்கம் நிறை வேற்றிய 'நியாயமான வேலை வாய்ப்புகள், சிறந்த வேலைகள்' சட்டம் (Fair work places, Better jobs act) ஒன்ராரியோ மாகாணத்தின் குறைந்தபட்ச சம்பளம் 2017 செப்ரெம்பரில் $11.40இல் இருந்தது. அதை 2017 ஒக்ரோ

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)































Sold in 2 weeks
Neilson/Finch, Huge Unit - 2nd Flr Must See, BR:3+1, WR: 2 Full, All Utilities Inc. In Maint. Fee ($778)
$680,000
Detached 2-Storey, Markham & Sheppard, BR:3, WR:3 Fin. Basement, Revine Lot
$499,000
Kennedy/401, Condo Town House, BR:4+1 WR:2Full 2 Kitchens. Maint. Fee :$271
$259,900
Condo in Scarborough BR:2 WR:2 Maint. Fee:$550 All Utilities included.
$398,800
Donmills/Eglinton Condo Townhouse BR:4 WR: 2 Fully Renovated, Maint. Fee Inc Utilities
$724,900
Birchmount/Eglinton, Detached Bungalow, BR: 3+1, WR: 2 Fin. Basement/Sep Entrance
$479,900
Victoria Park/Finch Condo Townhouse BR:4 WR:2 Maint. Fee: $497+Hydro
$129,900
Residential Vacant Land in Town of Lindsay, Almost .65 Acres. Municipal Water/Sewer, Build Your Dream Home
$480,000
Condo Townhouse, Walk to Kennedy Subway BR:3 WR:2 Maint. Fee $285
$699,900
Kingston/Lawrence, Det.Bungalow Near School BR: 3+2, WR: 2 Renovated, Fin.Bsmt/Sep.Entrance
I Can Help You to Obtain a Mortgage
No Mortgage Broker Fee
FREE HOME STAGING
PROVIDED BY:
EMOH HOME & DESIGN
Sangeetha Kanesathas USC™
Certified UltimateStager™
RE/MAX
15 Years of Business Experience
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com


குளிர் காலம் ஆரம்பமாகிவிட்டது...
Unique HVAC Inc.
Heating & Cooling
50% கழிவு விலையில் உங்களது Heating
உபகரணங்களின் தரத்தையும் பாதுகாப்பையும்
உறுதிப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்!!!
ONLY!!!
$39.99
WATER TANK
Six Months
Free Rental
RENTAL
Starting From:
$ 17.99 per month
WHAT WE DO:
Δ BBQ Gas Line.
Δ Fire Place.
Δ Humidifier.
Δ Air Cleaners.
Δ Air Conditioners.
Δ Furnaces.
Δ Natural Gas Dryer.
Δ Electrical Services.
Δ Water Heaters - Tank/ Tankless.
Purchase an Air Conditioner and Furnace together SAVE BIG!!!
COMBO SPECIAL Starting at: $3100
FURNACE BY ITSELF Starting at: $2199
உங்களது உபகரணங்கள் ஒன்ராரியோ மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட்ட
தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் சரிபார்க்கப்பட்டதா?
தொடர்புகளுக்கு:
Vino 647.989.4217
Kapilan 647.981.5224
Thano 416.543.5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# Parthipan Kandavel

# பார்த்திபன் கந்தவேள்



## LIBERAL NOMINATION VOTE

Bring two pieces of ID (one including address)

**MONDAY JANUARY 22nd**
**6:30pm - 10:00pm**



**Winston Churchill C.I.**
2239 Lawrence Ave. E.
Scarborough

*Only Scarborough-Centre residents can vote.
*For more information call: 416.986.5646

> "As your current Liberal MPP, I have full faith that Parthi will work hard for you, your family, and a better Scarborough."
>
> - Hon. Brad Duguid, MPP for Scarborough Centre

- ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபை நடத்தும் பள்ளிக்கூடமொன்றில் தமிழர் ஒருவர் (திருமதி நிவா குலேந்திரன்) அதிபராகப் பதவியுயர்வு பெறக் கடுமையான உழைப்பை நல்கி அதனைச் சாத்தியமாக்கினார்.
- ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபையில் தமிழ் மரபுத் திங்கள் பிரகடனம் மூலம் 500க்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் தமிழர் பண்பாடு, வரலாறு, அடையாளம் போன்றன பரவவும் கொண்டாடப்படவும் வழிவகுத்தார்.
- ஸ்கார்பரோ சத்திய சாயி பள்ளிக்கூடத்தில் கற்பிக்கும் இவரது 3, 6ம் வகுப்பு மாணவர்கள் EQAO தேர்வில் முதலிடம் பெற்றிருக்கின்றனர்.
- 2014இல் ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபைக்கு தேர்தல் மூலம் தெரிவான முதலாவது அறங்காவலர் ஆனார்.



சிறந்த தலைமைப் பண்புகளையும் செயற்றிறன்களையும் கொண்ட பார்த்திபன் கந்தவேள் அவர்கள் ஓர் அரசியல் தலைவராக வருவதற்கு எங்கள் சமூகத்தின் உதவியை வேண்டிநிற்கிறோம்

தமிழ் மொழியையும் தமிழ்க் கலாசாரத்தையும் ரொறன்ரோப் பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து பரப்ப பார்த்திபன் கந்தவேள் அவர்கள் அயராது உழைப்பவர்

**- தமிழ் மொழி ஆசிரியர்கள்**

# நாமும் நமது இல்லமும் - 503

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



2017ஆம் ஆண்டின் இரண்டாவது காலப்பகுதியில் (ஜுலை - டிசெம்பர்) தனி வீடுகளிலும், அடுக்குமாடி மனைகளிலும் விலையில் இறக்கம் ஏற்பட்டுள்ளது.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் (Greater Toronto Area - GTA) ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட விலையுள்ள வீடுகளின் வியாபாரம் 56% இனால், முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது குறைந்துள்ளது. அத்துடன் 2016ஆம் ஆண்டின் இரண்டாவது ஆறு மாதத்துடன் ஒப்பிடும் போது 33% இனால் இறங்கியுள்ளது. 2017ஆம் ஆண்டின் இரண்டாவது ஆறு மாதத்தில் $1 மில்லியனிற்கும் $2 மில்லியனிற்கும் இடையேயான ஆதனத்தின் விலை 54% குறைவாக முதல் ஆறு மாதத்துடன் ஒப்பிடும்போது ஏற்பட்டுள்ளது. மேலும் $2 மில்லியனிற்கும் $4 மில்லியனிற்கும் இடையேயான வியாபாரம் 62% இனால் குறைந்துள்ளது.

பொதுவாக 2017இல் GTA பகுதியில் ஆதன வியாபாரத்தில் இறக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஏப்ரல் 2017இல் மாகாண அரசினால் கொண்டுவந்த புதிய நடவடிக்கைகளே காரணமாகும்.அத்துடன் ஆடம்பர வீடுகளும், ஆடம்பர அடுக்குமாடி மனைகளின் வியாபாரமும் குறிப்பிட்டளவு குறைந்துள்ளது.

2017ஆம் ஆண்டின் இரண்டாவது காலப்பகுதியில், ஆதன வியாபாரம் மந்த நிலையை அடைந்தது. 2017இல் GTA பகுதியில் தனி வீடுகளின் சராசரி விலை $1,098,95 ஆகவும் அடுக்குமாடி மனைகளின் சராசரி விலை $512,478 ஆகவும் காணப்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் இன்னுமொரு விடயத்தையும் காணக்கூடியதாக இருந்தது. அதாவது ரொறன்ரோவின் மத்திய பகுதியில் விலை கூடிய வீட்டை வாங்க இருந்த பலர் அடுக்குமாடி மனையையே வாங்கியுள்ளனர். இதற்கு அந்தப்பகுதியிலுள்ள வசதிகளும் காரணமாகலாம். இந்நிலைமை 2018இலும் தொடருமா என்ற கேள்வி இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

அடமானக்கடன் மீதான இறுக்கநிலை ஜனவரி 01, 2018இல் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஏற்படக்கூடிய தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பது, எதிர் காலத்தில் தெரியவரும். மற்றும் 2017இல் கனடிய மத்திய வங்கியினால் கொண்டுவரப்பட்ட இரண்டு வட்டிவீத அதிகரிப்பும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இதன் தொடர்ச்சியாக 2018இலும் 0.50% இலிருந்து 0.75% வரையான வட்டிவீத அதிகரிப்பு எதிர்பார்க்கப் படுகின்றது. அவ்வாறு நிலைமை ஏற்பட்டால் வியாபாரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆதனவியாபாரம் மந்த நிலையிலேயே செல்லக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். இதனால் ஆதனம் வாங்க இருப்பவர்கள் புதிதாக நிர்மாணம் செய்ய இருக்கும் அடுக்குமாடி மனையை வாங்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். இன்றைய காலகட்டத்தில் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் அடுக்குமாடி மனைகளின், திறப்பு கையில் கிடைக்கும் காலம் (Closing Date) 4இலிருந்து 5 வருடங்கள் வரை எடுக்கலாம். இதனால் உடனடியாக அடமானக் கடன் பெறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது. இதனைத் தவிர்ப்பதற்காக ஆதனம் வாங்குபவர்கள் அடுக்குமாடி மனையையே விரும்பலாம்.



இதற்குரிய மறுபக்கத்தையும் பார்க்க வேண்டும். அடுக்கு மாடி மனையை மக்கள் அதிகமாக நாடுவதால் இச்சந்தர்ப்பத்தை அடுக்குமாடி மனைகள் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் தமக்கு சாதகமாக்கி விலையை அதிகமாக கூட்டி வைத்துள்ளனர். ரொறன்ரோவின் மத்தியின் சிலபகுதிகளில் ஒரு சதுர அடி $1200இற்கு மேலாக விற்பதனையும் காணலாம். இது எவ்வளவு தூரம் ஆரோக்கியமாகலாம்? 2018ஆம் ஆண்டு முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது ஆதன வியாபாரத்தில் நிச்சயமாக வித்தியாசமான ஆண்டாகவே இருக்கும்.

1. 2017இல் 2ஆவது கால்பகுதிகளில் ஏப்பிரல், ஜுன் 12,000 அடுக்குமாடி மனை அலகுகள் விற்கப்பட்டுள்ளன.

2. 2018இல் பிரித்தானியா 'Open Banking' முறையை கொண்டுவர உள்ளது. இதனால் Goolge, FaceBook, Amazon,... போன்ற நிறுவனங்கள் நிதி சம்பந்தமான வியாபாரத்தில் ஈடுபடலாம். ஐரோப்பிய ஒன்றியமும் இதனைத் தொடரும்.

3. 2018ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வட்டிவீதம் அதிகமாக இருக்கும் என TD Bank தெரிவித்துள்ளது.

4. ரொறொன்ரோவில் 3.4%மான (56,000) ஆதனம் 'Non - Resident' இனால் வைத்திருக்கப்படுகின்றது.

5. ரொறொன்ரோவில் 12%ஆன புதிய அடுக்குமாடி மனைகள் வெளிநாட்டவர்கள் வாங்கியுள்ளனர்.



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US
Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2006 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்டம் காண வைத்துள்ள ஆணைக்குழுவின் அறிக்கை!

**- விகிர்தன் -**

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ள விடயங்கள் நல்லாட்சி அரசாங் கத்திற்குள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

2015 - 2016 காலப்பகுதியில் இலங்கை மத்தியவங்கியில் இடம்பெற்ற இந்த பிணை முறி மோசடியினால் 11.145 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. பிணைமுறி குறித்த விசார ணைகளை உள்ளடக்கிய ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த மாதம் 30ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. 1400 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் 70 பேரின் சாட்சியங்களும், சர்சைக்குரிய பிணை முறி தொடர்பில் எடுக்க வேண்டிய பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனதும், வங்கி உத்தியோ கத்தினர்களினதும் வெளியிலிருந்து செயற் பட்ட நபர்களினதும், நிறுவனங்களினதும் பங்கேற்புடனும் Perpetual treasuries நிறுவனம் சட்டத்திற்கு முரணான வகையில் இலாபத்தை ஈட்டியுள்ளது என்பதை இந்த அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீதும் ஆணைக்குழுவின் அறிக்கை குற்றம் சுமத்தியுள்ளது. அவர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், அவரது மருமகன் அர்ஜுன் அலோசியஸ், முன்னாள் நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்க, Perpetual treasuries நிறுவன முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் இந்த மோசடிகளுடன் தொடர்பு டையவர்கள் என ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழு கையளித்திருக்கும் அறிக்கையில் தவறான தகவல்கள் இடம் பெற்றிருப்பதாக ரவி கருணாநாயக்க தெரிவித் துள்ளார். எனினும் அறிக்கையில், வங்கிக் கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறப்பட்டுள்ளதை மட்டும் ஏற்றுக் கொண்டு ள்ளார். இவ்விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் பலரால் முன் வைக்கப் பட்டிருந்த போதும், ஆணைக்குழு வின் அறிக்கையில் அவர் தப்பித்துள்ளார். அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநர் பதவிக்கு நியமிப்பது தொடர்பான பிரதமர் ரணிலின் அதிகாரங்கள் முறையா னது என்று இவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.



நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த பிரத மர், அர்ஜுன் மகேந்திரன் வழங்கிய வாக்கு றுதி மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டி ருப்பட்டதாக தெரிவித்திருந்தார். ஆனால், பிரதமர் அவ்வாறு நடந்திருக்கக் கூடாது என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. அர்ஜுன் மகேந்திரன் குற்றமற்ற வர் என பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியாயப்படுத்தி வந்துள் ளமையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

ஆணைக்குழுவின் இந்த அறிக்கை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 3ஆம் திகதி அறிக்கை ஒன்றினை வெளி யிட்டுள்ளார். ஆணைக்குழுவின் ஆணை யாளர்களாக செயற்பட்ட உயர்நீதிமன்ற நீதிவான்களுக்கும், கடமையாற்றிய அரச கணக்காய்வு திணைக்களத்தின் ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகத்திற்கும், ஆணைக் குழுவின் செயலாளர் உள்ளிட்ட உத்தியோ கத்தர்களுக்கும், சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக் களம், பொலிஸ் திணைக்களத்தின் விசேட விசாரணைப்பிரிவு மற்றும், இதற்கு ஒத்துழை ப்பு வழங்கிய அனைவருக்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் அவர் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளதோடு, இந்த அறிக்கையினை தான் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளதாகவும், எதிர்வரும் காலங் களில் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பிரதமர் அலுவலகமும் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கை தற்போது ஜனாதிபதியால் சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, சம்பந் தப்பட்ட ஆணைக் குழுவுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 2016ஆம் ஆண்டு ஒக்ரோ பர் 31ஆம் திகதி கையளிக்கப்பட்ட, சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழுவின் அறிக்கையும், பிரதமரின் பணிப் புரைக்கு அமைய, சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. நல்லாட்சி தேசிய அரசாங் கத்தின் ஜனநாயக மற்றும் சட்டத்தை மதிக் கும் செயற்பாடுகளை இதன்மூலம் மீண்டும் உறுதி செய்ய எம்மால் முடிந்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 'விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற பழமொழியினைத்தான் நினைவு படுத்துகின்றது.

இந்த மோசடி தொடர்பாக நடத்தப்படவுள்ள தடயவியல் கணக்காய்விற்கு வெளிநாட்டு நிபுணர்களை அழைப்பது தொடர்பில் அவ தானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் கள் வெளியாகியுள்ளன. இந்தியா, அமெரி க்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து நிபுணர்களின் உதவியைப் பெற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.



இவை இவ்வாறிருக்க, இந்த விவகாரம் 'நல்லாட்சி அரசாங்கத்திற்குள் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதனால், எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாரிய பாதிப்பு ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த அறிக்கை குறித்த விபர ங்களை தேர்தலுக்குப் பின்னர் வெளியிடு மாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதி பதியிடம் கேட்டுக்கொண்டதாகவும் ஆனால், ஜனாதிபதி அதற்கு இணங்கவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாக நடைபெறவுள்ள உள்ளூ ராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனது தனிப் பலத்தை வெளிப்படுத்த திட்ட மிட்டிருந்தது. இந்தநிலையில்தான் ஆணைக் குழுவின் அறிக்கை வெளிவந்தது. அதனை தாமதப்படுத்தாது ஜனாதிபதி மைத்திரி உடனடியாக வெளிப்படுத்தியிருப்பது ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் ஆதரவு அணியி னர் ஜனாதிபதி மைத்திரி பிரதமர் ரணிலின் பின்னால் செல்கின்றார் - ஐக்கிய தேசியக் கட்சியினரை பாதுகாக்க முனைகின்றார் என்றெல்லாம் குற்றம் சுமத்தி பேசிவந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரியின் தற் போதைய நகர்வு இந்தப் பிரசாரங்களை பொய்யாக்கியுள்ளது. இதன்மூலம், பிளவு பட்டுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை தம்வசம் ஈர்த்து கட்சியை பலப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தை மைத்திரி உரு வாக்கியுள்ளார். இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தனிப் பலத்தை நிரூபிக் கும் திட்டத்தையும் அவர் உடைத்தெறிந் துள்ளார் என்றே கருத முடிகின்றது.

இன்றைய அரசியல் சூழல் மஹிந்த அணி யினரை ஓரளவுக்கு பலப்படுத்தும் நிலை மையினையும் ஏற்படுத்தியுள்ளது. ரணில் - மைத்திரி இணைந்த பலமே மஹிந்தவை தோற்கடித்தது. அவர்களுக்குள் பிளவு ஏற் படுமானால் அது மஹிந்தவை பலப்படுத் தவே செய்யும். மஹிந்த அரசாங்கத்தில் பல ஊழல் மோசடிகள் நடைபெற்றதாக கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மூன்று வருடங்களாகின்ற போதும் அதனை நிரூபிக்க முடியாமலுள் ளனர். ஆனால், இன்று ஐக்கியதேசியக் கட்சியின் ரவி கருணாநாயக்க போன்றோர் ஊழல் மோசடியில் சிக்கியிருப்பதானது. மஹிந்த அணியினருக்கு இனிப்பான விடயமாகவே அமைந்துள்ளது.

ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையும், இது தொடர்பில் ஜனாதிபதி மேற்கொண்ட நகர்வும் மைத்திரி-ரணில் கூட்டரசாங்கத்திற்குள் சிக்கலான நிலையி னைத்தான் ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. ஏற்கனவே இருதரப்பிலு முள்ள இரண்டாம் நிலைத் தலைவர்கள் மத்தியில் முரண்பாடுகள் இருந்தே வந்துள் ளன. எனினும், மைத்திரி, ரணில் இருவரும் வெளிப்படையாக முரண்பட்டுக்கொண்டதி ல்லை. எதிர்வரும் உள்ளூராட்சி சபைக ளுக்கான தேர்தலின் பின்னர் இருதரப்பினரி டையே பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 17

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

நாங்கள் கனடாவில் சென்ற முக்கியமான இடங்களில் எல்லாம் முதற்குடி மக்களின் குடியிருப்புகளுக்குச் செல்ல முடிந்தது. காரணம் அவர்கள் தற்போது எல்லா இடங்களிலும் பரந்து வாழத் தொடங்கிவிட்டார்கள். இப்படியான சில பயணங்களின் போது அவர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடுவதற்கு முதலிடம் ஒதுக்கியிருந்தேன். காரணம் ஈழத் தமிழர்கள் போல அவர்களும் அவர்களது பாரம்பரிய மண்ணில் ஒதுக்கப்பட்டவர்களாக இருப்பதேயாகும். எங்களுடைய வலிகள் போலத்தான் அவர்களுக்குள்ளும் வலிகள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. வசதிகள் இருந்ததால், எங்களால் புலம்பெயர முடிந்தது, ஆனால் அவர்களுக்கு வசதியும் இருக்கவில்லை, அவர்கள் அதற்கு முயற்சியும் செய்யவில்லை. பல இடங்களில் அவர்களுடன் உரையாடும்போது, கல்வி அறிவு பெறுவதில் தாங்கள் ஒதுக்கப்பட்டதாக குறைப்பட்டுக் கொண்டார்கள். அதுவே அவர்களின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாகவும் இருக்கின்றது. அப்பகுதிகளில் உள்ள ஏனைய இனத்தவர்களும் முதற்குடி மக்கள் கல்வி அறிவு பெறுவதில் பின்தள்ளப்பட்டது பற்றியே பேசினார்கள். முதற்குடி மக்கள் வாழ்ந்த சூழ்நிலை பாதகமாக இருந்ததால், அன்று அவர்களு க்குக் கல்வியின் அவசியம் பற்றி உணர முடியவில்லை. இன்று ஓரளவு சூழ்நிலை அவர்களுக்குச் சாதகமாக இருப்பதால், அவர்களில் சிலர் கல்வி அறிவு பெற்றவர்களாக இன்று இருப்பதால், இச்சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதுவே அவர்கள் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க உதவும்.

முதற்குடி மக்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்று சஸ்கச்சுவான் மாகாணத்தில் றெஜினா என்ற இடத்தில் இருக்கின்றது. இந்தப் பல்கலைக் கழகம் றெஜினா, சஸ்கட்டுன், நோர்த் கம்பஸ் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது. 1976 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சஸ்கச்சுவான் இன்டியன் கல்லூரிதான் 2003ஆம் ஆண்டில் இருந்து பல்கலைக்கழகமாக இயங்குகிறது. இங்குள்ள பாடத்திட்டங்கள் மூலம் முதற்குடி மக்களுக்கான சுகாதாரம், கல்வி, சூழலும் சுற்றாடலும் போன்ற துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. சஸ்கச்சுவான் பகுதியில் வாழ்கின்ற சுமார் 74க்கும் மேற்பட்ட முதற்குடி இனக் குழுவினரில் அனேகர் நகோட்டா, கிறி, நகாவி, டகோட்டா போன்ற மொழிகளைப் பேசுபவர்களாக இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் ஆங்கில அறிவு கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள். தங்கள் இனத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொண்ட முதற்குடி மாணவர்கள் சிலர் அதற்கேற்ற பாடங்களை எடுத்து சேவை மனப்பாளனமையுடன் செயலாற்றுகின்றார்கள். இவர்கள் தங்கள் இனத்தின் முன்னோடி வழிகாட்டிகளாகவும் இருக்கிறார்கள்.




முதற்குடி மாணவர்களுக்கான கல்வி வசதிகள் போதாது என்ற குறைகள் ஒருபுறமிருக்க, கிடைத்த வசதிகளைக் கொண்டு எப்படிச் சாதனைகளைப் படைக்கலாம் என்பதை கிறி இனத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் செய்து காட்டியிருக்கிறார். அல்பேர்ட்டா மாகாணத்தைச் சேர்ந்த முதற்குடி மாணவனான பில்லி றே பெல்கோட் (Billy-Ray Belcourt) என்பவருக்கு றோடெஸ் (Rhodes Scholarship) என்ற புலமை பரிசில் கிடைத்திருக்கின்றது. இத்தகைய புலமைப் பரிசைப் பெறும் முதலாவது கனேடிய முதற்குடி மாணவன் என்ற பெயரை இவர் இதன்மூலம் பெற்றுள்ளார். அல்பேர்ட்டாவில் வாழும் (Driftpile First Nation-Cree, North of Edmonton) கிறி இனத்தைச் சேர்ந்த பில்லி-றே பெல்கோட் என்ற முதற்குடி இன மாணவனே இந்தப் புலமை பரிசிலைப் பெற்ற அதிஷ்டசாலியாவார். இந்த செய்தியைக் கேட்டதும் தான் ஆச்சரியத்தின் எல்லைக்குப் போனதாக மிக்க மகிழ்வோடு புலமைப் பரிசு பெற்ற பில்லி றே பெல்கோட் தெரிவித்துள்ளார். தனது கல்வியில் அக்கறை கொண்ட தனது பேத்தியாரின் வளர்ப்புத்தான் தன்னை இந்த நிலைக்கு கொண்டு வந்ததென அவர் மேலும் பெருமையுடன் தெரிவித்தார்.சில முதற்குடி பெரியவர்கள் தங்கள் ஆசைகளைத் தங்களுக்குக் கிடைக்காத வசதிகளை அடுத்த தலைமுறையினர் மூலம் நிறை வேற்ற நினைப்பதால், அவர்களது இனத்தின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



Rhodes scholarships எனப்படும் இந்தப் புலமைப்பரிசு வருடந்தோறும் கனேடியர்கள் உட்பட பல மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்தப் புலமைப் பரிசின் மூலம் மாணவர்கள் தங்கள் முதுகலை பட்டப்படிப்பை இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் (Oxford University) தொடர முடியும். விசேடமான அறிவாற்றல், தலைமைப் பொறுப்பு, சேவை அர்ப்பணிப்பு போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு அதன் அடிப்படையில்தான் இந்தப் புலமைப் பரிசு வழங்கப்படுகின்றது. பில்லி றே பெல்கோட் தனது முதுகலை பட்டப்படிப்பை கனடா பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார பிரச்சனைகள், பெண்கள் பற்றிய ஆய்வுகள், மருத்துவ மானிடவியல் போன்ற துறைகளில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.இவரது தன்னம்பிக்கையும், திறமையும், தேடலும் ஏனைய முதற்குடி மாணவர்களுக்கு முன் உதாரணமாக என்றென்றும் இருக்கும். வசதிகள் கொடுக்கப்பட்டால் முதற்குடி மக்களும் தங்கள் சொந்த மண்ணிலே நன்றாகப் படித்து வாழ்க்கையில் உயர்ந்ததொரு இடத்தைப் பெறமுடியும் என்பதற்கும், ஏனைய முதற்குடி மணவர்களுக்கும் இவர் ஓர் எடுத்துக் காட்டாக இருப்பார்.

இதேபோன்ற பல புலமைப் பரிசுகளைத் தாயகத்திலும் தமிழ் மாணவர்கள் பலர் ஒருகாலத்தில் பெற்றிருந்தனர். காரணம் கல்வி ஒன்றுதான் தமிழர்களின் அழிக்க முடியாத செல்வமாக இருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் தமிழ் மாணவர்களின் திறமை, ஆர்வம், உயர்கல்வி எல்லாம் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டது. அதுவே தமிழ் மாணவர்களின் எழுச்சிக்கும், அதன் பின்னான போராட்டத்திற்கும் காரணமாக இருந்தன. இந்த நீண்ட காலப் போராட்டத்தின்பின் எழுந்து நின்ற, ஒடுக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் மத்தியில் மதுபானம், போதைவஸ்து போன்றவற்றின் பாவனையை அறிமுகம் செய்து மீண்டும் அவர்களின் கவனத்தை வேறுதிசையில் திருப்பி இருக்கிறார்கள். தாயகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பதின்னான்கு வயது வரை கட்டாயக்கல்வியும், பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியும் இதைவிட சீருடை, பாடநூல்களும் இலவசமாகக் கிடைக்கிறன. ஆனால் தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணம், ஏற்கனவே தரப்படுத்தல் முறை மேற்கொள்ளப்பட்டதால் தமிழ் மாணவர்களுக்குக் கல்வியில் விரக்தியேற்பட வழி கோலியிருந்தது. உயர்கல்வி மட்டுமல்ல, இதனால் தமிழருக்குக் கிடைக்க வேண்டிய தொழில் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. பாடத் திட்டங்களில் இருந்து தமிழரின் சரித்திரம், தமிழ் சான்றோர், தமிழர் சாதனைகள் போன்றவை மெல்ல மெல்ல நீக்கப்பட்டு வருவதை எல்லோரும் அவதானித்தாலும் மௌனத்தைத் தவிர வேற எதுவுமே செய்ய முடியாத நிலையில் அங்குள்ளவர்கள் இருக்கின்றார்கள்.

இந்த மண்ணின் முதற்குடி மக்கள் கடந்த காலத்தில் பட்ட வாழ்க்கை அவலங்கள் எங்கள் எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைந்திருக்கின்றது. தமிழர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக உழைக்கும் வரை இப்படியான பிரித்தாளும் தந்திரம் அங்கே தொடரத்தான் செய்யும். இதில் வேடிக்கை என்னவென்றால் தாயகத்தில் மட்டுமல்ல, இந்த மண்ணிலும் தமிழ் மக்களிடையே சிலர் பிரித்தாளும் இந்தத் தந்திரத்தை கடைப்பிடித்துத் தங்கள் காரியத்தைச் சாதிக்க நினைப்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. ஆனாலும் இங்கே உள்ள தமிழ் மக்கள் எதையும் சிந்தித்தே முடிவெடுப்பதால், என்ன நடக்கிறது என்பதைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதால், இவர்களின் வலைக்குள் விழாமல் இதுவரை தப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



Build Your Career in Mortgage Lending! Join My Office

MORTGAGE ALLIANCE

MORTGAGE FINANCING SOLUTIONS AVAILABLE FROM MULTIPLE LENDERS

1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca



Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530




# தேர்தல் தொடர்பில் ஆர்வமற்றிருக்கும் தமிழ் மக்கள்!

**- ஆதித்தன் -**

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற ஒரு மாதம் இருக்கின்ற நிலையில் தமிழ் பிரதேசங்களில் கட்சிகள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுவரொட்டிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதும், பல இடங்களில் அவை ஒட்டப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

நகர்ப்புறங்களில் ஒட்டப்படும் சுவரொட்டிகளை அகற்றும் வேலைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உள்ளே ஊர்கள், கிராமங்கள் தோறும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் மதில் சுவர்களில் ஒட்டப்படும் சுவரொட்டிகளால் குறித்த மக்கள் ஆத்திரமடைந்து சுவரொட்டிகளுக்கு உரித்துடைய கட்சிகளை திட்டித் தீர்ப்பதையும் செவிமடுக்க முடிகின்றது.

உண்மையில், இம்முறை நடைபெறும் இந்தத் தேர்தல் குறித்து தமிழ் மக்கள் ஆர்வமற்ற நிலையில் இருப்பதைத்தான் தமிழ் பிரதேசங்களில் காண முடிகின்றது. யார் வந்தாலும் எதுவும் நடைபெறப் போவதில்லை என்கின்ற மனநிலையிலேயே மக்கள் உள்ளனர். அத்துடன், இம்முறை நடைபெறுகின்ற இத்தேர்தலில் பல கட்சிகள், கூட்டணிகள், சுயேட்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளதால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

போரின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை திட்டமிட்ட வகையிலும், துரிதமாகவும் மேற்கொள்வதில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தவறிவிட்டனர் என்கின்ற விசனம் தமிழ் பொதுமக்கள் மத்தியில் உள்ளது.

ஆயுதப் போராட்டம் முடிவுற்ற நிலையில், அறிவார்ந்த நகர்வுகளை தங்களால் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றிற்கும், மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட பிரதி நிதிகள் மேற்கொள்வார்கள் என்கின்ற நம்பிக்கையும் தகர்ந்து போயுள்ளது. மக்கள் நம்பியிருந்த பிரதிநிதிகள் மக்களுக்கு ஏமாற்றங்களையே பரிசளித்துள்ளனர்.



எனவே, தேர்தல் காலங்களில் வந்து அவர்கள் வழங்கும் வாக்குறுதிகளை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. ஒற்றுமையாக - ஒரு குடையின் கீழ் இருந்து மக்கள் பணியாற்றுவார்கள் என நம்பியிருந்த அரசியல்வாதிகள் இன்று பிரிந்து சிதறிப் போயுள்ள நிலையும் மக்களை வெறுப்படைய வைத்துள்ளது.

இத்தேர்தலில் வடக்கு கிழக்கில் பல கட்சிகள் களமிறங்கியுள்ளன. பல அமைப்புக்கள் கட்சிக் கூட்டணிகளில் இணைந்துள்ளன. அதுமட்டுமன்றி ஒருவரையொருவர் தூற்றும் செயற்பாடுகளே இப்போது அதிகரித்துள்ளன. ஒரு கூட்டுக்குள்ளிருந்தவர்கள் பிரிந்து சென்று ஒருவரையொருவர் துரோகி என்று வசைபாடிக் கொண்டிருக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது ஊர்களையும், கிராமங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான தேர்தல் ஆகும். பொதுமக்களை சந்திக்கும் வேட்பாளர்களும் கட்சிப் பிரதிநிதிகளும் மக்களிடம் அபிவிருத்தி பற்றி எந்த திட்டங்களையும் முன்வைப்பதை தவிர்த்து எதிரணியினரை குற்றம் கூறும் - தூற்றும் விதமான கருத்துக்களை மட்டுமே பரப்பி வருகின்றனர். இதனால் ஒரு பொது விடத்தில் மக்களைக் கூட்டி பிரசாரம் செய்வதற்கான நிலைமை கூட தற்போது இல்லை.

போட்டியிடும் கட்சிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறித்த எண்ணிக்கையான வேட்பாளர்களை நிறுத்துவது கட்டாயமானது. இம்முறை வேட்பாளர்களைத் தேடிப்பிடிப்பதே கட்சிகளுக்கு கடினமான வேலையாக இருந்தது.

இலங்கையின் பிரதான தேசியக் கட்சிகள் வேட்பாளர்களை தங்கள் பிரதேசங்களில் தெரிவு செய்வதில் பிரச்சினைகள் தோன்றவில்லை. ஆனால், தமிழ் பிரதேசங்களில் வேட்பாளர்களை நிறுத்துவதில் பாரிய சிக்கல்களை அக்கட்சிகள் எதிர்கொண்டன. தமிழ் வேட்பாளர்கள் பலருக்கு பணம் கொடுத்து நிறுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி களமிறங்கியுள்ள தமிழ் கட்சிகளுக்குக் கூட வேட்பாளர்களை கண்டுபிடிப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டதை அறிய முடிகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த கூட்டணிகளும், கட்சிகளும் இறுதி வேளையில் - வேட்பு மனுத்தாக்கல் செய்யவேண்டிய கட்டத்தில்- ஏனோதானோவென்று அகப்பட்டவர்களின் பெயர்களை பட்டியலிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

சில பகுதிகளில் சுயேட்சைக் குழுக்களாக களமிறங்கியுள்ளவர்களை தங்களுடன் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகளிலும் கட்சிகள் இறங்கின. உதாரணத்திற்கு, வல்வெட்டித்துறை நகரசபையில் போட்டியிடும் பிரபல கணக்காய்வாளர் ச. செல்வேந்திரா தலைமையிலான சுயேட்சை அணியினர் படித்தவர்களாகவும், துறைசார்ந்தவர்களாகவும், ஊரிலுள்ள மக்களால் மதிக்கப்படுகின்றவர்களாகவும் காணப்படுவதால் வெவ்வேறு கட்சிகள் அவர்களை இணைத்துக் கொள்ள அவ்வணியினரிடம் பேரம் பேசின. அவ்வணியினர் கட்சிகளுடன் இணைய மறுத்து விட்டனர்.

அரசியல் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்ட நிலையில், சுயாதீனமாக போட்டியிட்டு அம்மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை ஆற்றவிருப்பதாக அவ்வணியினர் தெரிவிக்கின்றனர்.

கட்சிகள் பிரிந்து சிதறிப்போயுள்ள இந்த சூழலில் வல்வெட்டிதுறை போன்று துறை சார்ந்த நிபுணர்கள் சுயேட்சைக் குழுக்களாக அனைத்து மாவட்டங்களிலுமுள்ள சபைகளில் களமிறங்கியிருந்தால் அரசியல் கட்சிகளுக்கு பாரிய சிக்கலை ஏற்படுத்தியிருக்கும். ஆனால், ஏனைய பகுதிகளில் போட்டியிடும் சில சுயேட்சைக் குழுக்கள் முகவரியற்றனவாகவே மக்களால் பார்க்கப்படுகின்றன.

ஒவ்வொரு தேர்தலின் போதும், வடக்கு, கிழக்கிலுள்ள மக்களுக்கு சொல்லப்படும் வாக்கியம் ஒன்றுள்ளது. இத்தேர்தல் முடிவுகளை சர்வதேசம் அவதானித்துக் கொண்டிருப்பதாகவும், தமிழ் மக்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை கருத்துக் கணிப்பாக வெளிப்படுத்த தமது அணிக்கே வாக்களிக்க வேண்டும் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் பரப்புரை செய்யப்பட்டு வந்தது. இம்முறையும் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இம்முறை தமிழ் மக்கள் அதற்கு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய அரசியல் யாப்பு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை பற்றிய கருத்துக்களேயே தமிழ் பிரதேசங்களில் போட்டியிடும் பிரதான தமிழ் கட்சிகள் இன்று கையிலெடுத்துள்ளன.

தீர்வுத் திட்டம் ஒன்று முளைவிட ஆரம்பித்துள்ள சூழலில் அதற்கான ஆதரவை இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்து வருகின்றது. குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் அதனை உரத்த குரலில் தெரிவித்து வருகின்றார்.

மற்றுமொரு தரப்பினர் இந்த இடைக்கால அறிக்கையில் எதுவுமில்லை என்றும், 'ஏக்கிய ராஜ்ய' என்று இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை ஒற்றையாட்சியினையே என்றும், ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுள்ள தரப்பினை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தொடர்ந்து மக்கள் மத்தியில் இதனைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த சூழலில் தமிழ் மக்கள் வாக்களிக்கும் வீதம் குறையக் கூடிய ஆபத்தும் எதிர்நோக்கப்படுகின்றது. வாக்களிப்பு வீதம் குறையும் நிலை- வாக்குகள் சிதறும் நிலை - என்பன தமிழ் அரசியலுக்கு ஆரோக்கியமானதாக அமையாது. இந்த நிலைமைக்கு மக்களை உள்ளாக்கிய பொறுப்பை பிரதான தமிழ் அரசியல் கட்சிகளே ஏற்க வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ் பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# மூட்டு வலிகளும் கல்சியம் குறைபாடும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

நமது உடலின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத் திற்கும் கல்சியச்சத்து இன்றியமையாதது. நமது உடலில் சேரும் கல்சியத்தின் பெரும்பகுதி எலும்புகளிலும், பற்களிலும் தான் சேர்கிறது.

கல்சியம் நமது உடலில் செய்யும் செயல் கள் ஏராளம். முதலில் எலும்புகள், பற்கள் உருவாகுவதற்கு உதவுகிறது. உடலில் ஓடும் இரத்தம் உறைவதற்கு உதவுகிறது. மெல்லிய நுண் குழாய் வால்வுகளின் ஊடாக இரத்தம் பாய்வதை எளிதாக்குகின்றது. இதயத் தசை கள் சுருங்கி விரிய உதவுகிறது. உடலிலுள்ள நரம்புகள் மற்றும் நரம்பு முடிச்சுகளிலுள்ள இறுக்கம் நீங்க உதவுகிறது. இத்தனை செயல்களும் தடையின்றி நடைபெற நமது உடலுக்கு கல்சியம் தேவை.

உடலில் கல்சியம் சத்துக்குறைவு சற்று ஏற் பட்டால் மூட்டுவலி, இடுப்புவலி, உடல் பல மின்மை போன்ற பிரச்சினைகள் உண்டாகும். அத்துடன் இரத்த செல்கள் உருவாகுவதிலும் சிக்கல்கள் உண்டாகும். கல்சியம் குறை பாடானது ஆண்களைவிட பெண்களுக்கு மிகுந்த சிரமத்தை கொடுக்கும். எனவே பெண்கள் கல்சியச் சத்து நிறைந்த உணவு கள் உண்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். உண்ணும் உணவுப் பொருட்களில் எந்தெந்த அளவு கல்சியச் சத்து உள்ளது என்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

**பால் மற்றும் பால் பொருட்கள்** - பாலில் கல்சியம் அதிகம் நிறைந்திருப்பது அனை வரும் அறிந்ததே. பெண்கள் தினமும் ஒரு ரம்ளர் பால் குடித்தால் அவர்களுக்குத் தேவையான கல்சியம் கிடைத்து விடும். பால் குடிக்கப் பிடிக்காதுவிடின் தயிரை உப யோகப்படுத்தலாம். தயிரிலும் பாலில் உள்ள அதேயளவு கல்சியம் உள்ளது.

**பேரீச்சை** - பேரீச்சம்பழத்தில் கல்சியம் மற்றும் மக்னிஸியம் தாதுப்பொருட்கள் என்பன உள்ளன. இது எலும்புகளுக்கு ஆரோக்கியத்தை தரக்கூடியவை.

**அத்திப்பழம்** - அத்திப்பழத்தில் கல்சியம் மற்றும் இரும்புச்சத்து அதிகமாக உள்ளன. பெண்கள் தினமும் 1,2 அத்திப்பழம் சாப்பிடுவது மிகவும் நல்லது.

**பாதாம் பருப்பு** - பாதாம் பருப்பில் 70-80 சதவீதம் கல்சியம் உள்ளது. மேலும் விற்ற மின், இருப்புச்சத்தும் உள்ளன. பெண்கள் தினமும் கையளவு பாதாம் பருப்பை சாப்பிட் டால் மாதவிடாய் கோளாறுகள் ஏற்படாது தடுக்கலாம்.

காய்கறிகள் ? பச்சைக்கீரை, புறோக்கோலி, முருங்கை கீரை, பீன்ஸ் போன்றவற்றிலும் கல்சியம் அதிகம் உள்ளது. அத்துடன் சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, உழுந்து, சோயாபீன்ஸ், கொள்ளு போன்றவற்றிலும் கல்சியம் சத்து நிறைந்துள்ளது.

எள் - ஒரு தேக்கரண்டி என்னில் ஒரு ரம்ளர்



பாலில் இருக்கும் கல்சியத்தின் அளவு உள்ளது. ஏழைக்கு ஏற்ற எள்ளு உருண்டை. 'இளைத்தவனுக்கு எள்ளு கொழுத்தவனுக்கு கொள்ளு' போன்ற பழமொழிகள் எள்ளின் மகத்துவத்தை உணர்த்துகின்றன. அதாவது உடல் இளைத்து மெலிந்து உள்ளவர்களுக்கு ஒரு தேக்கரண்டி எள் கொடுத்தால் உடல் தேறி வலுவடையும் என்பதே இதன் பொருள். கடல் உணவுகள் ? மீன் வகைகள் மற்றும் இறாலிலும் கல்சியம் நிறைந்துள்ளது. இறாலை அளவுக்கதிகமாக வேக வைத்தால் அதிலுள்ள கல்சியம் சத்து அழிந்து போகும். மீன் சாப்பிடாதவர்கள் மீன் எண்ணெய் மாத் திரைகளை உபயோகிக்கலாம். அத்துடன் பழங்களில் குறிப்பாக ஒரேஞ் பழத்தில் கல்சி யம் அதிகம். அதுபோல் ஆப்பிள், தக்காளி, திராட்சை, மாம்பழம் போன்றவற்றிலும் கல்சியம் நிறைந்துள்ளன.

எவ்வளவுதான் கல்சியம் சத்துள்ள உணவு களை தினமும் உட்கொண்டாலும் அவை அனைத்தும் உடலால் கிரக்கப்படுவதில்லை. 100க்கு 10 சதவீதம் அளவிற்குத்தான் உறிஞ் சப்படுகிறது. மீதமுள்ள கல்சியம் உடலுக்குப் பாரமாக உள்ளது. அவற்றை வெளியேற்ற உடல் சிரமப்படுகிறது. அதனால் மலச்சிக்கல் உண்டாகிறது. எனவே கல்சியம் சத்தை உடலில் முழுவதுமாக கிரகிக்கப்படுவதற்கு முறையாக உடற்பயிற்சி அவசியம். இதன் மூலம்தான் கல்சியமானது எலும்புகளில் சென்று சேர்கின்றது.

உடற்பயிற்சியும் நடைப்பயிற்சியும் ? தினமும் அரை மணிநேரமாவது நடைபயிற்சி செய்வது பலவித நோய்களிலிருந்து நம்மை பாதுகாக் கின்றது. உடலில் தேங்கியிருக்கும் கொழு ப்பை குறைத்து எடையைக் கட்டுக்குள் வைத்திருப்பதுடன் நீரிழிவு நோயை குண மாக்க உதவுகிறது. அத்துடன் கல்சியம் முதலான தாதுப்பொருட்களை எலும்புகளில் செலுத்துகிறது.

**கதயோகா பயிற்சி** (Catha Yoga) - உடல் ஆரோக்கியத்திற்காக உடலை ஓரளவு வருத்தி செய்யும் பயிற்சிதான் யோகா. உடலி லுள்ள 263 எலும்புகளையும் உறுதியாக்க, 44 மூட்டுகளையும் வலுப்பெறச் செய்வது தான் யோகாசனப்பயிற்சி. கல்சியம் எவ்வளவு உட்கொள்கிறோமென்று நினைத்துக் கொள் வது தவறு. அது நமது எலும்புகளிலும் பற்களிலும் நன்கு சேரும்போதுதான் உடல் உறுதியாகின்றது. அதற்கு இரத்த ஓட்டம் நன்கு நடைபெறவேண்டும். இதற்கு முதல் தரமானது யோகாபயிற்சி ஒன்றுதான் என்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே கல்சியச் சத்து உடலில் முழுமையாக சேர்வதற்கு யோகாசனங்கள் பெரிதும் உதவுகின்றன.




MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- TENNIS ELBOW PROBLEM
- SKIN PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- RESPIRATORY PROBLEMS
- ALLERGIES
- DIGESTIVE PROBLEMS
- SEXUAL PROBLEMS
- VARICOSE VEINS
- SEXUAL PROBLEMS
- BACK PROBLEM /NECK PROBLEM
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Gout | Diabetes | Stumatitis |
| Flu | Arthritis | Cystitis | Colitis |
| Depression | P.M.S | Cancer | |
| Anxiety | Leucorrhea | Prostatitis | |
| Asthma | Migraines | Obesity | |
| Tonsillitis | Hair Loss | Hemorrhoids | |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


## பாரதியாரின் நிரந்தர ஆளுமை

பாரதியாரின் வசனகவிதைத் தொடர்ச்சி

முதற்கிளை : இன்பம் 6




தெய்வங்களை வாழ்த்துகின்றோம்.
தெய்வங்கள் இன்ப மெய்துக.
அவை வாழ்க.
அவை வெல்க.
தெய்வங்களே!
என்றும் விளங்குவீர் என்றும் இன்ப மெய்துவீர்
என்றும் வாழ்வீர் என்றும் அருள் புரிவீர்.
எவற்றையும் காப்பீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே!
எம்மை உண்பீர், எமக்கு உணவாவீர்.
உலகத்தை உண்பீர், உலகத்துக்கு உணவாவீர்.
உமக்கு நன்று.
தெய்வங்களே!
காத்தல் இனிது, காக்கப்படுதலும் இனிது.
அழித்தல் நன்று, அழிக்கப்படுதலும் நன்று.
உண்பது நன்று, உண்ணப்படுதலும் நன்று.
சுவை நன்று, உயிர் நன்று, நன்று, நன்று.


முதற்கிளை : இன்பம் 7

உணர்வே, நீ வாழ்க.
நீ ஒன்று, நீ ஒளி.
நீ ஒன்று, நீ பல.
நீ நட்பு, நீ பகை.
உள்ளதும், இல்லாததும் நீ.
அறிவதும், அறியாததும் நீ.
நன்றும், தீதும் நீ.
நீ அமுதம், நீ சுவை.
நீ நன்று, நீ இன்பம்.

• முதல் கிளையின் "இன்பம்" தலைப்பு நிறைவுற்றது.

– முத்துராஜா –






# மாகாணத்...

01 ஆம் பக்கத்தொடர்ச்சி

பரில் $11.60 ஆகவும், 2018 ஜனவரி முதல் $14 ஆகவும், 2019ஜனவரி முதல் $15 ஆகவும் உயர்த்தியது. இந்தக் குறைந்த பட்ச சம்பள உயர்வை ஒன்ராரியோ மாகாண வாக்காளர்களில் 10இற்கு 6 பேர் ஆதரிப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. அதிலும் பெரும்பாலும் இளையோரே அதிக ஆதரவைக் காட்டுகிறனர்.

குறைந்தபட்ச சம்பள உயர்வைவிட லிபரல் கட்சியின் ஒன்ராரியோ அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட வாடகை உயர்வினைக் கட்டுப்படுத்தும் சட்டமும், 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இலவச மருந்து வழங்கும் சட்டமும் ஒன்ராரியோ மாகாண வாக்காளரின் ஆதரவைப் பெற்றுள்ளதும் லிபரல் கட்சி தற்போது கருத்துக்கணிப்பில் முன்னுக்கு நிற்பதற்கான சில காரணங்கள் என ஊடகங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

ஒன்ராரியோவின் குறைந்தபட்ச சம்பளம் மணித்தியாலத்திற்கு $14 ஆக உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து சில தனியார் நிறுவனங்கள் (உ+ம்Tim Hortons franchises) தமது பணியாட்களுக்கு வழங்கிய சம்பளத்துடன் கூடிய இடைவேளை (Breaks) மற்றும் சில ஊழியர்நலன்கள் (Employee Benefits) போன்றவற்றை நிறுத்தியுள்ளன. இதற்கு ஒன்ராரியோ மாகாண முதல்வர் உட்பட சில தொழிலாளர் ஆர்வலர்கள் இது வேலையாட்களை தொல்லைப்படுத்தும் (Bullying workers) எனக் கூறியிருந்தனர். ஆனால் ஒன்ராரியோ மாகாண தொழிலாளர் அமைச்சர் Kevin Flynn இவ்வாறு செய்யும் தனியார் நிறுவனங்கள் தமது செய்கையால் எந்த ஒரு வேலைவாய்ப்பு நியமங்கள் சட்டத்தையும் (Employment Standards Act) மீறவில்லை எனத் திட்டவட்டமாக ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக Tim Hortons நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மணித்தியால சம்பளம் 2017 ஒக்ரோபரில் $11.60 ஆக இருந்து 2018 ஜனவரியில் $14ஆக மணித்தியாலத்திற்கு $2.40ஆல் அதிகரித்தது. ஆனால் தொழில் நிறுவனங்கள் வேலை-வாய்ப்பு நியமங்கள் சட்டப்படி வழங்கும் விடுமுறை ஊதிய அதிகரிப்பு போன்றவற்றையும் சேர்த்துப் பார்த்தால் இவ் அதிகரிப்பு மணித் தியாலத்திற்கு $3.35 ஆகும். இதனால் சராசரி Tim Hortons தனியார் நிறுவனமொன்று வருடம் ஒன்றுக்கு $243,889.10 மேலதிக பணச்செலவை எதிர்நோக்குகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2016 டிசம்பர் 31இல் கனடா முழுவதும் 4,613 Tim Hortons விற்பனை நிலையங்கள் இருந்தன. இவற்றில் 29 மட்டுமே Tim Hortons நிறுவனத்திற்கு சொந்தமானவை. ஏனைய 4,584 உம் தனியார்களுக்கு சொந்தமான (Franchise) நிறுவனங்கள் ஆகும்.

TD Bank மற்றும் சில ஊடகங்களின் கருத்துப்படி 18 மாதங்களில் இவ்வாறான 32% சம்பள உயர்வை எந்த ஒரு தொழில் நிறுவனத்தாலும் சமாளிக்க முடியாது. இதனால் 90,000இல் இருந்து 185,000 பேர் வரை வேலை இழக்க வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**பழமைவாதக் கட்சி:** பழமைவாதக் கட்சியின் தலைவர் பற்றிக் பிறவுண் 2017 நொவம்பர் 25இல் தனது கட்சியின் மாநாட்டில் பழமைவாதக்கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கொள்கைகள் அடங்கிய 78 பக்கங்களைக் கொண்ட 'மக்களுக்கு உத்தரவாதம்' (People's Guarantee) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகத்தில் பழமைவாதக் கட்சியின் செயற்திட்டங்களாக 147 உறுதி மொழிகள் இருக்கின்றன. இப்புத்தகத்தை வெளியிட்டு உரையாற்றுகையில் பற்றிக் பிறவுண் இதில் உள்ள முக்கிய ஐந்து உறுதி மொழிகளையும் தனது முதலாவது பதவிக் காலத்தில் நிறைவேற்றத் தவறினால் தான் இரண்டாம் முறை தேர்தலில் நிற்கமாட்டேன் என்றார்.

இவ் உறுதி மொழிகளில் முக்கியமானவை:

- நடுத்தர மக்களின் ஒன்ராரியோ மாகாண வரியை 22.5%ஆல் குறைத்தல்.
- குறைந்த வருமானம் உள்ளவர்களின் குழந்தைப் பராமரிப்பு செலவினத்தில் 75% ($6,750 வரைக்கும்) வருடாந்தம் மீள அளித்தல்.
- ஒன்ராரியோ மக்களின் மின்சாரக் கட்டணத்தை மேலும் 12%ஆல் குறைத்தல். (இவ்வருடம் லிபரல் அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை 25% ஆல் குறைத்துள்ளது)
- கனேடியப் பிரதமர் அடுத்த பத்து வருடங்களுக்கு மனநல சுகாதார சேவைக்கு $1.9 பில்லியன் ஒதுக்கி உள்ளார். பழமைவாத ஒன்ராரியோ அரசும் அதேயளவு பணத்தை ஒன்ராரியோ மக்களின் மனநல சுகாதார சேவைக்கு ஒதுக்கும். அத்துடன் குறைந்த வருமானம் உள்ள வயது முதிர்ந்தோருக்கு இலவச பற்சிகிச்சை வசதிகளையும் வழங்கும்.
- ஒன்ராரியோ மாகாண அரசியலில் உள்ள ஊழல்களை ஒழிக்க 'நம்பிக்கை, நேர்மை மற்றும் பொறுப்புணர்வுச் சட்டம்' (Trust, Integrity and Accountability Act) ஒன்றை இயற்றி அமல்படுத்துதல்.
- ரொறன்ரோவின் நிலக்கீழ் தொடருந்து சேவையை 5 புதிய செயற்திட்டங்களாக $5 பில்லியன் செலவில் அடுத்த 15 வருடங்களில் நிறைவேற்றுதல்.

கடந்த 15 வருடங்களாக ஒன்ராரியோ மாகாணத்தில் ஆளும் அரசாக இருந்து வரும் லிபரல் கட்சி தொடர்ந்தும் மக்கள் கருத்துக் கணிப்பில் பழமைவாதக் கட்சியுடன் சரிக்கு சமமாக இருப்பதுபற்றி பல ஊடகவியலாளர்கள் வியப்புத் தெரிவித்துள்ளனர்.

# மெல்போர்ன், Viceroy's House, நாஹிட் ஆகிய படங்கள் மீதான சிறு குறிப்பு

**- வானரன் -**

புலம் பெயர்விற்கு பல காரணங்கள் இருக்கலாம். அரச பயங்கரவாதம், சக இயக்கங்களின் வன்முறைகள் எனப் பலவற்றை நாம் கூறலாம். போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதுதான் எமது வெளியேற்றங்களும் நிகழ்ந்தன. போருக்கான காரணங்களிலிருந்து நாம் ஓடி வந்துள்ளோமா? எமது கூட்டுப் பொறுப்புக்களிலிருந்து நாம் விலகிவிட்டோமா?

மெல்போர்ன் என்ற ஈரானிய படத்தை சில தினங்களுக்கு முன்பு இரண்டாவது தடவையாகப் பார்த்த பொழுது என் மனதில் மேற்கூறிய எண்ணங்களே தோன்றின. 2014இல் புதுமுக இயக்குனரான நிமா ஜாவிடியின் இயக்கத்தில் வெளியாகிய படம் மெல்போர்ன்.

மெல்போர்ன்க்கு உயர் கல்விக்கு செல்லவுள்ளார் அமீர். இவருடன் மனைவி சராவும் செல்கின்றார். விமானத்துக்கு சில மணி நேரங்களே இருக்க, பரபரப்பாக தங்கள் பயணப் பொருட்களை அடுக்கிக் கொண்டிருக்கின்றனர். பக்கத்து வீட்டு பெண், தனது கைக் குழந்தையை இவர்களிடம் கொடுத்து விட்டுச் சென்றுள்ளாள். சடுதியாக அறைக்குள் செல்லும் அமீர், பிள்ளைக்கு மூச்சு வரவில்லை எனக் காண்கின்றார். பிள்ளை இறப்புக்கான காரணங்கள் கணவன், மனைவியால் ஆய்வு செய்யப்படுகின்றன. கணவன் தான் அறைக்குள் சிகரெட் புகைத்த படியால், பிள்ளை இறந்திருக்கலாம் எனக் கூறுகின்றார். இணையத்தில் அதுவும் ஒரு



காரணமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளதாக உறுதி செய்கின்றார். மனைவி, தான் பிள்ளையை நித்திரை கொள்ள வைத்த முறை தவறு. அதனால் பிள்ளை இறந்திருக்கலாம் என்கின்றார். இருவரும் இந்தக் கணத்திலிருந்து விடுதலை பெற்று, மெல்போர்ன் செல்ல வேண்டும் என விரும்புகின்றனர். இதன் பின்னர் நடைபெறுவனவே மிகுதிப் படம். இறுதியில் இவர்கள் மெல்போர்ன் செல்கின்றனர்.

ஒரு அப்பார்ட்மென்ட்க்குள்ளேயே படம் பிடிக்கப்பட்டுள்ளது இப்படம். ஒரு சிலமணி நேர நிகழ்வுகளே இப்படம். இறுதிவரை எம்மை இறுக்கி வைத்துள்ளார் இயக்குனர்.

ஒரு சிறு கைக் குழந்தையை, அதுவும் வேறு நாட்டிற்கு பயணம் செல்ல இருப்பவர்களிடம், பயணமாகவுள்ள அன்று கொடுத்து விட்டுச் செல்லுவார்களா? என்ற கேள்வி எழாமல் இல்லை. இந்தக் குறைபாடு படமாக்கப்பட்டுள்ள முறையில் அமிழ்ந்து போகின்றது.

போராட்டங்கள் நடைபெறும் பிரதேசங்களில் இருந்து வெளியேறும் புத்திஜீவிகள், அறிவாளிகளை இப்படம் கேள்வி கேட்கின்றது. இணையத்தில் காரணம் தேடுவது, மேற்கத்திய நாட்டு கொள்கைகளுக்கான ஒப்பீடாகவேயுள்ளது. மெல்போர்ன் என்ற படத்தின் பெயரே ஒரு குறியீடுதான். செப்பரேசன் படத்தின் பாதிப்பில் தோன்றியுள்ளது மெல்போர்ன். ஆனாலும் புலம் பெயர் மக்களின் மனச்சாட்சியை நோக்கி, நேரடியாகவே பாய்கின்றது.

## VICEROY'S HOUSE

Gurinder Chadha இன் இயக்கத்தில் வெளிவந்த Bhaji on the Beach, Bend It Like Beckham படங்கள் வித்தியாசமானவை. பிரித்தானியாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி பெண் இயக்குனர். புலம் பெயர் இந்தியப் பெண் இயக்குனர்கள் மீரா நாயர், தீபா மேத்தா போன்றோர் வரிசை

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்...)


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.


**Nimal Subramaniam**

Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

சிலசமயம் நீங்களே உணர்ந்திருக்கலாம். எதைப் பார்த்தாலும் வெறுப்பாக இருக்கும். யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வரும். மனதுக்குள் தோற்றுவிட்டது போல் ஒரு வெறுமை உண்டாகும். அப்படியானால், மனச்சோர்வு என்ற எதிரியை உள்ளே அனுமதித்து விட்டீர்கள் என்று அர்த்தம்!

மனச்சோர்வு எதனால் வருகிறது. அடிப்படையில் உங்களுக்கு என்ன நிகழ்கிறது?

நீங்கள் விரும்பியபடி யாரோ நடக்கவில்லை. எதிர்பார்த்தபடி எதுவோ நிகழவில்லை. ஆசைப்பட்டபடி வாழ்க்கை அமையவில்லை. சுருக்கமாகச் சொன்னால், உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ, அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் நீங்கள் தவிக்கிறீர்கள். அதை எதிர்க்கிறீர்கள்.

நீங்கள் மனச்சோர்வுடன் இருக்கும்போது எல்லாம், மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். உங்களுடன் உட்கார்ந்து மற்றவர்களும் அழ வேண்டும் என்று விருப்புகிறீர்கள். இரக்கத்தை யாசிக்கிறீர்கள். என்ன பைத்தியக் காரத்தனம் இது?

உங்கள் விருப்பப்படி எல்லாம் உலகம் ஏன் நடக்க வேண்டும்? நீங்கள் விரும்பியபடியெல்லாம் தங்களை ஏன் மற்றவர்கள் ஏய்த்துக்கொள்ள வேண்டும்?

அகங்காரம் எங்கே இருந்தாலும் அதற்கு அடி விழத்தான் செய்யும். அப்போது மனச்சோர்வு முளைத்து எழும். அது உங்களைப் பற்றிய நம்பிக்கைகளைத் தகர்த்துவிடும்.

வெளியே இருந்து ஆயுதங்களால் தாக்குபவர்களைக் கூட சரியாகக் கையாண்டால், சமாளித்துவிடலாம். மனச்சோர்வு என்பது உள்ளிருந்து கொண்டே. கீறிக் கிழித்துக் குடைந்து உங்களை உபயோகமில்லாமல் அழிந்து விடும் விஷ ஆயுதம். உங்களை நீங்களே தாக்கி அழித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள்தனம் அது! எதை நினைத்தும் சும்மா வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பதால், எந்தப் பலனும் இல்லை. வருத்தம் என்பதும் துக்கம் என்பதும் ஆளுக்கு ஆள் மாறுபடும். ஒருவர் தீக்குச்சி பற்றவில்லை என்றாலே துக்கமாகிவிடுவார். இன்னொருவர் விட தீப்பற்றி எரிந்தாலும் அலட்டிக் கொள்ளமாட்டார்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர் ஒரு நாள், ஜெனரல் ஐஸனோவர் சொர்க்கத்துக்கு போனார்.

'வாரக் கடைசியில் நரகத்தைச் சுற்றிப் பார்க்க எனக்கு அனுமதி வேண்டும்' என்று கடவுளிடம் அவர் கோரினார்.

'நரகத்தில் இருப்பவர்கள் சொர்க்கத்தைப் பார்க்க விரும்பினால் அர்த்தம் இருக்கிறது. உனக்கு நரகத்தைப் பார்க்கும் ஆசை எதற்கு?' என்று கேட்டார் கடவுள்.

'அங்கே ஹிட்லர் என்ன வேதனைகளை அனுபவிக்கிறார் என்று பார்க்க வேண்டும்' என்றார் ஐஸனோவர். கடவுள் நரகத்துக்கான பாஸ் கொடுத்தார்.

நரகத்தில் ஹிட்லர் சித்திரவதை செய்யப்படும் முகாமுக்கு ஐஸனோவர் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே அசிங்கங்களால் நிரப்பப்பட்ட இரண்டு ஆள் உயரத் தொட்டி ஒன்றில், ஹிட்லர் அமிழ்த்தப்பட்டிருந்தார். தொட்டிக்கு வெளியே தெரிந்த அவருடைய முகத்தில் பிரகாசமான புன்னகையைப் பார்த்து ஐஸனோவர் ஆச்சரியம் அடைந்தார். 'சகிக்க முடியாத நாற்றத்தில், அருவருப்பான அசிங்கத்தில் அழுத்தியபோதும், எதைப் பற்றி நினைத்து இப்படி வெட்கமில்லாமல் சிரிக்கிறாய்?' என்று ஹிட்லரிடம் கேட்டார்.

'எனக்கு கீழே சிக்கிக் கொண்டு இருப்பது யார் தெரியுமா? முசோலினி! அவன் தோள்களில்தான் நான் நிற்கிறேன். அவன் நிலைமையை நினைத்துப் பார்! என்று ஹிட்லர் பொங்கிப் பொங்கிச் சிரித்தார்.

துக்கம் என்பதும் வருத்தம் என்பதும் இருப்பது யார் தெரியுமா? முசோலினி! அவன் தோள்களில் தான் நான் நிற்கிறேன். அவன் நிலைமையை நினைத்துப் பார்!' என்று ஹிட்லர் பொங்கிப் பொங்கிச் சிரித்தார்.

துக்கம் என்பதும், வருத்தம் என்பதும் ஒருவருக்கொருவர் மாறுபடும். மற்றவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வருத்தம் கூடும் அல்லது குறையும் என்றால் அவை வெளியிலிருந்தா வருகின்றன? இல்லை. உங்கள் மனதுக்கு உள்ளேயேதான் உற்பத்தியாகின்றன.

உங்கள் மனதைச் சந்தோஷமாக வைத்துக் கொள்வதோ, சோர்வாக வைத்துகொள்வதோ உங்கள் கையில் தான் இருக்கிறது. நீங்கள் நினைத்தபடி உலகம் நடக்க வேண்டும். மற்றவர்கள் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் உங்கள் அகங்காரம் வீண் சுமை. அதைக் காலடியில் போட்டு நசுக்கி விட்டு மேலே தொடரவில்லை என்றால், நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியும் வலிக்கும். ஒவ்வொரு திருப்பத்திலும் அச்சம் வரும். நம்பிக்கை குறைந்து, மனச்சோர்வு எழும்.

மனச்சோர்வு வரும்போதெல்லாம் மற்றவர்கள் மீது எரிச்சல் கொள்வதை நிறுத்திவிட்டு அதற்குக் காரணம் நீங்கள்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உலகத்தின் மீது கோபம் கொள்ளாதீர்கள். உங்கள் குறைகளை உணர்ந்து அவற்றை மாற்றிக்கொள்ளக் கிடைத்த அற்புதமான வாய்ப்பு இது என்று உணருங்கள். வலிகளும், வேதனைகளும் நிரம்பிய அனுபவங்களையே வாழ்க்கைப் பாடங்களாக ஏற்று, உங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள வழங்கப்பட்ட வரம் இது!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

எதிர்பார்ப்பை வளர்த்துக்கொண்டால்தான் ஏமாற்றங்கள் என்பதை உணருங்கள். அகங்காரத்தை விட்டொழியுங்கள் மாற்றுக் கருத்துக்களையும் எதிர்க்காமல் ஏற்கப் பழகுங்கள். அவற்றையே உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்வது எப்படி என்று திட்டமிடுங்கள். கிடைக்கும் அனுபவங்களை உங்களுக்கு பயனுள்ளதாக மாற்றிக்கொள்ளுங்கள்!

### குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'நான் கேட்பது எதுவுமே கிடைப்பதில்லையே?'

'ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள் படைப்பில் எந்தச் சக்தியும் உங்களுக்கு எதிராக இல்லை. அதை நீங்கள் கையாள்வதில்தான் அது ஆக்கபூர்வமாகவோ, அழிவுப்பூர்வமாகவோ மாறுகிறது.

ஒருநாள் அதிகாலையில் சூரியன் உதிப்பதைப் புகைப்படம் எடுக்க நினைக்கிறீர்கள். அன்று பார்த்து வான் பொத்துக்கொண்டு மழைபெய்கிறது. உங்கள் எண்ணம் ஈடேற முடியாமல் போனதை நினைத்து உலகத்தின் மீதே கோபித்துக் கொண்டு சோர்வாக அறை மூலையில் முடங்கிக்கிடந்தீர்கள் என்றால் உங்களுக்காகப் பரிதாபப்பட்டு இயற்கை தன்னை மாற்றிக்கொள்ளுமா?

அதை விடுத்து மழையை ஆர்வத்துடன் கவனியுங்கள். ஒருவேளை; அற்புதமான வானவில்லைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கலாம். கிடைத்தற்கரிய புகைப்படமாகவும் அது அமையலாம். அப்படியே இல்லையென்றாலும் குவிந்து போயிருக்கும் வீட்டு வேலைகளைச் செய்து முடிக்க உங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரமாக அதை ஏற்றுக்கொள்ளலாமே!

உங்களை மீறிய சக்திகளால் நீங்கள் செய்ய நினைத்ததைச் செய்ய இயலாமல் போகலாம். ஆனால் செய்யக்கூடியதையும் செய்யாமல் சோர்ந்து கிடப்பது, பைத்தியக்காரத்தனம் அல்லவா?'




# மீள் சுழற்சி கொள்கலன்களை பரிசோதிக்கும் ரொறன்ரோ நகரசபை.

**Inspection Recycling Bins**

ரொறன்ரோவில் உள்ள வீடுகளுக்கு முன்னால் நகரசபையின் ஊழியர்கள் ரக் வண்டியில் வந்து எடுத்துச் செல்வதற்காக வைக்கும் 'மீள் சுழற்சி கொள்கலன்' (**Rycyling Blue Bin**) என்னும் நீல நிற கொள்கலன்களை நகரசபை பரிசோதகர்கள் ஆராய்ந்து பார்த்து பரிசோதனை செய்யும் ஒரு நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர்.

அந்தக் குறிப்பிட்ட கொள்கலனுக்குள் போட வேண்டிய பொருட்கள் தவிர வேறு ஏதாவது குப்பைகள் அல்லது உபகரணங்கள் இருந்தால், அவ்வீட்டு முகவரிக்கு $20க்கு தண்டனை ரிக்கற் வழங்கப்படும். கடதாசிகள், பத்திரங்கள், பிளாஸ்ரிக் போத்தல்கள், கோப்பைகள், அலுமினிய தகடுகள், பேப்பர் மட்டைகள் என நகரசபையினால் குறிப்பிடப்படும் பொருட்களை மட்டுமே அதனுள் போடலாம்.


மேலதிகமாக உணவுப் பொருட்களின் துகள்கள் பச்சைக் கலர் கொள்கலனிலும் ஏனைய குப்பைகள் சாம்பல் நிற கொள்கலனிலும் இட்டு நகரசபையினர் எடுத்துச் செல்வதற்காக வைக்க வேண்டும் என்பது சகலரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.



மீள் சுழற்சி கொள்கலனுக்குள் சேகரிக்கக் கூடாத பொருட்களைப் போட்டு வைப்பதால் அதனை பகுத்து எடுப்பதற்கு ஒவ்வொரு வருடமும் நகரசபை பல மில்லியன் டொலர் மக்கள் வரி பணத்தினை செலவழித்து வருகின்றது.

இவற்றினை தவிர்ப்பதற்காகவே தற்போது இப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்விதியை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்க ஆரம்பித்துள்ளது.

# தோல் புற்றுநோய்



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

**(Skin Cancer)**

எமது தோலை மினுமினுப்பாக நாம் வைத்திருப்பதற்கு பாவிக்கும் கிறீம்கள் (Cream) கணக்கற்றவை. நூற்றுக்கணக்கான கம்பெனிகள் புதிய புதிய பெயர்களில், அழகிகளின் கைகளில் கொடுத்து 'அதனை பூசுவதால் எப்படி தனது தோல் பளபளப்பாக மாறுகின்றது' என்று விளம்பரம் வரும்போது மயங்கிப் போகின்றோம். அடிக்கடி மாறி மாறி கிறீம்களை உபயோகித்து மனம் மகிழ்கிறோம். பழைய காலங்களில் எந்தவிதமான கிறிம்களையும் பாவிக்காமல் அழகான மேனி பலருக்கும் இருந்தது. இரசாயன கலப்புள்ள கிறீம்களை பாவிக்க தொடங்கியது முதல் நூற்றுக் கணக்கான பிரச்சினைகள் தோலுக்கு ஏற்படுகின்றன. குளிர்நீர், சூடான நீர், மிதமான சூட்டு நீர் என்று பல்வேறு வகை நீரில் நாம் குளிக்கிறோம். எல்லாவற்றையும் பொறுக்க முடியாத தோல் எமக்கு தண்டனை தருவது போல் கடிக்கிறது, சிவப்பாகிறது, அரிக்கிறது. எக்சிமா போன்ற கடுமையான அரிப்பு செய்கிறது. புற்றுநோயைக் கூட தருகிறது.

நமது உடலில் மிகப்பெரிய உறுப்பு என்றால் அது தோல் தான். நம் உடல் முழுவதும் போர்த்தியிருக்கும் தோலில் எண்ணுக்கணக்கற்ற நோய்கள் வந்துவிடுகின்றன. மேற்கத்தைய நாடுகளில் தோல் புற்றுநோய் அதிகமாகி விட்டது. வெப்பமுள்ள நாடுகளில் இந் நோய் குறைவாகும். எனினும், சிலரை இந் நோய் தாக்கி விடுகின்றது. ஆசிய நாடுகளில் பரவலாக ஏற்படாதபடியால் இதனுடைய பாதிப்பு உணரப்படுவதில்லை. எனினும் நாம் வாழுகின்ற இந்நாடுகளில் குறிப்பாக வெள்ளை நிற தோலுடையவர்கள் இப்புற்று நோய் மூலம் பாதிப்படைகின்றனர்.

எமது உடலில் உள்ள தோல் பல அடுக்குகளால் ஆனது. எபிடெர்மிஸ் (Epidermis) எனப்படும் வெளிப்புற தோல் அடுக்கு கிட்டத்தட்ட (0.04மி.மீ) தடிப்பம் கொண்டது. வெங்காயத்தின் தோல் போல இதுவும் இருக்கும். எல்லோருக்கும் இவ்வெளிப்புற தோலின் தடிப்பம் ஒரே அளவு தடிப்பம் தான். டேர்மிஸ் (Dermis) எனப்படும் உட்புற தோல் அடுக்கு கிட்டத்தட்ட 1-2 மி.மீ தடிப்பம் கொண்டது. இதில்தான் இரத்தக்குழாய்கள், மயிர் கால்கள், வியர்வைச்சுரப்பிகள் உள்ளன. இதற்கும் உட்புறமாக தோலின் உட்புறத்திசு அமைந்துள்ளது. இதில் கொழுப்பு, சவ்வுகள் உள்ளன. ஒவ்வொரு உறுப்புக்கும் நிணநீர் நாளங்கள் சுரப்பு செய்கின்றன. எனினும் தோலில் உள்ள அசாதாரண கலங்கள் பெருகுவதால் புற்றுநோய் ஏற்படுகின்றது.


தோல் புற்றுநோயில் பலவகைகள் இருந்தாலும் பிரதானமானவை மூன்றாகும். அவையாவன: அடிப்படை உயிரணு புற்றுநோய் (Basal cell cancer (BCC), செறிவான செல் புற்றுநோய் (Squamous cell cancer) SCC), மெலனோமா செல்வகை (Melanoma cell cancer (MCC) சில சந்தர்ப்பங்களில் மார்பகம், சிறுநீரகம் ஆகியவற்றில் ஏற்படும் புற்று நோய்களும் தோலுக்கு பரவலாம். அதாவது வேறு உறுப்புகளில் ஏறபடும் புற்று நோய்களும் தோலுக்குப் பரவலாம்.

பேசல் செல்வகை வெள்ளை இனத்தவருக்கு அதிகம் வருகிறது. இப்புற்றுநோய் மெதுவாக ஆரம்பித்து படிப்படியாக திசுக்களை தாக்குகின்றது. கண்களுக்கு இடைப்பட்ட தோல் பகுதி, மூக்குப்பகுதி, வாய்ப்பகுதிக்கு இடைப்பட்ட முகத்தின் முக்கோணப்பகுதியில் வருகிறது. முதலில் கொப்புளம் போன்று ஆரம்பித்து பின்பு சிறு புண்ணாக மாறி விடும். புண் ஆறாமல் வலி மற்றும் சிறிதளவு இரத்தக் கசிவு ஏற்படலாம். சில வாரங்களில் இப்புண் தோலை ஊடுருவிச்சென்று தசை, எலும்பு, குருத்தெலும்பு என்பவற்றை பாதிக்கிறது. இவை நிணநீர் பகுதிக்கோ ஏனைய பகுதிக்கோ பரவுவதில்லை. ஊதா நிறத்திற்கு அப்பாலான கதிர்வீச்சுக்கு எமது உடல் (Ultra violet (UV) Radiation) பாதிப்படையாமல் விடுவதே முக்கியமாகும். அல்லாவிடில் பெண்களுக்கு கைகள், கால்கள் முகம் சொண்டு, காதுகள், கழுத்து, மார்பு என்பவற்றில் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு. இளம் வயதுள்ள வெள்ளைநிற பெண்களே அதிகம் பாதிப்புறுகின்றனர்.

ஸ்குவாமஸ் புற்றுநோய் தோலின் எந்தப் பகுதியிலும் வரலாம் என்றாலும் நெற்றி, காதுப் பகுதிகளில் கூட வரலாம். இப்புற்று நோய் கறுப்பு தோல் உள்ளவர்களுக்கும் வரலாம். சூரியனின் வெளிச்சம் படாத இடத்திலும் வரலாம். இதுவும் சிறு கட்டி மாதிரி ஏற்பட்டு உடைந்து ஆறாத புண்ணாக மாறிவிடும். நீரிழிவு உள்ளவர்கள் இப்படி வரும்போது கூடிய கவனிப்பு வேண்டும்.

மெலனோமா என்பது முதல் இரண்டையும் விட அபாயகரமானது. ஆரம்பத்தில் சிறு மச்சம் போன்ற தடிப்பு ஏற்பட்டு வேகமாக வளருகின்றது. வலி, இரத்தக் கசிவு ஏற்படுகிறது. பெரும்பாலும் தோள்பட்டைக்கு பின் புறமுள்ள முதுகு தோல், கால் விரல்கள், மலவாசல் போன்ற இடங்களில் ஆரம்பிக்கின்றது. இது பிற உறுப்புகளுக்கும் செல்லலாம். பெண்களுக்கு கீழ்கால்களில் ஏற்படுகிறது. பெரிய மண்ணிறமான கறுப்பு புள்ளிகள், நிறமாற்றம், வேறு வேறு நிறங்களில் மாற்றம், உள்ளங்கை விரல்நுனி, கால்விரல், வாய், மூக்கு, மலவாசல் எங்கும் ஏற்படலாம். இதுவும் ஊதாநிறத்திற்கு அப்பாலுள்ள கதிர்வீச்சினால் (Ultraviolet Radiation) ஏற்படுகிறது.

மிக முக்கியம், அரிதான சில தோல்புற்று நோய்கள் உள. Kaposi sarcoma merkel cell carcinoma, Sebaceous gland carcinoma என்பனவே அவை. முதல்வகை தோலின் இரத்தக்குழாய்களில் ஏற்பட்டு தோலில் வெளிப்படுவதாகும். எயிட்ஸ், எதிர்ப்புச்சத்து குறைபாடு, உறுப்பு மாற்றம் செய்தவர்களிடையே இது தோன்றுகிறது. இரண்டாவது வகை மயிர்கால்களில் ஏற்படுவது. தலை, கழுத்துப்பகுதிகளில் உருவாகின்றது. மூன்றாவது வகை வியர்வைக் குழாய்கள் மூலம் ஏற்படுவது. கண் மடல் (Eye Li) பகுதியில் கூடுதலாகவும், மற்றைய பகுதிகளில் பரவுவதாகவும் உளது.



புற்றுநோய் தோன்றுவதற்கு பல காரணிகள் உள. தோலின் DNA கலங்களில் ஏற்படும் மாறுதல்களே முதன்மையானவை. மேற் தோலிலேயே கூடுதலாக ஏற்படுகிறது. இவை சூரிய கதிர்களில் உள்ள புறஊதாக் கதிர்கள் மூலமே அதிக பாதிப்புறுகின்றன. பொதுவாக சூரியக் கதிர்களின் வீச்சு மட்டும் காரணமல்ல. ஏனைய பல காரணிகளும் புற்றுநோய்க்கு காரணமாகலாம்.

முதலாவதாக தோலின் நிறம் முக்கியமாகிறது. வெள்ளை நிறத்தவர்கள் இதில் அதிக பாதிப்புள்ளவர்களாவர். சிவப்புமயிர், மென்மையான கறுப்பு கண்கள் உள்ளவர்கள் கூடுதலாகப் பாதிப்புறுவர். காரணம் சூரியனின் கதிர்கள் இவர்களது தோலை இலகுவாக எரித்து விடுகிறது. கறுப்பு நிறத்தவர்களுக்கு இப்பாதிப்பு குறைவாகும். சிறுவயதினர், பதின்மவயதினர் கூடுதலான ஆபத்துடையவர்களாவர். மேலை நாடுகளில் கூடுதலான நேரம் வெளியே நின்று வேலை செய்பவர்கள், அதற்கென்று விசேட உடுப்புகள் அணியாதவர்கள் இதனால் பாதிப்புறுவர். மச்சம் (Moles) உள்ளவர்கள் குறிப்பாக பல மச்சங்கள் உள்ளவர்கள் புற்றுநோய்க்கு உள்ளாகலாம். வழக்கத்தைவிட பெரிய மச்சம் ஆபத்தானது. இதனை அடிக்கடி கவனிக்க வேண்டும். குடும்பத்தில் யாருக்காவது தோல்புற்றுநோய் உள்ளதென்றால் அதுவும் ஆபத்தே. உடலில் எதிர்ப்புசக்தி குறைந்து போவதும் எயிட்ஸ் நோயுடன் வாழ்பவர்களும் இப்பிரச்சியை எதிர்கொள்வர். ஆர்சனிக் (Arsenic) பொருட்களின் தாக்கம் உள்ளவர்களுக்கும் ஆபத்துள்ளது. அத்துடன் புகை பிடிப்பவர்கள், அல்சர் நோய் உள்ளவர்கள், பல மருந்துப் பாவனையாளர்கள் கூட இப்புற்றுநோய்க்கு உள்ளாகலாம்.

தோலில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டால் குடும்ப வைத்தியரூடா விசேட நிபுணரை சந்திக்க நேரிடலாம். தோலில் ஏற்படும் மாற்றங்களை வைத்து புற்றுநோயை அறியக் கூடியவர் ஒரு தோல் நோய் நிபுணர் (Dermatologist) ஆவார். எனவே இவரிடம் செல்லும்போது எல்லா தகவல்களுடனும் செல்வது நலம். வருவதற்கு முன்னர் என்ன தகவல்களுடன் வர வேண்டும் என்பதனை அறிந்து கொள்வதுடன் ஏற்பட்டுள்ள குணங்குறிகளையும் அனுபவங்களை எழுதிக்கொண்டு செல்லலாம். அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள், மன அழுத்த மாற்றங்கள், பாவிக்கும் உயிர்ச்சத்து, மருந்து விபரங்களை கொண்டு செல்லலாம். நோயாளி தன்னுடன் ஒரு நண்பரை அல்லது உறவினரை கூட்டி செல்லலாம். வைத்தியரிடம் கேட்கக் கூடிய கேள்விகளையும் தயாரித்து செல்லலாம்.

எனக்கு புற்றுநோய் உள்ளதா? எப்படியான தோல் புற்றுநோய் எனக்கு உள்ளது? எனக்கு விசேட பயிற்சிகள் செய்ய நேரிடுமா, என்னிடம் உருவாகியுள்ள புற்றுநோய் விரைவில் பரவி விடுமா? சிகிச்சை செய்வதால் ஏற்படக் கூடிய விளைவுக் எவை? இவ்வாறு செய்தால் அடையாளங்கள் தெரியவருமா?, வேறுவகையான புற்று நோய்களும் ஏற்படுமா? வேறுவிதமான மருந்து வகைகள் உள்ளதா? இது சம்பந்தமான நூல்கள், வெளியீடுகள் உள்ளனவா? என்பனவாகும்.

விசேட நிபுணர் நோயாளியிடம் கேட்கக்கூடிய சில கேள்விகளும் உள. உமது உடலில் தோல் மாற்றங்கள் எப்போது ஏற்பட்டன. குறிப்பிட்ட பருவிலிருந்து இரத்தம் வருகிறதா, எவ்வளவு வலி ஏற்படுகிறது? என்பது பற்றி வினாவலாம்.

இவ்வகையான புற்று நோய்க்கு சிகிச்சை செய்ய பல நிபுணர்கள் தேவை. தோல் நோய் நிபுணர்கள், நோயியல் நிபுணர்கள் (Pathologists), சத்திரசிகிச்சை நிபுணர்கள், பிளாஸ்ரிக் நிபுணர்கள், புற்றுநோய் நிபுணர்கள், கதிர்வீச்சு நிபுணர்கள் இதில் தேவைப்படுவர்.

தோல்புற்று நோய் இருக்கும் என சந்தேகப்பட்டால் முதலில் திசு பரிசோதனை செய்யப்படும். இதனை Biopsy எனலாம். இதில் இரண்டு வகை உண்டு. முதலில் புண்ணில் இருந்து சிறிய அளவு திசு எடுக்கப்படலாம் அல்லது புண்கட்டியை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நோயியல் நிபுணரிடம் அனுப்பப்படலாம். அவரே என்னவகை புற்று நோய் என தீர்மானிப்பார். சில பரிசோதனைகள் மேலதிகமாக செய்யப்படலாம். அவை நிழலுரு (Xray), CT பரிசோதனை, MRI பரிசோதனை செய்யப்படும். இதன்மூலம் எந்த அளவில் புற்றுநோய் உள்ளது? என அறியப்படலாம். குறைந்தளவு ஆபத்தான புற்றுநோய் கதிருட்டல் (Radiation) மூலம் அகற்றலாம். அத்துடன் தோல் மேலான மருந்து சிகிச்சை (Chemotherapy) செய்ய நேரிடலாம். MOHS என்னும் நுணுக்குக்காட்டி சத்திர சிகிச்சை (MOHS Surgery) புற்று நோயை அகற்ற உதவுகிறது.

ஒவ்வொரு வகை புற்று நோய்க்கும் வேறு வேறான சிகச்சை உள்ளது. பேசல் அல்லது ஸ்வாமாஸ் புற்றுநோய் மாதிரிகளை எடுத்த பின் அறுவை சிகிச்சை அல்லது கதிருட்டல் மூலம் சிகிச்சை செய்யலாம். நோய் உள்ள இடத்தினைப் பொறுத்தே இச்சிகிச்சை அமையும். இடம், தோல் உள்ள நிலை என்பன முக்கியம். அறுவை சிகிச்சையால் அப்பகுதி

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

RENT - OFFICE ROOMS
1 - 7 EASTVALE DRIVE MARKHAM & STEELES
Suitable For Real Estate / Mortgage / Insurance Agents & Law Office.
Ample Free Parking Anytime. Rent From $500/Month
Call: 416.464.3551

# சாத்திரம் கோத்திரம் இனிமேல் எம்மாத்திரம்



நா. க. சிவராமலிங்கம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் சோதிடக்கலையும் ஒன்று. மனிதகுலம் பயன்பட அமைந்த கலை இதுவெனலாம். சோதிடக் கலை அதர்வணவேதத்தின் ஒரு பிரிவாகும். சோதிடக் கலையின் உயர்வு பற்றியும் அதனால் உண்டாகும் பயன்கள் பற்றியும் சித்தர்களும் முனிவர்களும் ஞானிகளும் கூறியுள்ளனர். தமிழர் தம்வாழ்வியல் சோதிடக்கலையுடன் ஒன்றிணைந்தது எனலாம். எதற்கும் எல்லாவற்றிற்கும் முகூர்த்தம் பார்ப்பது தமிழருடைய தவிர்க்கமுடியாத தலையாய தன்மையாக அமைந்துள்ளது. அறிவியலில் அதிர் உயர் வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய காலகட்டத்திலும் சாத்திரம் பார்க்காதே என்ற சங்கநாதம் தவிடு பொடியாகி விடுகின்றது. மேற்குலக நாடுகளில் கூட சோதிடக் கலைக்கு சிறப்பும் முக்கியத்துவமும் ஏற்பட்டு வருவது கண்கூடு.

மகாராசன் நாட்டை ஆளுவான் மகாராணி அவனை ஆளுவாள் என்பதற்கேற்ப கிரகங்கள் நம்மை ஆளுகின்றன. நவக்கிரகங்கள் ஜாதகத்தில் அவற்றின் நிலை நம்மை சபலத்திற்கும் அதேவேளை அவலத்திற்கும் உட்படுத்துகின்றன. சிறப்பிற்கும் மாறாக வாழ்க்கைத் துறப்பிற்கும் நம்மை உட்படுத்துகின்றன. இராமன் காடு சென்றதும், புத்தர் அரச போகத்தைத் துறந்ததும் தருமர் சூதாடி நாடுகள் இழந்ததும் கிரகபலத்தால் ஏற்பட்ட விளைவுகளே எனலாம். சோதிடம் உள்ளதை உள்ளபடி காட்டும் கண்ணாடி. எனவே சோதிடம் என்பது மனிதமனத்தைப் பலவீனப்படுத்துவது. மூடநம்பிக்கையை வளர்ப்பது என்ற தவறான கருத்தை விட்டுவிட வேண்டும்.

மேடம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டுராசிகளும் சூரியன்முதல் கேதுவரையுள்ள ஒன்பது கிரகங்களும் அஸ்வினி முதல் ரேவதி வரையுள்ள இருபத்தியேழு நட்சத்திரங்களும் சோதிடத்தின் அடிப்படை அம்சங்களாகும். ராசி என்பது சந்திரனின் இருக்கையைக்கொண்டு கணக்கிடப்படுவது. கிரகங்கள் ராசியை ஆள்பனவாகும். பிறக்கும் போது சூரியன் நிற்குமிடம் லக்கினமாகும். ராசிகள் பன்னிரண்டு. ஆகையால் ஒவ்வொரு ராசிக்கும் இரண்டேகால் நட்சத்திரங்களின் ஆதிக்கம் உண்டு. ஒவ்வொரு நட்சத்திரமும் நான்காகப் பிரிக்கப்பட்டு அவை முறையே முதலாம்பாதம், இரண்டாம்பாதம், மூன்றாம்பாதம், நான்காம்பாதம் எனக் குறிக்கப்படுகின்றது.

நவக்கிரகங்கள் ராசிகள் நட்சத்திரங்கள் சோதிடத்தின் மூலம் எவற்றை அறியலாம்? ஒருவரது உடலமைப்பு, குணாதிசயங்கள், அவருக்கு வாய்க்கப்போகும் களஸ்திரம். வாய்க்கப்போகும் நல்ல காலம். அதைப் பயன்படுத்தி எவ்வாறு உயரலாம். வரக்கூடிய துன்பங்கள் பற்றி முன்கூட்டியே கூறி எச்சரிக்கை செய்யலாம். மற்றும் ஏற் படக்கூடிய நோய்பற்றி அறிவித்து அதன் கடுமை பற்றியும் குணமாவதற்குப் பிடிக்கும் காலம் பற்றியும் தெளிவாகச் சொல்லமுடிவதுடன் எந்தச் சமயங்களில் சிகிச்சை மேற்கொண்டால் பூரணசுகம் அடையலாம் என்பதையும் வாழ்வில் ஏற்படக்கூடிய விபத்துக்கள், அதிஸ்டங்கள், அதிஸ்டலாபச்சீட்டில் வெற்றிபெறுதல் என்பன பற்றியும் கூறமுடியும். எனவே சோதிடம் என்பது வாழ்க்கையின் விளக்கம் எனலாம். மாளிகை வாழ்வு மண் குடிசை வாழ்வாகும். காரில் சென்றவர் கால் நடையாகச் செல்வதும் கிரகங்களின் ஆதிக்கப்பலன் எனலாம். நளமகராசன் சனீஸ்வரனால் பட்டபாடு அனைவரும் அறிந்ததே.



சோதிடக்கலையையும் சோதிடரையும் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் பழக்கம் நம்மிடமிருந்து இன்னும் விடுபட்டுப் போகவில்லை. சோதிடக்கலை தோன்றிய இந்திய மண்ணிலேயே அது அவமதிக்கப்படுகின்றது. ஆனால் மேலை நாடுகளில் சோதிடம் பல் கலைக்கழகங்களில் ஒரு பாடமாக அமைக்கப்பட்டு பயிற்சியும் போதனைகளும் தரப்படுகின்றன.

நவீன வைத்திய முறையான அலோபதி (Allopathy) முறையை பயன்படுத்தி நோயைக் கண்டறிதற்கு முன்னரே தர்மே மீற்றர், எக்கோ ஸ்ரெதெஸ் கோப் பாவிக்கப்படு முன்னரே ஜாதகத்தின் மூலம் நோயைக் கண்டறிந்தனர் சோதிடர்கள். ஜாதகத்தில் கிரகங்களின் நிலையைக் கொண்டுதான் எதிர்காலம் அமையும். எதிர்காலம் என்பது ஆரோக்கியத்தையும் உள்ளடக்கியதாகும். ஆரோக்கியம் எப்படி இருக்கும் என்பதை கிரகங்களின் அமைப்பு சொல்லிவிடும். எனவே தான் ஜாதகத்தைக் கொண்டு சிகிச்சையளிக்கும் முறை முன்னாளில் பின்பற்பட்டது.

உடலாரோக்கியத்திற்கும் நோய்வாய்படுதற்கும் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் கிரகங்கள் எப்படிக் காரணமாக அமையலாம் என்ற கேள்வி எழலாம். இதற்கு ஓர் உதாரணம் கூறலாம். சூரிய கிரகணத்தின் போது சாப்பிடக்கூடாது என்று சொல்கின்றோம். ஏன்? சக்தியில் நிலைக்களனான சூரியன் நமக்குத் தேவைப்படும் சக்தியை அளிக்கின்றது. சூரியனின் சக்தி நமது அவயவங்களின் இரசாயன செயல்பாடுகளுக்கு முக்கிய காரணமாகும். கிரகணம் ஏற்படும் போது சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமியில் பதியாது. அச்சமயம் நமது சக்தியின் அளவும் குறையும்.

இந்தவகையில் நமது ஆகாரங்களை ஜீரணிக்கும் சுரப்பிகள் முழுவேகத்தோடு இயங்கமுடியாது. எனவே சாப்பிட்ட உணவு சரியாக ஜீரணமாகாது. இதனால் தான் கிரகணங்களின் போது சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

வாழ்க்கையின் மேல்நிலையும் கீழ்நிலையும் கிரகங்களின் உச்சநிலை, நீசநிலை, இதர கிரகங்களுடன் சேர்ந்திருக்கும் நிலை, தசா புத்தி என்பவற்றில் தங்கியிருப்பதனாலும் கிரகங்கள் மக்களை ஆட்டிப்படைத்து, வாட்டி வதைத்து உச்சநிலையைக் காட்டி புகழ் ஈட்டிவிடுவதாக இருந்தாலும் சோதிடத்தைத் துச்சமாக கருதுவோரும் வாழவே செய்கிறார்கள். அடியவர்க்கு அவை அமைவாகவே நடக்கும் என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

'நாளும்கோளும் நலிந்தோர்க்கில்லை'
என்பது காதில் ஒலிக்கவே செய்கின்றது.


TUTORING
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)

Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.


FREE
ONE HOUR MATH CLASS

Call today to find out more!

- Grade 1-8: Math/Science/English
- Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
- Principles of Mathematics. Calculus. Vectors.
- Functions. Advanced Functions.
- University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY
Param Jyothi Academy
7393 Markham Road . Door #90
647.426.6329
Param Jyothi Academy


## ஆனந்தம் பெற்றிடுவோம்!




குடியரசு நாளதனில் குடியொழிக்க நினைந்திடுவோம்
அடிமைமனம் எமைவிட்டு அகன்றுவிட எண்ணிடுவோம்
திடமுடனே இந்தியாவை நிலைநிறுத்த முனைந்திடுவோம்
தீமைசெய்வார் மனந்திருந்த திட்டங்கள் வகுத்திடுவோம்!

அரசியலார் மனங்களிலே அறமோங்கச் செய்திடுவோம்
அசிங்கமுடை அரசியலார் அவைவிட்டு ஓட்டிடுவோம்
உரிமையொடு கடமைதனை உணர்த்தியே நின்றிடுவோம்
உள்ளமெலாம் சுதந்திரத்தின் உயர்கருத்தை விதைத்திடுவோம்!

காந்தியொடு காமராசர் வாழ்ந்தவிந்த நாட்டினிலே
காட்டாச்சி செய்வாரை கழுவேற்றி வதைத்திடுவோம்
நீதிசொன்ன திருக்குறளை நித்தமுமே படித்துநின்று
போதிப்போம் பொறுப்புடனே புனிதமெமை சேர்ந்தணைய!

சாதிபற்றிப் பேசாமல் சாதிப்போம் இமயமென
வாதிட்டுவாதிட்டு வைகத்தில் என்ன கண்டோம்
ஆதிக்கம் ஆணவத்தை அறவேநாம் துறந்துவிட்டு
அன்புகொண்டு அரவணைத்து ஆனந்தம் பெற்றிடுவோம்!



- எம். ஜெயராமசர்மா -

# கனேடிய மத்திய அரசின் ஓய்வூதிய திட்டங்கள்

## வினாவும் விடையும்

## கனடிய தகவல் தொடர் 282

சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



### Pension Plan by Canadian Federal Government

**A. எந்தெந்த வகையான கனடிய மத்திய அரசின் ஓய்வூதிய திட்டங்களிலிருந்து பணம்பெறலாம்? அவற்றினை பெறுபவருக்கு தேவையான தகைமைகள் யாவை?**

கனடிய மத்திய அரசினால் வழங்கப்படும் ஓய்வூதிய திட்டங்களில், அடிக்கடி சில மாற்றங்கள், திருத்தங்கள் என காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அடிப்படையில் தற்போது பின்வருமாறு வகுக்கலாம்.

1. CPP (Canadian Pension Plan)
2. OAS (Old Age Security Plan)
3. GIS (Guranteed Income Supplement)
4. Allowance

1. கனடிய ஓய்வூதிய திட்டம். CPP (Canadian Pension Plan)
தங்கள் மாத சம்பளத்திலிருந்து சிறுதொகை கழிக்கப்பட்டு, அவை ஒரு முதலீட்டு திட்டத்தில் வளர்த்து எடுக்கப்பட்டு, இறுதிக் காலங்களில் அம் முதலீட்டு திட்டத்திலிருந்து மாத வருமானம் வழங்கப்படுகின்றது. இது வரி செலுத்த வேண்டிய ஒரு வருமானமாகும். (ஆனால் கியூபெக் மாகாணத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் இவற்றுக்கு பதிலாக அவர்களுக்கு என பிரத்தியேகமான திட்டம் உண்டு) இவ் ஓய்வூதிய முதலீட்டு திட்டத்திற்கு தமக்கு தொழில் வழங்கும் நிறுவனத்தின் பங்களிப்பும் உண்டு. ஆகக் குறைந்தது வருடம் $3500 டொலர் இச் சேமிப்பு திட்டத்தில் முதலிட வேண்டும்.

65 வயதினை அடையும்போது இதிலிருந்து மாத வருமானம் பெற விண்ணப்ப படிவங்களை மத்திய அரசே அனுப்பி வைக்கும். குறைந்தது மாதம் $653.27 இலிருந்து ஆக கூடுதலாக $1114.17 வரை தற்போது, தங்கள் சேமிப்பு முதலீட்டு கணக்கில் உள்ள தொகையினை அடிப்படையாக வைத்து வழங்கப்படுகின்றது. விரும்பினால் 60 வயதினை அடையும் போதே இத்திட்டத்திலிருந்து மாத வருமானம் பெற விண்ணப்பிக்கலாம். (Partial Pension) ஆனால் வழங்கப்படும் மாத கொடுப்பனவு குறைத்து வழங்கப்படும். இவ் ஓய்வூதிய பணம் பெறுபவர் விரும்பினால் தொடர்ந்து தொழில் செய்யலாம். எதுவித தடையுமில்லை.

**இவ் அரச முதலீட்டு திட்டம் மேலும் இரு சந்தர்ப்பங்களில் கை கொடுக்கின்றது.**
அ. தொழில் செய்து வாழ்ந்து வரும் இளமைக் காலங்களில் துர்அதிஸ்டவசமாக மரணத்தினை எதிர்கொண்டாலும் குடும்பத்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை பண வருமானத்தினை வழங்குகின்றது. (Survivor & Children and Death Benefits)
ஆ. வாழ்வில் நிரந்தரமாக தொழில் செய்ய முடியாத அளவுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டாலும் மாத வருமானம் இதிலிருந்து பெறலாம். (CPP - Disability Benefits)
ஆனால் ஒரு நிபந்தனை. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு சலுகையினையும் பெறவேண்டுமானால் பத்துவருடங்கள் தொடர்ந்து கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும்.

2. முதுமை வயதின் பாதுகாப்புத் திட்டம். (Old Age Security Plan)
இத்திட்டத்திலிருந்து மாத வருமானத்தினை பெற வேண்டுமாயின் சில நிபந்தனைகள்!
- 65 வயதினை கடந்து இருக்க வேண்டும்.
- சுமார் பத்து வருடங்களுக்கு குறையாது கனடாவில் வாழ்ந்திருக்க வேண்டும்.
- விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது, கனடாவின் குடிமகன் அல்லது நிரந்தர குடிவரவாளர் அந்தஸ்தில் இருக்க வேண்டும். (சுப்பர் விசா, தற்காலிக தொழில் விசா, மாணவர்களுக்குரிய விசா என்ற நிலையில் இருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியாது)
- ஏனைய நாடு ஒன்றிலிருந்து இதனை பெறவிரும்பினால் மேலதிக தகைமைகளுடன் குறைந்தது இருபது வருடங்கள் கனடாவில் குடியிருந்திருக்க வேண்டும்.
- தனி நபர் ஒருவருக்கு $585.49 மாதம் தற்போது வழங்கப்படுகின்றது. ஆனால் அவரது வருட வருமானம் $121,314க்கு மேலாக இருந் தால் இத் திட்டத்தின் கீழ் பெற்ற வருமானம் திருப்பி செலுத்த வேண்டி வரலாம்.

பல முதியவர்களுக்கு 'முதுமை வயதின் பாதுகாப்பு திட்டம்' (Old Age Security Plan) என்னும் பிரிவிலிருந்து பெறும் வருமானம் போதாது என்ற நிலையில் இருப்பவர்களுக்கே மேலதிகமாக 'உறுதியான வருமான சேர்ப்பு' (Guaranteed Income Supplement) என்னும் பிரிவிலிருந்து வழங்கப்படுகின்றது. கனடாவினை விட்டு ஏனைய நாடுகளில் சென்று வாழ்ந்துவந்தால் இந்தப் பிரிவிலிருந்து எது விதமான வருமானமும் கிடைக்காது.

3. உறுதியான வருமான சேர்ப்பு (Guaranteed Income Supplement)
முதியவர்களின் ஓய்வூதிய வருமானம் அவர் களின் அன்றாட வாழ்வுக்கு போதாது என்ற தொரு நிலைமையில் இப்பிரிவிலிருந்து ஒரு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இவ்வரு மானத்திற்கு வரியும் செலுத்தத் தேவையில்லை.

தனியொருவருக்கு மாதம் ஆக கூடுதலாக $856.39 வரை தற்போது வழங்கப்படுகின்றது. முதுமையான தம்பதிகள் இருவரும் சேர்ந்து ஓய்வூதிய வருமானம் பெறுகின்றவர்களாக இருந்தால் ஆளுக்கு $526 டொலர் வரை கிடைக்கும். ஆனால் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் தங்கள் வருமானங்களை பரி சீலனை செய்தே இப்பிரிவிலிருந்து பணம் வழங்குவதா இல்லையா என்பது தொடர்ந்து முடிவு செய்யப்படும். அதாவது தனி ஒரு முதியவராக இருந்தால், அவரது வருமானம் வருடம் $17,760க்கு மேல் இருக்கக் கூடாது. குடும்பமாகவிருந்தால் தம்பதிகளின் கூட்டான வருமானம் $23,472க்கு மேல் இருக்கக் கூடாது.

மேலே போகும் ஒவ்வொரு $2 டொலருக்கும் $1 டொலர் என்ற விகிதத்தில் குறைக்கப்படும். தம்பதிகளாக இருந்தால் மேலும் அதிகமாக குறைக்கப்படும். பத்து வருடங்கள் கனடாவில் தொடர்ந்து வாழ்ந்து வரும் கனேடிய குடிமகனாக அல்லது குடிவரவாளராக இருந்தால் மட்டுமே மேலே குறிப்பிடப்பட்ட
- முதுமை வயதின் பாதுகாப்பு திட்டம் (Old Age Security Plan) மற்றும் அந்த வருமானம் போதாது என்றால்
- 'உறுதியான வருமான சேர்ப்பு' (Guaran-teed Income Supplement)
என்ற முதியோர் வருமானங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

4. உதவித் தொகை சலுகை (Allowance Benefits)
தம்பதிகள் ஒருவர் 'முதுமை வயதின் பாதுகாப்புத். திட்டம்' (Old Age Security Plan) மூலம் வருமானம் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த நிலைமையில் தம்பதிகள் மற்றவர் 65 வயதினை அடையவில்லையானால் 'முதுமை வயதின் பாதுகாப்புத் திட்டம்'(Old Age Security Plan) மூலம் அவர் வருமானத்தினை பெறமுடியாது.
ஆனால் 60-64 வயதுக்கும் இடையில் அவர் இருந்தால் மேற்குறிப்பிட்ட 'உதவித்தொகை' (Allowance Benefits) மூலம் சிறு வருமானத்தினை பெறலாம். தற்போது உள்ள நிலவரப்படி இவ்வயதிற்கு இடைப்பட்ட தம்பதிகள் மற்றவருக்கு $526.42 மாதம் வழங்கப்படுகின்றது. ஆனால் இந்தத் தொகையினை பெற அவர்கள் இருவரின் கூட்டு வருட வருமானம் $42,576க்குள் இருக்க வேண்டும்.

**B. 'முதுமை வயதின் பாதுகாப்புத் திட்டம்' (Old Age Security Pension) பெற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் தொழில் செய்யலாமா?**

தாரளமாக தொழில் செய்யலாம். அதற்கு கனடாவில் எதுவித தடையுமில்லை. ஓய்வூதியத் திட்டங்களின் பல்வேறு பிரிவுகளில் இருந்தும் வருமானம் பெற்றுக்கொண்டு இருக்கும் பலரும் தற்போது மேலதிக தொழில் செய்து அதிக வருமானத்தினை பெறுகின்றனர். ஆனால் சகல வருமானங்களும் வருட முடிவில் கனடிய வருமான வரி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பது கட்டாய நியதியாகும்.

அவ்வாறு சமர்ப்பிக்கும் போது மொத்த வருமானம் என்பது ஒரு எல்லையினை கடந்தால், தாங்கள் 65வயதுக்கு பின்னர் பெற்றுக்கொள்ளும் முதுமை வயதின் வருமானத்தின் (Old Age Security ) ஒரு பகுதி அல்லது சில நேரம் முழு தொகையினையும் திருப்பி அரசுக்கு செலுத்துமாறு கோரலாம். தற்போது மொத்த வருமானத்தின் எல்லை $121,314 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

(தொடர்ச்சி 33 ஆம் பக்கம்...)

Rising Scholars of Canada
"ignite your passion"
Grade 10 English Literacy Preparation
Ontario Secondary School Literacy Test(OSSLT)
Professional Guidance
Practice Tests, and Exam Tips
Please contact
Aparna B. Srikanthan
(Hons BSc., MEd.)
1585 Markham Road, Unit 213, Scarborough, ON. M1B 2W1
(416) 827- 2681
www.risingscholarscanada.ca
info@risingscholarscanada.ca

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



என் இனியவர்களே! விளம்பரத்துடன் சேர்ந்து எனது இனிய பொங்கல் வாழ்த்து!

7. துணிக்கைகள் காலம் (தொடர்ச்சி)

கிட்டத்தட்ட பேரண்டம் இப்போது எப்படி இன்றுள்ள நிலைக்கு வந்தது என்ற நிலையினை அறியக் கூடியதான நிலைக்கு நாங்கள் வந்துவிட்ட வேளையில் இன்னமும் விஞ்ஞானிகளின் மனதினை உறுத்துகின்ற ஒன்றிரண்டு விடயங்களைத் தெரிந்து கொள்வோம். இச்சந்தேகங்கள் உங்களுக்கும் கூட எழுந்திருக்கலாம்.

இன்று பேரண்டத்துள் காணப்படுகிற பொருட்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையானவை குவாச்சுக்கள் என்பது தெரிகிறது. எல்லாக் குவாச்சுகளும், கட்றோன்களாக இணைந்து அவற்றுள்ளும் நியூத்திரன்களும் புரோத்தோன்களும்தான் மிஞ்சிவிட்டனவா? ஏதாவது மிச்ச சொச்சமாக குவாச்சுகள் இல்லையா? ஏனெனில் பேரண்ட விரிவு குவாச்சுகளிடையேயான இடைத்தூரத்தையும் அதிகரிக்கச் செய்திருக்கும். அதனால் வலிந்தவிசையின் வல்லமை எல்லைக்கு அப்பால் குவாச்சுகள் தள்ளப்பட்டு தனியன்களாக இருக்கக் கூடியநிலை வந்திருக்கும். இன்னமும், ஒரு குவாச்சையும் அதன் முரண் குவாச்சையும் மிகவும் தொலைவிற்குத் தள்ளி அவை ஒன்றுடன் ஒன்று மோதிப் பொருளழிவுக்கு உள்ளாகி அழிந்து போகாமலும் இந்தப் பேரண்ட விரிவு ஆக்கியிருக்கும். அப்படியான நிலையில் பேரண்டத்துள் தனியனாகப் பல குவாச்சுகள் இருக்க வேண்டுமே? ஆனால் குவாச்சுகளில் ஒன்றுமே இன்று தனியனாக பேரண்டத்துள் இல்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். எப்படி அவை தனியனாக இல்லாமற் போயின?

குவாச்சுகள் பற்றி கருதுகோளும் விளக்கமும் வந்த பின்னராக இக்கேள்வியும் எழுந்தது. இன்று எவ்வளவு தங்கம் பேரண்டம் முழுவதிலும் உள்ளதோ அவ்வளவு தொகையிலாவது குவாச்சுகள் தனியனாகப் பேரண்டத்துள் இருக்க வேண்டும் எனச் சில விஞ்ஞானிகள் கணித்தும் கூறினார்கள். எப்படி ஒன்றுமே இல்லாது போயின என்பதற்கான விளக்கம் வேறு விஞ்ஞானிகளாற் கொடுக்கப்பட்டது. அவ்விளக்கம் இழைக் கொள்கையின் வழியில் பிறந்தது.

குவாச்சுகள் காந்தங்கள் போன்று தனி-முனைவுத் தன்மை இல்லாதவை. காந்தச் சட்டங்கள் எப்பொழுதும் வடமுனைவும் தென்முனைவும் கொண்டவையாகவே இருக்கின்றன. தனியாக ஒரு காந்த முனைவினைக் காணமுடியாது. காந்தச் சட்டத்தின் ஒரு முனைவு காந்த வடமுனைவாகவும் மறு முனைவு காந்தத் தென்முனைவாகவும் இருக்கும். ஒரே காந்தச் சட்டத்தில் இவ்விரு முனைவுகளும் இருக்கும். அந்தக் காந்தச் சட்டத்தை இரண்டு துண்டுகளாக உடைத்தால் அந்த இரண்டு துண்டுகளும் ஒன்று வடமுனைவுச் சட்டமாகவும் மற்றது தென்முனைவுச் சட்டமாகவும் ஆகிவிடாது. மாறாக இரண்டுமே வடமுனைவும் தென் முனைவும் கொண்ட இரண்டு காந்தச் சட்டங்களாக மாறிவிடும்.

குவாச்சுகளும் உண்மையில் இந்த தனி-முனைவு இல்லாத் தன்மையிலேயே சடத்தினைத் தம்முள் கொள்ளுகின்ற இயல்புடையவை. அதனால் ஒரு குவாச்சு தனியனாக வருகின்ற ஒருநிலைக்கு வருகின்ற போது தன்னை ஓர் இழையிற்கு ஒப்பாக்கி, தனது சடத்தினை பரப்பிக் கொள்ளும். அவ்விதம் குவாச்சின் சடம் பரம்புகையில் ஒரு பகுதி குவாச்சாகவும் மறுபகுதி முரண்-குவாச்சாகவும் ஆகிவிடும். இப்போது தனித்திருக்கும் குவாச்சு இரண்டு குவாச்சுகளாக மாறி ஒரு கட்றோன் தொகுதியாகிவிடும். இந்த குவாச்சு முரண்-குவாச்சு கட்றோன் ஈற்றிலே ஒன்றிணைந்து பொருளழிவுக்கு உள்ளாகி, சக்தியாக மாறிவிடும். இதனால்தான் புரோத்தோன்களுக்குள்ளும் நியூத்திரோன்களுக்குள்ளும் ஒழிந்திராத குவாச்சுகள் பேரண்டத்துள் இல்லாமற் போயினவென விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இது வெறுமனே ஒப்புதலுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கமல்ல. சிக்கலான கணித விளக்கங்களுடன் இதனைத் தருகின்றார்கள். இதைவிட இன்னொரு கருத்தும் உள்ளது. ஏற்றுக் கொள்வதற்கு சற்றுக் கடினமாக இருக்கும். கட்றோன்களாக இணையாத குவாச்சுகள் எங்களது பேரண்டத்துக்கு வெளியே கசிந்து எங்கேயோ தொலைந்து விட்டனவாம். இதிலே சிக்கல் என்னவென்றால், பேரண்டத்துக்கு வெளியிலே என்ன இருக்கின்றது, பேரண்டம் எதனுள் விரிவடைகின்றது என்பதெல்லாம் பெரும் புதிர். யாருக்குமே தெரியாத ஒன்று. ஆனாலும் குவாண்ரம் இயல்பினைக் காட்டிச் சில விஞ்ஞானிகள் இதனைச் சரியானது எனக் காட்டுகிறார்கள். ஏற்றுக் கொண்டால் ஏற்றுக் கொள்ளுங்கள் என்பது போல இருக்கின்றதல்லவா.

சரி, குவாச்சின் பிரச்சனையை விட்டு விட்டு அடுத்த பிரச்சனைக்கு வருவோம். பேரண்டத்தின் கால வளர்ச்சியில் இப்போது புரோத்தோன்கள் நியூத்திரன்கள் பற்றியே பார்த்துக் கொண்டு வருகின்றோம். அவற்றின் முரண் துணிக்கைகள் எங்கே? அவற்றிக்கு என்னவாச்சு என்ற கேள்விகள் எழுகின்றன. இன்று நாங்கள் காணுகின்ற பேரண்டத்தில் எங்கேயும் புரோத்தோன்களினதும் நியூத்திரன்களினதும் முரண் துணிக்கைகள் இல்லை. அது எப்படி அமைந்தது என விஞ்ஞானிகள் கூறுவதை இனிக் கவனிப்போம்.

பெருவீக்கத்தின் பின்னராகப் பேரண்டத்துள்ளே துணிக்கைகளும் முரண் துணிக்கைகளும் ஒன்றாகவே தோன்றின என்பது எங்களுக்குத் தெரியும். அத்துடன் ஒரு துணிக்கையின் அழிவுடன் அதன் முரண் துணிக்கையும் அழிந்து விடுகின்றதும் அறிந்த விடயமாகிவிட்டது. எனவே, எப்பொழுதும் துணிக்கையும் அதன் முரண்-துணிக்கையும் சம எண்ணிக்கையிலேயே பேரண்டத்துள் காணப்பட வேண்டும். அதாவது துணிக்கை, முரண்-துணிக்கைச் சமச்சீர் ஒன்று எப்பொழுதும் பேரண்டத்துள்ளே காணப்படும். ஆனால் பேரண்டத் தின் குறிப்பிட்ட வெப்பநிலையின் கீழ் துணிக்கை முரண்-துணிக்கைச் சமச்சீர் உடைகின்றது என விஞ்ஞானிகள் கணக்குக் காட்டுகின்றார்கள். அவர்களது சிக்கலான கணித விஞ்ஞான விளக்கங்களை விடுத்து முடிவினை மட்டும் தெரிந்து கொள்வோம்.



ஒருநிலையில் 1,000,000 முரண்-துணிக்கைகளுக்கு 1,000,001 துணிக்கைகள் வீதமாக பேரண்டத்துள் காணப்படத் தொடங்குகின்றன. இதுதான் அந்தச் சமச்சீர உடைவு. 1,000,000 துணிக்கைகளும் அவற்றின் முரண்-துணிக்கைகளும் ஒன்றிணைந்து பொருளழிவுக்குள்ளாகி முற்று முழுதாகச் சக்தியாக மாற, ஒரு துணிக்கை மட்டும் முரண் சோடியில்லாது நியூத்திரனாக அல் லது புரோத்தோனாகத் தனித்து விடுகின்றது. இப்படியாகப் பல நியூத்திரன்களும், புரோத்தோன்களும் முரண் சோடிகள் இல்லாது தனியன்களாக பேரண்டத்துள் விட்டு விடப்பட்டன. அவைதான் பின்னர் பேரண்டத்தின் இன்று காணப்படும் அத்தனை சடப் பொருட்களுக்கும் மூலமாயின.

இக்கருத்துகோளே சரியானது எனப் பல விஞ்ஞானிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. ஆனால் இன்னமும் ஒரு கருதுகோள் உள்ளது.

எங்களது பேரண்டம் மிகப்பெரியது. முற்றாகவே பார்த்து முடிக்கப்படாதது. நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கும் பகுதியின் பின்புறமும் பேரண்டம் பரந்திருக்கின்றது. எங்களால் பார்க்க முடியாத இப்பேரண்டப் பகுதிக்குள்தான் முரண் புரோத்தோன்களும் முரண் நியூத்திரன்களும் சிக்கியிருக்கின்றன என்கிறார்கள் சிலர். அல்லாமலும், அவை கூட சாதாரண புரோத்தோன்களும் நியூத்திரன்களும் போல் பொசித்திரன்களுடன் இணைந்து முரண் அணுக்களை உண்டாக்கி, அம்முரண் அணுக்களும் முரண் கோள்கள், முரண் விண்மீன்கள், முரண் கலக்சிகள் எனத் தோற்றுவித்துள்ளன என்கிறார்கள். மேலும், எங்களைப் போன்ற உயிரினங்கள் கூட அங்கே இருக்கலாம் என்பதும் அவர்களது கருத்தாக இருக்கின்றது. ஏனெனில் எங்களிற் காணப்படும் சாதாரண புரோத்தோன்கள், நியூத்திரன்கள் என்பவற்றிக்கும் முரண் நியூத்திரன்கள், முரண் புரோத்தோன்கள் உண்டல்லவா. அவை ஒன்றிணைந்து உண்டாக்கியவை தான் பேரண்டத்தின் மறுபுறம் உள்ள அத்தனையும் என்கிறார்கள்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் இக்கருத்தில் உள்ள சிக்கல் என்னவெனில், முரண் புரோத்தோன்கள், முரண் நியூத்திரன்கள் பொசித்திரன்கள் என்பவற்றை இயற்கை விசைகளுக்குள் கட்டி ஒரு முரண்-அணு இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனாலும் அவர்களது சிந்தனை ஓட்டம் இன்னமும் விரிவாகவே செல்கின்றது.

இப்படிப் பார்க்கையில் முரண்-புவி எனவொன்றும் பேரண்டத்தின் மறுபுறத்தில் இருக்கலாம். அங்கு என்னை, உங்களைப் போன்ற முரண்-மனிதர்களும் இருக்கலாம். இந்த முரண்-உலகமும் முரண்-மனிதர்களும் பார்ப்பதற்கு எங்களது புவியினைப் போலவும் எங்களது மனிதர்கள் போலவும் தான் இருப்பார்கள். ஒருவேளை முரண்-நானும், முரண்-நீங்களும் கூட அங்கு இருக்கலாம். அவர்கள் அச்சொட்டாக என்னைப் போலவும் உங்களைப் போலவும் தான் இருப்பார்கள். அப்படியான ஒருவரைக் கண்டால் நன்றாகக் கதையுங்கள், சுக பெலன்கள் பற்றி விசாரியுங்கள். ஆனால் கைகுலுக்கிக் குசலம் மட்டும் விசாரித்து விடாதீர்கள். ஏனென்று தெரியும்தானே. ஒருவேளை அவர் உங்களது முரண் ஆளாக இருந்து விட்டால் வில்லங்கமாகப் போய்விடும். துணிக்கையும் முரண்-துணிக்கையும் மோதுகைக்குள்ளானால் இரண்டும் அழிந்து சக்தி தோன்றுமல்லவா. அவ்விதம் நீங்களும் முரண்-நீங்களும் அழிந்து முற்றாகவே அங்கு சக்தி தோன்றிவிடும். எனவே உசாராக இருங்கள். எங்காவது அச்சொட்டாக உங்களைப் போலவே இருக்கும் ஒருவரைக் கண்டால், சற்றுத் தள்ளி நின்று கொள்வது நலமாக இருக்கும்.

இப்படியான முரண் மனிதர்களைக் காட்டும் விஞ்ஞானப் புனைகதைகள், திரைப்படங்கள் வந்துள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவற்றை வாசித்து, பார்த்து நீங்கள் ஆச்சரியப்பட்டும் இருக்கலாம். அப்பட்டமான பொய் எனவும் கருதியும் இருக்கலாம். இப்படியா புழுகுவது என்றும் கூடச் சிலர் முணுமுணுத்திருக்கலாம். ஆனால் அப்படியான திரைப்படங்களின் கதைகள் உண்மை பொய் என்பவற்றிக்கும் அப்பால், கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுவோம்.

தொடர்ச்சியை அடுத்த தடவையில் கூறுகிறேன், சரிதானே!

யோகா சோதிடம்



● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# அநாதையாக பிறக்கும் சால்மன் மீன்கள்



சுந்தரம் இந்திரராஜா

**The Salmon are born orphans**


ஆற்று நீரில் பிறந்து கடலை நோக்கிப் பயணித்து கடலில் வளர்ந்து திரும்பவும் பிறந்த இடமான ஆற்றுக்கு வந்து முட்டையிட்டு இறந்து போகிற ஒரு மீன் இனம் இருக்கிறது. கேட்க ஆச்சரியமாக இருக்கிறதுதானே! அதுதான் சால்மன் மீன் என்றொரு மீன் இனம். அதாவது உப்பு நீரிலிருந்து நன்னீருக்கான இந்தப் பயணம் கடலில் இருந்து ஆற்றை அடைய நீரோட்டத்திற்கு எதிராக ஆயிரம் மைல்களை நீந்தித் தாண்டிக் கூட நடைபெறுகிறது. தடுப்புக்கள், கற்பாறை மேடுகள், அணைக்கட்டுக்கள் பலவற்றை தாண்டி எதிர்நீச்சல் போட்டு ஏறி நீந்தி பிறந்த இடம் நோக்கிப் பயணிக்கின்றன. அவற்றின் உடல்களில் காயங்கள் கூட ஏற்படும். பயணம் ஆபத்துக்கள் நிறைந்தவை. கரடிகள் நதியோரம் நின்று பிடித்து விடும். நீரோடையில் நீர் குறைவானாலும் சரி, அளவுக்கதிகமான இரசாயனக்கழிவுகள், மாசுக்கள், இரைச்சல்கள் அதிகமானாலும் சரி, வெப்பம் அதிகரித்தாலும் சரி அவை இறந்து விடும்.

மனிதர்களின் மேம்பாட்டுக்காக ஆறுகளில் கட்டப்பட்ட அணைகள் சால்மன் மீன்கள் எளிதாக நீந்தி தன் பிறந்த இடங்களுக்குப் போய்ச் சேர்வதில் தடங்கல் ஏற்படுத்தியதால் சால்மன் மீன்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. மீன் பிடிப்பதை நம்பி வாழ்வோரின் வருமானமும் குறைய ஆரம்பித்தது. முதல் முதலாக பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த சிலர் சால்மன் மீன்கள் அணைகளைத் தாண்டி தன் பிறந்த வீட்டிற்குச் செல்வதற்காக மரக் கட்டைகளைக் கட்டி படிகள் அமைத்து அதன் வழியே கொஞ்சம் நீரைச் செலுத்தி மீன்கள் ஏறிச் செல்வதற்காக மாற்றுப் பாதை அமைத்தனர். சமீப காலத்தில் சால்மன் மீன்கள் ஏறிச் செல்வதற்காக அணைகளின் பக்கத்தில் கொன்கிரீட்டிலான படிக் கட்டுகளை (Concrete steps-Fish ladder) அமைக்க ஆரம்பித்துள்ளனர். இது மட்டும் அல்ல, சில இடங்களில் மின்சாரத்தினால் இயங்கும் மின் தூக்கிகளையும் (Elevators) அமைத்துள்ளனர். இவ்வாறெல்லாம் சால்மன் மீன்கள் பிறந்த வீடு செல்ல வழி அமைத்துக் கொடுப்பது முற்றிலும் வியாபார நோக்கினால் மட்டுமே என்றாலும் அவை சால்மன் மீன்கள் இவ்வுலகில் இருந்து மறைந்து விடாமல் இருக்க உதவுகின்றன.

பறவைகள் தன் இனப்பெருக்கத்திற்காக ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்கிறது. இதுபோலவே மீன் குஞ்சுகளும் தமது தாய் எங்கே முட்டையிட்டதோ அதே இடத்திற்கு முட்டையிடுவதற்காக துல்லியமாக வந்து சேருகின்றன. பெண் மீன்கள் தங்கள் வாலினால் நீருக்கடியில் பள்ளம் தோண்டி அங்கே சிறியகூட்டை உருவாக்கி அதில் ஆயிரக்கணக்கில் முட்டையிடுகின்றன. அதன் பின்னர் அங்கே வரும் ஆண் மீன்கள் தங்கள் விந்தை அந்த முட்டைகள் மீது விசிறியடித்து, குழியை மூடி விடுகின்றன. நீண்ட காலம் கடல் நீரில் வாழ்ந்து பழகியதாலும் வாழ முடியாமல், அதோடு தனது நீண்ட பயணத்தால் களைத்துவிட்டதாலும் திரும்பவும் கடலுக்கு செல்ல மனமில்லாமல் முட்டையிட்ட களையோடு ஆற்றங்கரைகளில் இறந்து போகின்றன. தந்தையும் அவ்வாறே இறந்து போகிறது.

வாழ் உயிர் இனங்களுக்கும், பறவைகளுக்கும், மனிதனுக்கும் இரையாகி விடுவதால் சுமார் பத்து சதவீதமே கடலைச் சென்று அடையும்.

மீன் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்த பின் முழு வளர்ச்சி அடைய சுமார் ஒன்று முதல் மூன்றாண்டுகள் எடுத்துக் கொள்கின்றன. பின்னர் அவை கடலை நோக்கித் தன் பிரயாணத்தைத் தொடங்கும். அவ்வாறு பயணிக்கும்போது அவை சிலகாலம் சற்றே உப்பு நீராலான இடங்களில் (in brackish waters) வசிக்கும். அந்த நாட்களில் அவற்றின் உடலில் நல்ல தண்ணீரில் பிறந்த அவை உப்பு நீரில் வாழ்வதற்கான மாற்றங்கள் ஏற்படுகின்றன. கடலை அடைந்த சால்மன் மீன்கள் சுமார் நான்கு ஐந்து ஆண்டுகள் பல ஆயிரம் மைல்கள் கடலில் சுற்றித் திரிகின்றன.




Pacific Salmon Species

தனது பெற்றோரைப் பார்க்காமலே பிறக்கும் சால்மன் குஞ்சுகள் மீண்டும் சூழற்சியைத் தொடங்குகின்றன. ஆற்று நீரில் வாழ்வதற்குத் தகுந்த உடலமைப்போடு பிறந்த குஞ்சுகள் கடலை நோக்கிப் பயணிக்கின்றன. சிறிதுகாலம் முகத்துவாரத்தில் வசிக்கின்றன. உப்பு நீர் பழகியதும் கடலுக்குச் சென்று இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரை வாழ்கின்றன.

சால்மன் மீன்கள் குஞ்சுகளாக இருந்த போதில் முதன்முதலாக ஆற்றிலும் கடலிலும் பயணித்த பாதையை மறுபடி தன் பிறந்த வீட்டிற்குச் செல்வதற்காக அதே பாதையை மறுபடி எப்படி கண்டுகொள்கிறார்கள் என்று ஆய்வு செய்து ‘பூமிக் குரிய காந்தப்புலத்தை வழிகாட்டியாக பயன்படுத்துகிறது’ என்ற எடுத்த முடிவை, ஒரெகன் மாநில பல்கலைக்கழகத்தின் ஆய்வுத் தலைவர் விஞ்ஞானி நேதன் புட்மன் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

சால்மன் மீன் பல ஆயிரம் முட்டைகளை இட்டாலும் அவற்றில் நூற்றுக்குத் தொண்ணூறு குஞ்சுகள், மீன் உண்ணும் கடல்


அட்லாண்டிக் சால்மன், பசிபிக் சால்மன் என்ற இரு சமுத்திரங்களில் வாழும் இனங்கள் உண்டு. அட்லாண்டிக் சால்மனில் வட அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் பால்டிக் என மூன்று வேறுபட்ட கடல்களில் வாழ்வதால் அக்கடலின் பெயர் கொண்டு அழைக்கிறோம். அட்லாண்டிக் சால்மன்கள் துரதிருஷ்டவசமாக அளவுக்கு அதிகப்படியான மீன்பிடித்தலாலும், காலநிலை மாற்றங்களினாலும், மற்றய கடல்வாழ் இனங்களாலும் அச்சுறுத்தப்பட்டு இன்று அழிந்து போகும் நிலையில் உள்ளன. இந்த அட்லாண்டிக் சால்மன் இனம் பண்ணை முறையில் வளர்க்கப்பட்டு விற்க ஆரம்பித்து விட்டார்கள். 90 வீதம் வட அமெரிக்கா, கனடா முழுவதும் விற்பனையாவது அட்லாண்டிக் சால்மன் இன மீன்கள். பண்ணை முறையில் வளர்க்கப்பட்ட அட்லாண்டிக் சால்மனின் சதை கொழுப்பு மிக்கதாய் தோற்றமளிக்கும். இதற்குக் காரணம் “சிவப்பு” சாயமிடப்படுகிறது. இவற்றைப் பிள்ளைகளுக்கு கொடுப்பதை தவிர்க்கலாம். கடலில் பிடிபடும் சால்மன் மீன்களை, காட்டு சால்மன் (Wild Salmon) பெயர் கொண்டு அழைக்கிறோம்.

இவை குளிரான கடல் நீரைக் கொண்ட அலெஸ்கா மாநிலத்தில் கிடைக்கிறது. இயற்கையாகவே சிவப்பு நிறம் கொண்டவை, விலையும் அதிகம், உடலுக்கு கூடுதல் நன்மைகள் தருவன. அனைவருக்கும் நல்லது. வளர்க்கப்பட்ட அட்லாண்டிக் சால்மனிற்கும் மற்றும் காட்டு பசிபிக் சால் மனிற்கும் இடையே இலகுவில் வேறுபாடு தெரியாது.

அண்மையில் மரபணு மாற்றப்பட்ட சால்மன் மீன்கள் நுகர்வுக்கு கனடாவில் ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ளது. மரபணு மாற்றம் செய்து 36 மாதத்தில் வளரும் மீன்கள் 18 மாதங்களிலே வளர்ந்து விடுகிறது. விரைவில் வளர்வதால் நிறைகள் கூடியவை. மரபணு மாற்றப்பட்ட சால்மன் மீன்கள் பண்ணை முறையில் வளர்க்கப்படுகின்றன. இயற்கையாக வளரும் சால்மன் ஒரு வருடத்தில் சில மாதங்களே வளரும், ஆனால் சமுத்திர விலாங்கு மீன் (Ocean Pout Eel) என்ற மற்றொரு மீனில் இருந்து மரபணுவை சேர்த்து இந்த மீனை உருவாக்கி உள்ளனர். வளர்க்கப்பட்ட அட்லாண்டிக் சால்மனிற்கும் மற்றும் காட்டு அல்லது இயற்கை பசிபிக் சால்மனிற்கும் மரபணு மாற்றப்பட்ட சால்மனிற்கும் இடையே வேறுபாடு காண்பது கடினம். வணிக லேபிள்களை நம்ப வேண்டியுள்ளது.

பசிபிக் சால்மன் மீன்களில் ஆறு வகைகள் உள்ளன. வட அமெரிக்கா (அலாஸ்கா) மற்றும் கனேடிய மேற்கு கரையோரங்களில் ஐந்து வகை பசிபிக் சால்மன் மீன்கள் கிடைக்கின்றன. அவை:

1. சம் சால்மன் (Chum Salmon) மறு பெயர்கள்: Silverbrite Salmon/ Keta Salmon/ Dog Salmon
2. சோக்கை சால்மன் (Sockeye Salmon) மறு பெயர்கள்: Red Salmon
3. கிங் சால்மன் (King Salmon) மறு பெயர்: Chinook Salmon
4. சில்வர் சால்மன் (Silver Salmon) மறு பெயர்: Coho Salmon
5. பிங்க் சால்மன் மறு பெயர்கள்: Pinky or Humpback Salmon




உங்கள் கைவிரல்கள் கொண்டு இந்த ஐந்து இனங்களை ஞாபகப்படுத்தி வைத்துக்கொள்ளலாம்.

1. உங்கள் கட்டைவிரல் - Chum Salmon!

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# தோல்...

13 ஆம் பக்கத்தொடர்ச்சி

மாறுபடலாம். சிலருக்கு 5-6 வாரங்கள் கதிரூட்டல் செய்ய நேரிடும். புற்றுநோய் பரவியிருந்தால் பல சிகிச்சைகள் தேவைப் படலாம். முதிவர்களுக்கு கதிரூட்டல் முறையே சிறந்தாகும். தற்போது விசேட கருவிகள் மூலம் புற்றுநோய் உள்ள பகுதிக்கு மட்டுமே கதிர்வீச்சு செய்ய முடிகிறது.

புற்றுநோய் 4 நிலைகளாக உணரப்படுகின்றன.

நிலை 1- என்பது புற்றுநோயின் அளவு தோலில் 2 செ.மீக்கு குறைவாக உள்ளது. வேறு உறுப்புகளுக்கு பரவியிருக்காத நிலை.


நிலை 2- என்பது தோலில் புற்றுநோயின் அளவு 2 செ.மீற்றக்கு மேல் உள்ளது. வேறு உறுப்புகளுக்கு பரவாத நிலை.

நிலை 3- தோல்புற்று நோய் லிம் நோட்ஸ் (நெறிக்கட்டு) திசுகளுக்கு பரவுதல்.

நிலை 4- புற்றுநோய் பிற உறுப்புகளுக்கும் பரவியிருத்தலாகும்.

உலகில் உள்ள தோல் புற்று நோய்களில் 80-90 வீதம் ஊதா கதிர்வீச்சுக்களால் ஏற் பட்டதாகும். கனடாவில் ஒவ்வொரு வருடமும் 80,000 பேர் தோல் புற்றுநோய்க்கு உள்ளா கின்றனர். கனடாவில் 15-29 வயதுப் பெண் களுக்கு மெலனோமா புற்றுநோய் இருப்ப தாக அறியப்படுகிறது. 2012இல் 5800 பேர் மெலனோமா புற்று நோய்க்கு உட்பட்டு 970 பேர் இறந்து போயினர். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் உலகில் கூடிய புற்றுநோயாளர்கள் உளர். அதாவது வெள்ளை நிறத்தவர்கள் கூடுதலாக உள்ள நாடுகளில் இப்பாதிப்பு அதிகமாக ஏற்படுகிறது.

கனடாவில் Skin Cancer Canadian Derma tology Association, Skin Cancer Founda tion என்பன இந்நோய்க்காக உதவுகின்றன.



தோல் புற்றுநோயில் தோல் மாற்று சிகிச்சை (Reconstruction) இடம்பெறுகிறது. முதலில் உள்ள நிலைக்கு தோலை மாற்றுவதே இச்சிகிச்சையின் நோக்கமாகும். முகமாற்று சிகிச்சை மிகவும் சிக்கல் வாய்ந்ததாகும். சிறிய பிரச்சினை இருந்தால் மாற்றுவது இலகு. ஆனால் பெரிய பிரச்சினை என்பது மாற்றுவது கடினமாகும். வேறு பகுதியி லிருந்து பெறப்பட்ட தோல் பொருத்தப்படல் வேண்டும். வயிறு அல்லது துடையிலிருந்தே தோல் பெறப்பட வேண்டும்.

தோல்புற்று நோய் வராதிருக்க சில நடவடிக் கைளை எடுக்க வேண்டும். சூரிய கதிர்கள் தாக்காத உடைகளை அணிதல், உடலில் சூரிய வெப்பத்திற்கு எதிரான கிறீம் பூசப்பட வேண்டும். சொண்டுகளிலும் கிறீம் பூசப்பட வேண்டும். சிறுவர்களை பெற்றோர்கள் அவதானிக்க வேண்டும். வைத்தியரிடம் ஆலோசனை பெற்று சூரியக் கதிர்கள் தாக்காத உயிர்ச்சத்துணவுகளை உண்ண வேண்டும். உயிர்ச்சத்து 'D' எப்போதும் சிறப்பானது. இவ்வகையான உணவுகளை சாப்பிடுவது நல்லது.

# அநாதையாக...

17 ஆம் பக்கத்தொடர்ச்சி

2. உங்கள் சுட்டிக்காட்டி விரல் - Sock- eye Salmon or Red Sockeye Salmon!
3. உங்கள் நடு நீண்ட விரல் - King Salmon or the largest Chinook Salmon!
4. உங்கள் மோதிர விரல் - Silver ring.... for a Silver Salmon or Coho Salmon!
5. உங்கள் இளஞ்சிவப்பு விரல் - It's the Pinky Salmon!

முதல் மூன்று வகைசால் மீன்கள் சிறந்ததாக கருதப்படுகிறது. மிகவும் விலை உயர்ந்தவை. 30 இறாத்தல் தொடக்கம் 97 இறாத்தல் எடை வரையில் வளரும். இவை உங்கள் விருப்பப்படி சமையல் செய்து சாப்பிடலாம்.



கொழுப்பு (ஓமேகா-3) கூடியவை. புகை யினால் (Smoked Salmon) பதனிடப்பட்டு கிடைக்கிறது. முதல் மூன்று வகை சால்மன் களிலிருந்து எடுக்கப்படும் ஓமேகா- 3யை காட்டு சால்மன் எண்ணை (Wild Salmon Oils) என்போம். மருந்தகங்களில் கிடைக்கும் மற்றய ஓமேகா-3 எண்ணைகளை விட ஆரோக்கியத்திற்கு மிகச்சிறந்தது.

2ஆம் வகை சிவப்பு சோக்கை சால்மன் அடர்த்தியானதும், ருசியானதும் மற்றும் அழகானதும் ஆகும். ஜப்பானிய உணவான சுஷி செய்வதற்கு பாவிக்கப்படுகிறது.

4ஆம் வகை சராசரியாக 10 இறாத்தல் எடை வரையில் வளரும். சிறிய மீனான-தால் கிறிலில் (BBQ) வாட்டிச் சாப்பிட உகத்தது. ரின்களில் அடைத்தும் விற்பனை செய்கிறார்கள்.

5ஆம் வகை சராசரியாக 3 முதல் 5 இறாத் தல் எடை வரையில் வளரும். இளஞ்சிவப்பு சால்மன் இலகுவாய் பிடிபடுவதாலும் தொகையாகக் கிடைப்பதாலும் ரின்களில் அடைத்து எல்லா நாடுகளுக்கும் விற்பனை செய்கிறார்கள். கொழுப்பு (ஓமேகா-3) குறைவானது. அனைத்து வகை பசிபிக் சால்மன் மீன்களின் முட்டைகள் "ரெட் கேவியர் (Red Caviar)" என அழைக்கப் படுகிறது. மிகுந்த மதிப்புப் கொண்டன. ரின்களில் அடைத்து எல்லா நாடுகளுக்கும் விற்பனை செய்கிறார்கள். ஒரு தனி மதிப்புக்கொண்ட சத்தான உணவு. விலையும் அதிகம்.



Math Tutorial358

Answers to tutorial 357

1)The scalar equation of the plane having x –intercept -1 ,y-intercept 2 , z- intercept 3 is x/-1+y/2 +z/3=1 or 6x-3y -2z +6 =0.The distance from A (1 ,-2 ,-2 )to this plane is

$d = (6+6+4+6)/\sqrt{(36 + 9 + 4)} = 22/7$

2)-2x +y +z =k+1........(1)

Kz+z=0........................(2)

Y +kz =0.......................(3)

(1) –(3) :-2x +z _KZ =k+1 ......(4)

(2) 2x(2) +kx (4) :2z +kz $-k^2z$ =k(k+1)

(3) $(k^2$- k -2 )z =-k(k+1)

(4) (k-2)(k+1)z =-k(k+1)

A (1) if k=2 0z=-4 and there will be no solution

(11)if k≠2 ,k≠-1 ,z= (-k)/(k-2) and the system will have exactly one solution

Tutorial 358

Questions

1)Consider 2 lines with equations (x+8)/1=(y+4)/3 =(z-2)/1 and (x,y,z) =(3 ,3 ,3,)+t(4 ,-1 ,-1 ) Show that the lines are perpendicular?

2) Find the coordinates of the intercepts of the circle whose equation is $x^2+y^2$-6x - 2y +6 =0

3)Find the length of the common chord of the two circles whose equations are $x^2+y^2$ =4 and $x^2 +y^2$-6x +2 =0

4)A computer password must have eight symbols.These symbols can either be upper or lower case letters ordigits from 0 to 9 , and any symbols cab be used repeatedly

a)How many passwords can be fprmed?

b)How many passwords can be formed that start and end with a digit

c)How many passwords can be formed with no repeated symbols?

By Mr S.F.Xavier(Teacher)tel 6473409490/4167322228

# இன்னல் நீக்கும் இயற்கை - 17



- அகணி -
authorakani@gmail.com

நாங்கள் சமையலில் குறிப்பாகப் பொங்கல், கேசரி போன்றவற்றைச் செய்யும்பொழுது ஏலக்காயும் (Cardamom) சேர்த்துக் கொள்கின்றோம். இதனை வாசனைக்காக மட்டுமே பொதுவாகச் சேர்த்துக் கொள்கின்றோம் என்று உங்களில் பலரும் கருதக்கூடும். இன்று ஏலக்காயில் உள்ள மருத்துவ குணங்களைப்பற்றி எனது ஆய்வில் கிடைத்த தகவலை இந்தக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையில் தமிழக என்எஸ் 7 ரிவி என்ற இணையத்தள ஒலிபரப்பில் வைத்தியரட்ணம் ஆரோக்கிய சாலையைச் சார்ந்த சித்த மருத்துவர் டாக்டர் செல்வசண்முகம் அவர்கள் ஏலக்காய் பற்றிக் குறிப்பட்ட கருத்துக்களைக் கேட்க முடிந்தது. அவர் ஏலக்காய்த் தேன் பற்றிக் குறிப்பிட்டார். ஏலக்காயை நன்றாக இடித்து, பனைவெல்லம், இஞ்சிச்சாறு ஆகியவற்றுடன் கலந்து பாணி போன்று தடிப்பாக வரும்வரை காய்ச்சி வடித்து தேன்கலந்து சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள காற்று வெளியேறும் என்று கூறியிருந்தார். மேற்குறிப்பிட்டவாறு உருவாக்கும் பாகுவை “ஏலக்காய்த் தேன்” என்றும் குறிப்பிட்டிருந்தார். உடலுக்கு ஒவ்வாத பொருட்கள் உட்செல்வதால் அவற்றை வெளியேற்றும் முயற்சியில் உடல் ஈடுபடும் பொழுது வயிற்றில் காற்று வந்து விடுவதாகவும் அதனை வெளியேற்ற ஏலக்காய்த் தேன் பெரிதும் உதவும் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் ஏலக்காயை வாயில் போட்டுச் சாப்பிட்டு வந்தாலே சிறுநீரகம் போன்ற பகுதிகளை பாதுகாத்துக் கொள்வதோடு இனப்பெருக்க உறுப்புக்களின் தசைகளைப் பலப்படுத்தியும் கொள்வதாக டாக்டர் செல்வசண்முகம் குறிப்பிட்டிருந்தார். சில நேரங்களில் ஆண், பெண் இருவரிலும் குறைபாடு இல்லாமலே குழந்தைப்



பேறின்மை ( Infertility) ஏற்படுவதுண்டாம். இதற்கான காரணம் இனப்பெருக்க உறுப்புத்தசைகளின் பலவீனம், சிசுக்களின் பலவீனம் போன்றவையாகும். இந்தக் குறைபாட்டை ஏலக்காய் போக்கவல்லது என்று சித்த மருத்துவர் டாக்டர் செல்வசண்முகம் கூறியுள்ளார். ஏலக்காய்த் தேன் இதய ரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைசல்களை நீக்கவல்லது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஏலக்காயை வாசனைப்பொருட்களின் அரசி என்றும் அழைக்கப்படுவதுண்டு. அசைவ உணவுகளில் ஏலக்காய் தனிருசியைக் கொடுக்கின்றது. இதற்கு மேலாக ஏலக்காய் பசியைத் தூண்டி உடலின் செரிமான சக்தியைக் கூட்டுகின்றது. ஏலக்காயின் தோல், விதை இரண்டிலுமே மருத்துவத் தன்மை நிறைந்துள்ளது. ஏலக்காய் விதைகள் வயிற்று வலியைக் குறைக்கின்றன. உடல் வெப்பத்தைக் கூட்டி செரிமானத்தை அதிகப்படுத்தும். ஏலக்காயில் எளிதில் ஆவியாகக்கூடிய பல எண்ணெய்ப் பதார்த்தங்களும் உள்ளன. நரம்புத் தளர்ச்சி, சிறுநீரகத்தில் கல் பிரச்சினை, ஆஸ்துமா போன்ற வியாதிகளுக்கும் ஏலக்காய் தீர்வாக உள்ளன. வாய் துர்நாற்றம் போக்கவும், பாலுணர்வைத் தூண்டவும் ஏலக்காய் உதவும் என்று கூறப்படுகின்றது. மனஅழுத்தம் குறைவதற்கு ஏலக்காய் தேநீர் உதவும் என்று கூறப்படுகின்றது. வாந்தி, குமட்டல், மார்புச்சளி, நாவறட்சி போன்ற பிரச்சினைகளுக்கும் ஏலக்காய் தீர்வாக உள்ளதாம். ஏலக்காய் நான்கு அல்லது ஐந்து எடுத்து நசுக்கி அரை கிளாஸ் நீரில் போட்டுக் காய்ச்சி பனைவெல்லம் சேர்த்துக் குடித்தால் அதிக வெயிலில் அலைந்து திரிவதால் ஏற்படும் தலைச்சுற்றல் நீங்கும். இரண்டு ஏலக்காய்களை நசுக்கி புதினா இலைகளுடன் சேர்த்து அரை கிளால் நீரில் போட்டு காய்ச்சிக் குடித்தால் விக்கல் நின்று விடுமாம். ஏலக்காயைக் காயவைத்து அரைத்து அரை மேசைக்கரண்டி அளவு எடுத்து அரை கிளாஸ் நீர் விட்டுக் காய்ச்சி உணவுக்கு முன் குடித்து வந்தால் வாயுத் தொல்லை இருக்காதாம். குழந்தைகளுக்கு வாந்திப் பிரச்சினை ஏற்படும் பொழுது ஏலக்காய் பொடியைத் தேனில் கலந்து நாக்கில் மூன்று வேளையும் தடவி நிவாரணம் பெறலாம். மூக்கடைப்பால் அவதிப்படும் குழந்தைகள் ஏலக்காயை நெருப்பில் போட்டுவரும் புகையைச் சுவாசிக்கச் செய்தால் மூக்கடைப்பு குறையுமாம். சளி, இருமல் போன்ற பிரச்சினைகளுக்கும் ஏலக்காய் தீர்வாக அமையுமாம்.

ஏலக்காய், இஞ்சி செடிவகையைச் சார்ந்தது. ஏலக்காய் பச்சை நிறத்திலும், பழுப்பு நிறத்திலும் காணப்படும். பல், வாய் தொடர்பான பிரச்சினைகளுக்கும் ஏலக்காய் உதவும். குரல்வளை, தோல் தொடர்பான பிரச்சினைகளுக்கும் ஏலக்காய் உதவும். ஏலக்காயை அதிகமாகச் சாப்பிடுவதால் தீமை ஏற்படும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஏலக்காய் அதிக வீரியம் கொண்ட மருந்துகளைப் போன்றது. அதனால் இதனை அளவுக்கு மீறிப் பயன்படுத்தக்கூடாது. ஏலக்காய் விதைகள் மூலமும், தண்டுக் கிழங்குகள் மூலமும் பயிரிடலாம். ஏலக்காயைப் பயிரிட்டு மூன்று வருடங்களின் பின்பே காய்க்கத் தொடங்கும். இந்தியாவில் அதிகமான அளவு ஏலக்காய் பயிரிடப்படுகிறது. இந்திய ஏலக்காய் உற்பத்தியில் கேரள மாவட்டம் முதலிடம் வகிக்கின்றது. ஏலக்காய்ச் செடி 15 அடி முதல் 18 அடிவரை வளரும். இந்தியாவில் தமிழ்நாட்டின் தென்மேற்குப் பகுதியிலும், கேரளாவின் தென்கிழக்குப் பகுதியிலும் ஏலக்காய் மலை உள்ளது. இப்பகுதியில் அதிகமாக ஏலக்காய் பயிரிடப்படுவதால் இதற்கு ஏலக்காய் மலை என்ற பெயர் ஏற்பட்டதாக விக்கிபீடியாத் தகவல் கூறுகின்றது. ஏலக்காயில் அதிக இரும்புச்சத்தும் உண்டு. 100 கிராம் ஏலக்காய் விதையில் அண்ணளவாக 14 மில்லி கிராம் இரும்புச் சத்து உண்டு. ஏலக்காய் தரும் நன்மைகளைப் பற்றி எனக்குக் கிடைத்த தகவலைப் பகிர்ந்து கொண்டேன். இதனை அளவோடு பயன்படுத்திப் பயன் பெறலாம்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**
இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்து விடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

தமிழ் இலக்கிய நூல்களிலும் கூடக் கவிதைகளாக பல மருத்துவத் தகவல் உள்ளதைக் காணமுடிகின்றது. இதற்கு மேலாகச் சித்த மருத்துவ, தமிழ் மருத்துவ நூல்களிலும் பெறுமதியான மருத்துவத் தகவலைக் காணமுடிகின்றது. இந்தத் தொடர்கட்டுரையில் மருத்துவக் குணங்கள் கொண்ட இலகுவாகக் கிடைக்கக் கூடிய இயற்கை உணவுப்பொருட்களைப் பற்றியும் உரையாடிக் கொள்வதனால் நாளாந்த உணவில் சேர்த்தும், இயற்கை மருந்தாகவும் சிலவற்றைப் பயன்படுத்தி நன்மை பெறமுடியும். ஏற்கனவே மருந்து உட்கொள்பவர்களும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் இவற்றை பொருத்தமான மருத்துவ ஆலோசனையுடன் உட்கொள்வது முக்கியமானது. “அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்” என்ற பழமொழியையும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
பெருமையுடன் வழங்கும் 17 ஆவது
பொங்கல் விழா



காலம் - 27-01-2018 (சனிக்கிழமை) நேரம்: மாலை 5:00 மணி
இடம்: கனடா கந்தசுவாமி கோவில் விழா மண்டபம
1380 Birchmount Rd., Scarborough

* பாட்டு * சங்கீதக்கச்சேரி * தாளவாத்தியக்கச்சேரி
* பரத நாட்டியம் * திரையிசைநடனம் * கரியோக்கிப்பாடல்

நிகழ்வு மற்றும் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாகும் ஏராளமான நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கிறது.

தொடர்புகளுக்கு : சோ. ரவிமோகன் (தலைவர்) (416) 286-4780
மு. கிருபாகரன் (செயலாளர்) (416) 430-0422
சோ. சிவநாயகம் (பொருளாளர்)(647) 885-7407

அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

# உங்கள் எதிர்கால சுபீட்சத்துகாக தனிமையில் அமர்ந்து ஐந்து நிமிடங்கள் இதனை மனதில் நிறுத்திப் படியுங்கள் - என் உண்மைக்கதை

2009ஆம் ஆண்டு ஒரு வயோதிப சீனர் என்னிடம் வந்து ஐயா இந்த இணைய நாணயம் இரண்டு சதம் ஒரு ஐம்பது டொலருக்கு 5000 நாணயத்தை வாங்கி வையுங்கள் என்றார். நானும் சரியென வாங்கத்தயாராக என்னுடன் இருந்த நண்பன், "உவர் உம்மை ஏமாற்றிப் பணம் பறிக்கப் பார்க்கிறார்" என்றார். அவரை நம்பி நானும் அந்த நாணயத்தை வாங்கவில்லை.
விளைவு??? இன்று ஒரு நாணயத்தின் விலை இருபதினாயிரம் டொலர். நூறு மில்லியன் டொலரை இழந்துவிட்டேன்.
ஒரு நாணயம் ஒரு மில்லியன் வரை உயர இருக்கிறது. ஆகமொத்தம் 5000 மில்லியன் டொலரை கைநழுவ விட்டுவிட்டேன்.
உங்கள் உறவினர் நண்பர்கள் சிலர் இந்த நாணயத்தை வைத்திருப்பினும் உங்களுடன் பகிர மாட்டார்கள்.

இதேவிதம் எங்களால் 20 ஆயிரம் டொலர் கொடுத்து வாங்க ஒரு நாணயம் கூட வாங்க வசதியில்லை அல்லவா.
மூன்று மாதங்களுக்கு முன்பு இதேமாதிரியான ஏன் அதைவிட சிறந்த நாணயம் ஒன்று வாங்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. 2009ஆம் ஆண்டு விட்ட அதே பிழையை விடவேண்டாமே என்று ஒரு நாணயம் இரு சதத்திற்கு 25000 ஐ வாங்கினேன். இன்று ஒரு நாணயத்தின் விலை ஒரு டொலராகி எனது முதலீடு 50 மடங்காகி விட்டது. 2018ஆம் ஆண்டு முடிவில் ஒரு நாணயம் ஆயிரம் டொலராகும் எனக் கூறப்படுகின்றது.

காரணம் உலகில் உள்ள அனேக வங்கிகளும் 2018ஆம் ஆண்டு அதனை பயன்படுத்தப் போகின்றன என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கனேடிய, அமெரிக்க, ஜப்பான், அரேபிய வங்கிகள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டன. ஆகக்குறைந்த பட்சம் நூறு டொலருக்கு நூறு நாணயங்களையாவது உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

இதனை சாத்தியப்படுத்த ஓர் அருமையான ஸ்தாபனம் தனது கிளையை ரொறொன்ரோவில் ஸ்தாபித்து வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் மாலை 7:30 மணிக்கு Mccowan and Sheppard இல் அமைந்திருக்கும் மண்டபத்தில் எமக்கு இதனைக் காட்டித் தருகிறார்கள். என்னை தொலைபேசியில் அழைத்து அல்லது நேரடியாக வந்து பார்த்து திருப்தி அடைந்தால் இந்த நாணயம் விலை ஏறியதும் அதன் ஒரு பகுதியை விற்று உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். கனேடிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களைப் பரிசீலனை செய்யும் உத்தியோகத்தராக 13 வருடம் பணிபுரிந்தவர் இதனை தலைமை தாங்குகிறார்.

இறை அருளால் நான் விட்ட தவறை சரி செய்ய எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததால் மற்றவர்களும் பலன் பெறட்டுமே என்ற ஒரே நோக்கில் உங்களுடன் இதனை பகிர்கிறேன். நான் முதலிட்ட இந்த நாணயத்தால் ஏற்கனவே என் முதலீடு நூறு மடங்காகி விரைவில் என் பணக்குறையெல்லாம் தீரவிருக்கிறது. 2009 இல் ஐம்பது டொலரை சேமித்து முட்டாள் ஆகிய நான் 2017இல் ஐந்நூறு டொலரை வைப்பில் இட்டு இறை அருளால் நன்மை பெறுகிறேன். அதிஸ்டம் இருந்தால் ஒருமுறை வந்து பார்த்து பலன் அடையுங்கள்.

# உங்கள் உடல் நலத்தை பேணிக்காத்து மற்றோருக்கும் அதனை கூறி பலன் அடைய விரும்புகிறீர்களா?

இருபது வருடங்களாக சொறயிசிஸ் என்னும் (PSORISIS) தீராத வியாதியால் அவதியுற்றேன். எனது நண்பன் இந்த மூலிகையைதான் அங்கத்தவனாக இருக்கும் ஸ்தாபனத்தில் 25% கழிவு விலையில் $13.75 இற்கு வாங்கித்தந்தார். நம்பமாட்டீர்கள் மூன்றே மூன்று நாட்களில் அதிசயமாக குணமடைந்து விட்டேன்.
கேரளா இந்தியா சென்று ஒரு மாதம் தங்கியிருந்து குணப்படுத்த $5000 கேட்டார்கள்.
ஒரு இயந்திரத்தை எங்கள் உள்ளங்கையில் வைத்து எமது உடல் உறுப்புக்களில் இருக்கும் குறைபாட்டை துல்லியமாக கண்டு ஒரு அறிக்கையை 10 நிமிடத்தில் அச்சிட்டு தருகிறது.
இதயம், ஈரல், நுரையீரல், சுவாசப்பை, எலும்பு, சிறுநீரகம், மூளை, ஆண் பெண் உடல் உறுப்பு, நரம்பு மண்டலம், மூட்டு, புற்றுநோய், சலரோகம், நாடி நாள கொழுப்பு படிவு ஆகிய உடலுறுப்பின் குறைபாடுகளை கண்டு நிவர்த்தி செய்ய உதவுகிறது. இளையோர் முதல் முதியோர் வரை இலவசமாக சோதித்து பலன் பெறலாம்.

இந்த ஸ்தாபனம் FINCH & VICTORIA PARK AVENUE வில் அமைந்துள்ளது. உலகம் முழுவதும் பல்லாயிரம் மக்கள் பலன் பெறுகிறார்கள். என்னை ஒருமுறை தொடர்பு கொண்டு இந்த இலவச சேவை மூலம் பலன் பெற்றால் அதாவது உங்கள் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கண்டால் உங்கள் நண்பர், உறவினரை அறிமுகம் செய்து பணபலத்தைப் பெருக்குவீர்கள்.

Quality Management Standard, Environment Management Standard, Safety Management Standard
ஆகிய முறையை கடைப்பிடித்து FDA and GMP ஆல் Assessed and Registered ஸ்தாபனமாகும்.

**இந்திரன்: 437.770.6059**
**healthywealthy200@gmail.com**

இது ஒரு கட்டணம் செலுத்திய விளம்பரம்


@hakkakking
Call Us Now!
(905) 554 7537
HAKKA KING
INDIAN HAKKA CHINESE CUISINE
Serving Delicious
INDIAN HAKKA CHINESE CUISINE
In Heart of Markham
حلال
HALAL
DINE-IN
TAKE-OUT
CATERING
DELIVERY
ORDER ONLINE!
RECEIVE 10% OFF
BY SELECTING DISCOUNT OPTION
10% Discount
HAPPY HOUR
DINE IN ONLY
MON to THUR
6PM TO 8PM
EVERY OTHER DISH
50%
OFF
LUNCH SPECIAL
TWO LUNCHES FOR
Includes a Free Spring Roll & Choice of POP
$ 9.95 +Tax
WEEKDAYS ONLY
Coupon must be provided at the time of purchase. Cannot be combined with any other offer.
FAMILY PACK
MON-THURS - SAVE $10
RECEIVE $50 WORTH FOOD FOR
$ 40 +Tax
DINE -IN ONLY
Coupon must be provided at the time of purchase. Cannot be combined with any other offer.
STUDENT LUNCH SPECIAL
(Free Fried Rice upgrade with ID & Ice-Cream with Coupon)
Includes a Spring Roll & Choice of POP
$ 5.95 +Tax
WEEKDAYS ONLY
Coupon must be provided at the time of purchase. Cannot be combined with any other offer.
50% OFF
BUY ONE DISH (OVER $8) & RECEIVE
2ND DISH FOR 50% OFF.
Coupon must be provided at the time of purchase. Cannot be combined with any other offer.
FOOD VALUE
2nd Chilli Chicken for $5.00 with this Coupon.
Coupon must be provided at the time of purchase. Cannot be combined with any other offer.
7595 Markham Rd . UNIT 3
Markham, ON L3S 0B6
hakkaking.com
CONTACT:
hakka.k.king@gmail.com
LLBO
Licensed

# Another Project By Aspen Ridge Homes

ASPEN RIDGE®
HOMES

## " WEST " in Toronto




*For More Info. Please call our Office:*

## 416-321-6969

## HomeLife/GTA Realty Inc. Brokerage*

**5215 Finch Ave. E., #203, Toronto ON M1C 0C2**

HOMELIFE
HIGHER STANDARDS

**"Dream is yours, obligation is ours"**

*Independently Owned & Operated


HOMES FIT FOR ROYALTY
KOENIG
DEVELOPMENTS LTD
பொங்கல் வாழ்த்துக்கள்
HAPPY PONGAL
KOENIGDEVELOPMENTS.COM
BUILD THE DREAM HOME YOU ALWAYS WANTED
sales@koenigdevelopments.com
1.800.909.7209
@koenigltd
@koenigdevelopments
Koenig Developments Ltd
BILD
TARION
PROTECTING ONTARIO'S NEW HOME BUYERS

# Gifted - திரை விமர்சனம்



ஞா. ஆரணி

2017இல் வெளியான இப்படம் ஒரு Gifted (அதாவது மற்றப் பிள்ளைகளை விட படிப்பில் திறமைசாலியான) ஏழு வயதுச் சிறுமியையும், அவரது சிறுவயது வாழ்க்கையைப் பற்றியதுமான ஒரு கற்பனைக் கதையை வைத்து எடுக்கப்பட்ட அறிவுரை



கூறும் படமாகும். Florida வில் ஒரு சிறு ஊரில் மேரி (Mary) என்ற ஏழு வயதுச் சிறுமி அவரது தாய்மாமன் Frank உடனும், பூனை Fred உடனும் வாழ்ந்து வருகிறார். ஆரம்பக்கல்வியை வீட்டில் படித்த சிறுமியை Frank பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேர்க்கிறார். தனது வயதுடைய மற்றப் பிள்ளைகளுடன் அதுவரை பழகிப் பழக்கமில்லாத மேரி, பள்ளியில் கஷ்டப்படுகிறார். முதல் தினத்திலேயே அவர் பிரச்சினையில் சிக்குகிறார்.

அதற்கும் மேலாக மேரிக்கு பள்ளிப்பாடங்கள் போதிய அளவு கடினமாக இருக்கவில்லை. இதை உணரும் அவரது ஆசிரியர் Frank இடம் மேரியை ஒரு தனியார் Gifted பாடசாலைக்கு அனுப்புமாறு கேட்கிறார். அப்பிள்ளையின் அதிபரும், தனியார் பள்ளிக்கு புலமைப்பரிசு பெற்றுத்தந்து, மேரியை இலவசமாக அங்கே அனுப்பலாம் என்று கூறுகிறார்.

Frank இதற்கு சம்மதிக்கவில்லை. அவரது சகோதரியான மேரியின் தாயும் இவ்வாறு சிறுவயதிலிருந்தே படிப்பில் மட்டும் கவனம் செலுத்தி மற்றவர்களுடன் பழகாததால், அவர் கணக்கில் அதிமேதையாக இருந்தும் தற்கொலை செய்தார் என Frank நம்புகிறார். எனவே மேரிக்கும் அந்த நிலை ஏற்படாமல் இருக்க Frank உம் அவரை Gifted பள்ளிக்கு அனுப்பவிரும்பாமல், பொதுப் பாடசாலைக்கு அனுப்புகிறார்.

மறுபக்கத்தில் மேரியின் பாட்டியான Frank இன் தாய் அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து மேரியியை, தான் இருக்கும் இடத்திற்கு சட்டப்படி கூட்டிக்கொண்டு போக முயலுகிறார். தான் செய்த கணித ஆராய்ச்சி தனது திருமணத்தால் நிறுத்தப்பட்டதாலும், தனது மகள் செய்த கணித ஆராய்ச்சி மகளின் இறப்பினால் நிறுத்தப்பட்டதாலும், தனது பேத்தியாவது கணித ஆராய்ச்சி ஒன்றைச் செய்து முடிக்க வேண்டும் என விரும்புகிறார்.

மேரி தனது மாமாவிற்கும் பாட்டிக்கும் இடையில் திண்டாடுகிறார். தனது திறமையை வளர்ப்பதற்கும், சிறந்த மனிதராக வளர்வதற்கும் நடுவில் மேரி சிக்குப்படுகிறார். இதில் எது வெல்கிறது எனப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



அதீத திறமையை வளர்ப்பதற்காக எமது மனநிலையைப் பாதிக்கப்பட விடக்கூடாது. இதை இப்படம் இலகுவான முறையில் விளக்குகிறது. திறமையை அதீதமாக வளர்த்து முழு ஆற்றலையும் (Potential) அடைவது சமூகத்திற்கு உதவுவதாக இருக்கலாம். ஆனால் பல விடயங்களைக் கற்று வாழ்க்கையில் சமநிலை அடைவது எங்களுக்கு நல்லது. மாணவர் பாடத்துடன், கலை, விளையாட்டு, நட்பு போன்றவற்றைப் பாடசாலையில் கற்க வேண்டும்.

படத்தில் கூறுவதைப்போல, எதிர்காலத் தலைவர்களும், எதிர்கால பொதுமக்களுமான மாணவர்களுடன் சேர்ந்து, பழகி வளர்ந்தால்தான் சமூகமும் முன்னேற்றம் அடையும். இப்படம் மேல்வகுப்பு மாணவர்களும் பெற்றோரும், முக்கியமாக பிள்ளைகளை படிக்க மட்டுமே தூண்டும் பெற்றோர், கட்டாயமாகப் பார்க்க வேண்டியபடம்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



## தமிழ்ப்புதிர்

கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு அல்லது தொடர்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அல்லது தொடர்களை இட்டு பின்வரும் வலையத்தை நிரப்பவும். உங்கள் விடையை இந்த மாதம் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக எமக்கு அனுப்பி வைக்கவும். உச்சப் புள்ளி பெற்றவராக விளம்பரம் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் போட்டியாளருக்கு உரிய பரிசளிக்கப்படும்.

### போட்டியாளர்

| |
|---|
| பெயர்: |
| முகவரி: |
| தொலைபேசி: |
| மின்னஞ்சல்: |

தமிழ்ப்புதிர்: 03 வினா

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | ■ | 5 | |
| ■ | ■ | 6 | | | ■ | 7 | ■ | | ■ |
| ■ | 8 | | | | 9 | | | | |
| 10 | | ■ | | ■ | | ■ | ■ | | ■ |
| ■ | | ■ | ■ | 11 | | | 12 | | ■ |
| ■ | 13 | | | | | ■ | | ■ | 14 |
| 15 | | ■ | ■ | | ■ | 16 | | | |
| | ■ | 17 | ■ | | ■ | ■ | | ■ | |
| ■ | 18 | | | | | | ■ | 19 | |
| ■ | ■ | | ■ | | ■ | ■ | 20 | | ■ |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 Moderates | 2 Argue |
| 5 Garland | 3 Rayfish |
| 6 Steal | 4 Mustard |
| 8 Apartment | 5 City |
| 10 B. C. | 7 Thunder |
| 11 Preparation | 8 Pressure |
| 13 Stone Age | 9 Grant |
| 15 We | 11 Aerial roots of the banyan tree |
| 16 Dazzle | 12 Generosity |
| 18 Blot | 14 Spy |
| 19 Present | 15 Tomorrow |
| 20 Ocean | 17 Tip |
| | 19 Destroy |

### விடை அனுப்பும் விதம்:

மின்மடல்: punalkovai@gmail.com
தொலைநகல்: 416-282-4978
முகவரி: Tamil Puzzle, Vlambaram, 5215
Finch Ave. E. #201,
Toronto, ON., M1S 0C2

தமிழ்ப்புதிர்: 02 விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ர | ட் | 2 சி | ■ | 3 ஆ | ளு | 4 ந | ர் | ■ |
| ல் | ■ | ■ | ற | ■ | லை | ■ | ன் | ■ | 5 கு |
| ல | ■ | 6 த | ப் | 7 பு | ■ | 8 கா | ன | க | ம் |
| 9 மை | ய | ■ | 10 பு | ள் | ளி | ■ | ம் | ■ | பி |
| ■ | ■ | 11 உ | ரை | ■ | ■ | 12 தூ | பி | ■ | ■ |
| 13 ஊ | தா | ரி | ■ | 14 கு | 15 த | ர் | க் | 16 க | ம் |
| ■ | ■ | மை | ■ | 17 தி | ணி | ■ | 18 கை | தி | ■ |
| 19 ஊ | ட | க | ர் | ■ | வு | ■ | வா | ■ | 20 சீ |
| மு | ■ | ள் | ■ | 21 வி | ■ | 22 ஆ | த | ர | வு |
| ல் | ■ | ■ | 23 ஏ | வா | தி | ■ | ம் | ■ | ளி |

தமிழ்ப்புதிர்: 02

வெற்றியாளர்

வள்ளியம்மை சின்னத்துரை, ஸ்காபரோ

# உள்மனக்குரல்

**- ஞானா உருத்திரன் -**

எமது வாழ்க்கை எப்படி இருக்கின்றது? நாம் ஏன் கஷ்டங்களை அனுபவிக்கின்றோம்? ஏன் இந்த உலகத்தில் வறுமை இருக்கின்றது? பலவிதமான நோய்கள் இருக்கின்றது? இப்படியான கேள்விகள் எமது அடி மனதில் சில நேரங்களில் உருவாகின்றது. நாம் அவற்றை கர்மா அல்லது கர்ம வினை என்கிறோம். புண்ணியம், பாவம் என்பது போன்ற விளக்கத்தை கொடுக்கின்றோம். ஆனால் நன்கு கவனித்து பார்த்தோமானால் எமக்கு ஒரு பிரச்சினை ஏற்படும்போது நாம் கடவுளிடம் அதன் தீர்வைத்தேடி பிரார்த்தனை செய்வதோ அல்லது கடவுளிடத்தில் உதவி கேட்பதோ அதிகமாக இருக்கும். அப்படியான சந்தர்ப்பங்களில் நாம் ஒரு முடிவை எடுக்கும்போது எமது அடி வயிற்றில் ஒரு வகையான உணர்வை உணர முடியும். இதனை உள்ளுணர்வு (intuition) என கூறுவார்கள். இந்த உள்ளுணர்வு கடவுளின் சக்திகளுடன் எமக்குள்ள தொடர்பாகும். இந்த உள்ளுணர்வு சக்தி எப்போதும் எமக்குள் இருந்து இயங்கும். எமது முடிவுகள் சரியான வழியில் அமைவதற்கு இது உதவும். இந்த உள்ளுணர்வு சக்தி எமக்குள் ஏன் இருக்கின்றது என்றால் எம்மை சரியான வழியில் செலுத்தி எமது வாழ்வை சுலபமானதாக மாற்றுவதற்காகும். இது எமது ஆன்மாவின் நோக்கத்திற்கு ஏற்ப கொண்டு போனாலும் அதனை எப்படி அனுபவிக்கின்றீர்கள் என்பது உங்கள் வளர்ச்சியை குறிக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் பிரச்சினைகள் அனைத்தும் எமது ஆன்மாவுடனான ஆழ்மன தொடர்பை உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் ஆகும். நாம் ஒரு பிரச்சினையில் சிக்கும்போது அதனை தீர்ப்பதற்காக எந்த வகையான உதவியைப் பெறவும் நாம் தயாராக இருப்போம். பொதுவாக எமக்கு அந்த நேரம் உதவி தேவை. அப்பொழுது நாம் இந்த ஆழ்மனதின் குரலை கேட்க தயாராக இருப்போம். எப்பொழுதும் இந்தக் குரல் எமக்குள் இருக்கிறது. இது அன்பின் வழிகாட்டி. எமது இதயத்தில் இருக்கும் ஆத்மாவில் இருந்தோ அல்லது அதனோடு தொடர்பான சக்திகளிலிருந்தோ வருகின்றது.

இந்த உள்மனக்குரல் எப்படிப்பட்டது என்று பார்த்தோமானால் இது எல்லாம் உணர்ந்தது. பல நிலையில் வாழ்க்கையை பார்க்கக் கூடியது. இது எப்பொழுதும் எந்த சூழ்நிலையிலும் உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும். ஆனால் இந்த உள்மன வழிகாட்டியை நாம் இழந்து விட்டோம். வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள், தடைகள் மட்டுமன்றி எல்லாவற்றிற்குமே இது எமக்கு வழிகாட்டும். ஆனால் எமது முடிவுகளை, எமது குறுகிய மனப்பாங்கை அதாவது எமக்குத் தெரிந்த உலக அறிவை வைத்தே நாம் எடுக்கிறோம். அதனால் எமது முடிவுகள் பல தடவை கஷ்டத்தைக் கொடுக்கிறது. வாழ்க்கை எப்பவும் குறுகியதாகவும் அமைகிறது. ஆனால் இந்த உள்ளுணர்வை கேட்க தொடங்கினோம் என்றால் எம்மால் எமது வாழ்க்கையை மிகவும் சுலபமாக்க முடியும். அப்பொழுது நீங்கள் எல்லாம் அறிந்த உங்கள் உண்மையான பகுதியை உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைக்கிறீர்கள். இது உங்கள் ஆத்மாவின் குரல். இந்த ஆத்மா கடவுளோடு தொடர்பாக இருக்கிறது. எமது பிறப்பு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில் பல உதவிகள் எமக்கு அனுப்பப்படுகின்றன. அதனோடு இந்த ஆத்மாவின் குரலும் எமது இதயத்தில் இருந்து வழிகாட்டுவதற்காக உள்ளது.



மாவிற்கான நோக்கத்தை நாம் அடைவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏற்ப எம்மை வழி நடத்த உதவும்.

நாம் பிறக்கும்போது எமது ஆத்மா கடவுளோடு சேர்ந்து எமது பிறப்பின் நோக்கத்திற்கான ஒரு திட்டத்தை உருவாக்கும். இதனை பலபேர் விதி என்கிறார்கள். இவை உண்மையில் ஒரு சந்தர்ப்பம் என்றே சொல்லலாம். உங்கள் சக்தி, வளர்ச்சி போன்ற தேவைக்கு ஏற்ப அந்த பிறப்பின் நோக்கம் இருக்கிறது. இது சக்தி அளவில் இருக்கும். இதற்கு ஏற்ப நீங்கள் உங்கள் பெற்றோர்கள், கலாச்சாரம் மற்றும் ஏனைய உறவுகளை உருவாக்குகிறீர்கள். உங்களுக்கு ஏற்படும் ஒவ்வொரு தடைகளும், பிரச்சினைகளும் உங்களை உங்கள் உண்மையான பகுதியான ஆத்மாவோடு சேர அல்லது விலகிச்செல்ல உதவி செய்யும். இதற்கு உங்கள் முடிவுகள் பெரும்பங்கு வகிக்கிறது. வாழ்க்கையின் ஓட்டம் எப்பொழுதும் உங்கள்

(தொடர்ச்சி 26 ஆம் பக்கம்...)

# உள்மனக்குரல்...

25 ஆம் பக்கத்தொடர்ச்சி

மனிதன் எப்போதும் இரண்டு பகுதியை கொண்டவன். அதில் ஒன்று மனித பகுதி. அதாவது இந்த உலக அறிவை கொண்ட பகுதி. அதனை விட சக்தி அளவில் ஒரு பகுதி இருக்கிறது. இது எல்லாம் தெரிந்த பகுதி. உங்கள் மனித பகுதி வரையறைகள் மற்றும் எல்லைகளை கொண்டது. இது உங்கள் மன அளவில் தனக்குத் தெரிந்த நம்பிக்கைகள் அனுபவங்கள் மூலம் இயங்கக்கூடியது. மறு பகுதியான ஆத்மாவின் பகுதி பல படிகளில் இயங்கக்கூடியது. இது எல்லாம் அறிந்தது. இது இந்த உலக வாழ்க்கைக்கு சக்தி கொடுக்கும். ஆனால் உங்களது மனிதனுக்கான பகுதி எந்த வகையான நம்பிக்கைகள் உணர்வுகளை கொண்டுள்ளதோ அதற்கு ஏற்ப வாழ்க்கையை அனுபவிக்கும் விதம் அமைகிறது. இந்தப் பகுதி எப்பொழுதும் மாறக்கூடியது. ஆனால் உங்கள் ஆத்மாவின் பகுதி மாறாது. அது உங்களுக்கு சரியான முறையில் வழி காட்டக்கூடியது. இதனை நாம் உள்ளுணர்வு அல்லது ஆழ்மன வழிகாட்டி என்று சொல்லலாம். ஆத்மாவின் வளர்ச்சி என்பது எப்படி ஏற்படுமெனில், இந்த மனித பகுதி ஆத்மாவின் பகுதியை உணர்ந்து அதனை முழுமையாக எமது உடல் மூலம் வாழ்க்கையில் வெளிப்படுத்தும் போது நீங்கள் உண்மையான ஆத்மாவின் நிலையை அடைய முடியும். அதனால் நாம் இந்த உள்மனக்குரலை கேட்பது எமது வாழ்க்கையை மிகவும் சுலபமாக்குவதுடன் அது எமது ஆத்மாவின் வளர்ச்சியை கூட்டுகிறது. இதுதான் பிறப்பின் முதலாவது நோக்கம். இந்தக் குரலை நாம் ஆத்மாவின் குரல், அன்பின் குரல், உள்மனக்குரல் என்று பலவகையில் அழைக்கலாம். இந்தக் குரலும் உங்கள் தர்க்க ரீதியான மனதின் (சாதாரண மனம் logic mind) குரலும் மிக வேறுபட்டதாகவே இருக்கும்.

எமது வெளி மனதின் குரல் எப்பொழுதும் பயத்தை நோக்கி இருக்கும். இது நீ செய்யாவிட்டால் இதனை இழந்துவிடுவாய் என்று சொல்லும். இந்தக் குரல் மிகவும் சத்தமாக இருக்கும். அதனோடு தன்னையோ மற்றவர்களையோ குறை கூறும் அல்லது தீர்ப்பு சொல்லும். இது பொதுவாக நீ, நான் என்ற சொல்லைப் பாவிக்கும். அதனோடு நீங்கள் இந்தக் குரலைக் கேட்கும்போது இது பொதுவாக மிகவும் எதிர்மறையாக தீர்ப்பு சொல்லும் சொற்களைப் பாவிக்கலாம். இந்தக் குரல் எமது வெளிமனத்தில் இருந்து வருவதால் பொதுவாக தனிமையை கொடுக்கும். ஆனால் உண்மையான உள்மனக்குரல் மிகவும் மன நிம்மதியைக் கொடுக்கும். எமது முடிவுகள் எல்லாம் தெரிந்த பகுதியில் இருந்து எடுக்கப்படுவதால் நாம் எப்பொழுதும் எங்கள் வாழ்க்கையை சுலபமாக்க உதவும். நாம் எல்லோரும் கடவுளோடு எல்லா நேரமும் தொடர்பாக இருக்கிறோம். கடவுள் என்று எல்லாவற்றையும் உருவாக்கும் சக்தி கொண்ட எல்லாம் வல்ல சக்தியை அழைக்கிறோம். எமது தொடர்பு இருந்தாலும் எமது உணர்ந்து கொள்ளும் தன்மையை இழந்து விட்டால் நாம் கடவுளையோ கடவுளின் சக்திகளையோ உணர முடிவதில்லை.

மனிதர்களில் பெரும்பாலானவர்கள் கடவுளை நம்பினால் நாம் தனியாக எல்லாவற்றையும் செய்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒரு ஆத்மா இருக்கிறது. அது எமக்கு எப்பொழுதும் வழிகாட்டத் தயாராக இருக்கிறது. இந்த சக்தி பல பரிமாண நிலையில் இயங்குகிறது. இது எமக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. உண்மையிலேயே இந்த சக்தி முழுமையாக உங்கள் உடம்பில் இயங்கும்போது நீங்கள் முழுமையாக விழிப்புணர்வு அடைகிறீர்கள். அதனால் அதனுடைய குரலை கேட்க ஆரம்பித்தால் நீங்கள் மிகவும் சுலபமாக ஆன்மீக வளர்ச்சியையும் இந்த உலக வாழ்க்கையில் மகிழ்ச்சியும் அடையலாம். உண்மையான கடவுளின் குரல் (divine guidance) எப்பொழுதும் உன்னால் முடியும் என்ற உணர்வை தரும். இது அடிக்கடி தனது எண்ணங்களை மாற்றாது. அதாவது நீங்கள் இன்று ஒரு வழிகாட்டுதல் பெற்றுவிட்டு மறு நாள் அதேவிடயத்திற்கு இன்னுமொரு வழிகாட்டலை பெறுவீர்களானால் அது உண்மையான வழிகாட்டல் அல்ல.

அது பொதுவாக மனதில் இருந்து வருகிறது. ஆனால் உண்மையான வழிகாட்டல் இதயத்திலிருந்து வரும். திரும்பத் திரும்ப வரும். அதை நீங்கள் பின்பற்றி செயல் புரியும்வரை திரும்பத் திரும்ப வரும். உண்மையான இதயத்தின் குரல் மற்றவர்களுக்கு உதவி செய்யும். ஒரு எழுத்தாளர் உலகத்திற்கு நன்மை தரும் நூல் ஒன்றை எழுதவேண்டும் என்று எண்ணம் கொண்டிருப்பாரெனில் அது இந்த பூமிக்கு உதவி செய்யும் செயலாகும். ஆனால் பொதுவாக இப்படியான எண்ணம் வரும்போது அவரின் மனதில் "நீ யார் இந்த பூமிக்கு உதவி செய்ய? உனக்கும், குடும்பத்துக்கும் இது சிக்கல்களை கொடுக்கும். இதை அப்படியே விடுவதுதான் நல்லது என்பது போன்ற பயங்கள் தோன்றும்." பல தடவை பல மனிதர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றாமல் இருப்பதற்கு இப்படிப்பட்ட குறைந்த சக்தியுள்ள எண்ணங்கள் தான் காரணம். இவற்றை lower self என்பார்கள். உண்மையான வழிகாட்டல் என்பது எமது இதயத்தின் குரலாகும். அது எப்பொழுதும் உங்களுக்கு சொல்லும் ஆலோசனைகள் உங்களுக்கு ஏற்றதாக இருக்கும். அதனை தள்ளிப்போடுவதற்கு வழிகாட்டாது. பல தடவை இப்படியான வழிகாட்டல் வரும் போது எமது மனம் (mind) அதனை தள்ளிப்போடுவதற்கு பல அறிவுரைகள் சொல்லும். நீ இன்னும் படித்துவிட்டு தொடங்கு. அப்பொழுதுதான் உன்னால் இதை செய்யமுடியும். இல்லாவிட்டால் மற்றவர்கள் நீ சரியான முறையில் செய்யவில்லை என்று குறை சொல்லுவார்கள். இப்படியான எண்ணங்கள் எமது மனதில் இருந்து வரும். எப்பொழுதும் உண்மையான வழிகாட்டல் இக்கணத்தைக் குறிக்கும். அது இந்தக்கணத்தில் என்ன செயலை செய்யலாம் என்பதை நோக்கி இருக்கும். எமது ஆன்மாவிற்கான நோக்கம் எமக்கு மிகவும் சந்தோஷத்தை தருவதாகவே இருக்கும். ஆனால் இந்த உண்மையில்லாத வழிகாட்டல் எமது மனத்தில் இருந்து வரும். எமது மன வழிகாட்டல் எப்பொழுதும் எமது lower self ஆகும். அது பொதுவாக எமது உண்மையான இலக்கை தள்ளிப்போட செய்யும். பொதுவாக தன்முனைப்பு எனும் ego self இருக்கும் போது அளவுக்கதிகமாக பொருட்கள் வாங்குதல் அல்லது அளவுக்கதிகமாக தொலைக்காட்சி பார்த்தல் அல்லது அளவுக்கதிகமாக உணவு அருந்துதல், குடிப்பழக்கம் இப்படியான தீய பழக்கவழக்கங்களை கொண்டிருக்கும். இது எப்பொழுதும் எமது இலக்கை தள்ளிப்போட்டபடி இருக்கும்.



உண்மையான வழிகாட்டல் மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கும். இது மிகவும் தெளிவாக இருக்கும். எப்பவும் உங்கள் ஆன்மாவின் நோக்கம் மிகவும் பெரிது என்றால் பயமும் பெரிதாக இருக்கும் என்று சொல்லுவார்கள். அந்த நேரங்களில் உங்கள் இதயத்தின் குரலை நீங்கள் கேட்கப் பயப்படுவீர்கள். ஏன் என்றால் உங்கள் ஆன்மாவின் நோக்கம் உள்மன அளவில் தெரிந்தாலும் அதனை நோக்கி முடிவுகள், செயல்களை செய்வதை தவிர்ப்பீர்கள். நாம் எல்லா மனிதர்களும் பலவிதமான நோக்கங்களுக்காக பிறக்கின்றோம். ஆனாலும் அந்த நோக்கம் ஒவ்வொருவருக்கும் வேறுவேறானதாக இருக்கும். சிலபேர் தங்களுடைய ஆத்மாவின் வளர்ச்சிக்கு பொதுவாக மன்னித்தல், பொறுமை, அன்பு காட்டுதல் என்பதை வளர்ப்பதற்காக கஷ்டமான குடும்பங்களை தெரிவுசெய்து பிறப்பதன் மூலம் தனது ஆத்மாவின் நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள். சில மனிதர்கள் தமது ஆத்மாவின் வளர்ச்சியோடு மற்றவர்களுடைய ஆன்ம வளர்ச்சிக்கு உதவும் நோக்கத்துடனும் பிறப்பார்கள். இதனைதான் பெரிய இலக்கு என்பார்கள்.

உங்கள் இதயத்தின் குரலில் ஒரு பரிச்சய தன்மை (familiar) எனக்குத் தெரியும் என்ற ஒரு தன்மை இருக்கும். பொதுவாக இரண்டாவது ஆள் கதைப்பதுபோல் இருக்கும். இந்த வழிகாட்டல் வரும்போது நீங்கள் நல்ல சந்தோஷ உணர்வை உணர்வீர்கள். இது எப்போதும் உங்களுக்கு உதவும் முறையில் (supportive) இருக்கும். எமது உண்மை வழிகாட்டல் எமக்கு என்ன தேவையோ அதையே முழுமையான நோக்கத்தோடு சொல்லும். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு புது வீடு கேட்கிறீர்கள் என்றால் அந்த வீடு அல்லது அந்த இடத்தின் பெயரோ உங்கள் நினைவுக்கு வரலாம். பொதுவாக குறைந்த வார்த்தைகள் பாவிக்கப்படும். இது உடனடியாக வரும். கிடைக்கும் தகவல்கள் தெளிவாக இருக்கும். உங்களுக்கு பல எண்ணங்கள் பல சொற்கள் தோன்றினால் அது உண்மையான வழிகாட்டல் கிடையாது.

### உங்கள் கடவுளின் அல்லது இதயத்தின் குரலை கேட்பதற்கு இருக்கும் தடைகளை நீக்குகுவதற்கு வழிமுறைகள்


உங்கள் கடவுளின் குரல் உங்கள் அன்பின் குரல். இது ஒன்றும் கற்பனை கிடையாது. இது உண்மையிலேயே உணர, கேட்க, முடியும். இந்தக் குரல் எம்மோடு தொடர்பு கொள்ளவும் உதவி செய்யவும் தயாராக இருக்கிறது. ஆனால் மனிதர்கள் இங்கு பிறந்தாலும் இங்குள்ள நம்பிக்கைகளிலும் மற்ற சக்திகளாலும் பாதிக்கப்பட்டு அதனை கேட்கும் சக்தியை இழந்து விடுகிறார்கள். ஆனால் சந்தோஷமான விஷயம் என்னவென்றால் அதனை அவர்களால் திருப்பி எடுக்கமுடியும். முதலில் நாம் பெரும்பாலும் குழந்தைகளாக இருக்கும்போது இந்த மேலுலக சக்திகளை உணரும் தன்மையும் கடவுளின் குரலை கேட்கும் தன்மையும் கொண்டவர்கள். ஆனால் அதனை விளக்கப்படுத்தும் தன்மை எமக்கு இருப்பதில்லை. எதனையும் இந்த உலகத்திற்கு விளங்கப்படுத்த வேண்டுமானால் இங்குள்ள அறிவை பிள்ளை பெறவேண்டும். பெரும்பாலும் இங்குள்ள அறிவை பெறும்போது பொதுவாக பிள்ளை இந்த சக்தியை இழந்துவிடுகிறது. சிலநேரங்களில் மிகவும் சிறு குழந்தைகள் சுவரைப் பார்த்தோ அல்லது ஆட்கள் இல்லாத இடங்களைப் பார்த்தோ கதைப்பதுண்டு. பல பெற்றோர்கள் கேள்விப்பட்டு இருப்பார்கள். பிள்ளைகள் விளையாடும்போது யாரோடோ கதைப்பது போன்று. பிள்ளைகளை யார் என்று கேட்டால் அது எனது கற்பனை அல்லது சொந்தக்காரர் சில பேர் பெயர் கூட சொல்லி இருக்கலாம். இதற்கு காரணம் அவர்கள் மேலுலக சக்திகளை உணரும் தன்மையை கொண்டுள்ளார்கள். ஆனால் பல பெற்றோர்கள் அதனை கற்பனை என நினைத்து விடுவதுண்டு. திரு. ரவிசங்கர் கூறுகின்றார், எமது விழிப்புணர்ச்சி என்பது இதயத்தில் உள்தொடர்போடு பிறந்து அதனை இழந்து திருப்பவும் இதயத்தின் தொடர்பை பெறுவது தான் என்று. எந்தக் குழந்தையும் வளர்ந்த ஆத்மாவை கொண்டது. அது தனது உண்மையான தன்மையான உள் உணர்வு தொடர்பை இந்த உலகத்தில் பிறந்ததும் இழந்து விடுகிறது. அதனால்தான் எமக்கு இந்த விஷயங்கள் எல்லாம் புது விஷயமாக சிலநேரங்களில் ஆச்சரிய விஷயமாக படுகிறது. நாம் எல்லோரும் எமது உள்மன சக்தியை எடுத்து எமது வாழ்க்கையை மாற்றி அமைக்கலாம். அது எமக்கு மிகவும் உதவியாக இருக்கும். எல்லா மனிதரிடமும் இந்த உள்மன சக்தி இருக்கிறது. இதை பலவகையில் பலநேரங்களில் உணர்ந்தும் இருக்கிறார்கள். ஆனால் எந்த நேரமும்

(தொடர்ச்சி 33 ஆம் பக்கம்...)



# தென் ஆபிரிக்கா - இந்தியா ரெஸ்ற் தொடர்!

## விளையாட்டுத் தகவல்கள் 389



### எஸ். கணேஷ்

Capetown ரெஸ்ட் போட்டியில் 208 ரன்கள் வெற்றி இலக்கை எதிர்கொண்டு ஆடிய இந்திய அணி பதற்றத்துடன் விளையாடி 135 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 72 ரன்கள் வித்தியாசத் தில் தோல்வியை தழுவியது. 43-வது ஓவரில் அஸ்வின், மொகமது ஷமி, பும்ரா ஆகியோரை வீழ்த்தி 15.4 ஓவர்கள் 4 மெய்டன்களுடன் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வெர்னன் பிலாண்டர் மொத்தம் இந்த ரெஸ்ட் போட்டியில் 75 ரன்களுக்கு 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து தென் ஆபிரிக்கா 48 பவுண்டரிகளை கொடுக்க இந்திய அணி முதல் இன்னிங்ஸில் மட்டும் 39 பவுண்டரிகள் 2 சிக்சர்களை வழங்கியது. 130 ரன்களுக்கு 2-வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த இந்திய அணிக்கு 208 ரன்களே வெற்றி இலக்காக இருந்த போதும் தென் ஆபிரிக்க அணி பந்து வீச்சாளர்களிடத்தில் எந்தவித பதற்றமும் இல்லை, மாறாக இந்திய துடுப்பாட்ட வீரர்கள் 'ஒரு வேளை வெற்றி பெற்று விடுவோமோ" என்ற பதற்றத்தில் ஆடினார் களோ என்று தோன்றுகிறது. வெர்னன் பிலாண்டர் சிறப்பாகப் பந்து வீசினார்.

அணியின் 8 மற்றும் 9ஆம் நிலை துடுப்பாட்டவீரர்கள்: அஸ்வின், புவனேஷ்வர் குமார் இணைந்து 94 பந்துகளை சந்தித்து 49 ரன்களை 8-வது விக்கெட்டுக்காகச் சேர்க்க முடியும்போது தவண், விஜய், புஜாரா, கோலி, ரோஹித் சர்மா அடங்கிய துடுப்பாட்ட வரிசை மொத்தம் 117 பந்து களை மட்டுமே சந்தித்து 76 ரன்களுக்கு அவுட் ஆவது என்றால் எப்படி அணி வெற்றி பெற முடியும்?

இந்திய பந்து வீச்சாளர்கள் 2-வது இன்னிங்சில் முதல் இன்னிங்ஸ் தவறை திருத்திக்கொண்டு சரியான இடத்தில் பந்து வீச்சை காட்டினர். தென் ஆபிரிக்க பந்து வீச்சாளர்களும் அருமையான இடங்களில் பந்தைப் பிட்ச் செய்தனர். இந்நிலையில் உலகத்தரம் வாய்ந்த ஒரு பேட்ஸ்மென் என்று பெயரெடுத்த விராட் கோலி, வெர்னன் பிலாண்டர் 7-8 பந்துகளை ஓஃப் ஸ்டம்புக்கு வெளியே வீசும்போது ஒரு பந்து உள்ளே வரும் என்பதைக் கணித்திருக்க வேண்டும். ஆனால் அவரோ அந்தப் பந்தை நேராக ஆடுவதை விடுத்து ஏதோ அது பவுண்டரி பந்து போல் லெக் திசையில் ஆட முயன்றார். பந்து காற்றில் உள்ளே வந்ததைப் பார்க்கும் ஒரு வீரர் பந்தின் திசைக்கு நேராகத்தான் மட்டையைக் கொண்டு சென்றிருக்க வேண்டும். அந்தப் பந்தை நேராக ஆடியிருந்தால் அது மட்டையில் பட்டிருக்கும். ஆனால் வெற்றிட மாக உள்ள லெக் திசை அவரை கவர்ந்திழுத்தது. இதுதான் பொறி. இதில்தான் சிக்கினார் விராட் கோலி. அதுவரை 40 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 28 ரன்கள் என்று ஆடி வந்தார்.

ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும்
கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்
416.613.1840 / 647.272.6993
birdsilvergardens@gmail.com

# தென் ஆபிரிக்கா...

27 ஆம் பக்கத்தொடர்ச்சி



ரபாடா இவரைக் கடந்து சென்று 888 புள்ளிகள் பெற்றுள்ளார். சிட்னி ரெஸ்ட் போட்டியில் ஒரேயொரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்திய ஆண்டர்சனின் தரவரிசைப் புள்ளிகள் 5ஆகக் குறைந்தது. மாறாக கப்டவுன் ரெஸ்டில் இந்தியாவுக்கு எதிராக ரபாடா 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

முதல் நிலை குறித்து ரபாடா கூறும்போது, "உலகின் நம்பர் 1 பந்து வீச்சாளராக விளங்குவது சிறப்பு வாய்ந்தது. இது ஒரு கனவனுபவம். கிரிக்கெட் ஆட்டத்தை நாம் தொடங்கும்போது நாம் காணும் கனவு இதுவாகத்தானே இருக்கும். கிரிக்கெட் என்பது அணி விளையாட்டு. எனவே எனக்கு ஆதரவளித்த சக வீரர்களுக்கும் நன்றி. இந்த ஆண்டு தொடக்கம் அருமையாக அமைந்தது, தொடர்ந்து வெற்றிகளை ஈட்டுவோம் என்று கருதுகிறேன்.

இந்திய வீரர்களை அனாயசமாக வீழ்த்திய வெர்னன் பிலாண்டர் 12-ம் இடத்திலிருந்து 6-ம் இடத்துக்கு உயர்ந்துள்ளார். ரெஸ்ட் பட்டிங் தரவரிசையில் ஸ்டீவ் ஸ்மித் தொடர்ந்து முதலிடம். 947 புள்ளிகள். விராட் கோலி, கேன் வில்லியம்சன், ஆகியோரைக் கடந்து இங்கிலாந்து கப்டன் ஜோ ரூட் 2-ம் இடம் பிடித்தார். புஜாரா 3ஆம் இடத்திலிருந்து 5-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

# உழவும் அறுவடையும்



உழுது பரம்படித்து
ஊக்கமுடன் வேலை செய்து
பழுதற விதைத்த முளை பயிராகிப்
பச்சைப் பசேல் என்று
காற்றினிலே தோகை கடிதாகத்தான் அசைய

பார்த்து மகிழ்ந்து இனிது பரவசமாகி நின்று
கூத்தாடி மனங் களிக்க
களை எடுத்து உரம் இடவே
கடுகி வளர்ந்த பயிர்
பூத்துத் தலைநிமிர்ந்து புல்லரைபோல் தோன்றியது

காய்த்து தலைசாய்ந்து கற்றோர் போல் காணுகையில்
ஏத்தி இறை பதத்தை
இதயத்தால் வாழ்த்து உரைத்து
தண்ணீர் கடத்தித் தருணமது பார்த்திருந்து
மண்ணை வணங்கிக் கதிரவனைக் கைதொழுது

எண்ணத்திற்கு அடங்காது இதயமது பூரிக்க
காத்திருந்தநாளும் கடுகிவரக் கண்டு
பார்த்துக் கதிர் அறுத்து அறுவடையைப்
பக்குவமாய் சூடு வைத்து
சூடு அடிக்கும் யந்திரமும் சுறுக்காய் அடித்துவிட

வீடு எடுத்துச் செல்வதற்கு
வித விதமாய் சாக்கில் இட்டு
ஏற்றி கொணர்ந்து இறைக்கி வைத்த
நெற்குவியற் சாக்கின் (மூடையின்) அடுக்கு
சட சடென முகடுமுட்ட

பார்க்கின்ற போது பட்டதுயர்
பாகாய்க் கரைந் தோட
பசுமை மனம் நிறையும்
மனசு நிறைந்து விடும்
நல்லூரான் தேர் போல.

- பூ. ஸ்ரீகாந்தன் -

# ஈழத்துக் கிராமியக் காதல் பாடல்கள்

**- த. சிவபாலு -**

ஈழமும் இசைத்துறைக்குத் தன்னாலான பங்களிப்பைச்செய்து வருகின்றது. பிரபல மான நவீன பாடல்துறைக்கு தமிழில் அடி எடுத்துக்கொடுத்தவர்கள் இலங்கையரே எனின் தவறாகாது. அமுதன் அண்ணாமலை, ஏ.எம். இராசா, மனோகரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மட்டக்களப்பு நாட் டார் பாடல்கள் மிகவும் இரசனை மிகுந் தவை. பண்ணோடு பாடும் பாங்கு இனிமை பயப்பது. காதல் நயம் சொட்ட நெல் வயல்களில் காவல்புரியும் இரவு வேளை களில் பொழுதுபோக்காகப் பாடப்படும் நாட்டார் பாடல்கள் மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசங்களின் சிறப்புப் பெறுகின்றன. அருகருகே அமைந்துள்ள காவல் நிலைக ளில் இருந்து விலங்குகளை விரட்டுவதற் காக ஒலி எழுப்பும் நோக்குடன் இருவரி டையே நிகழும் பாடல்கள் மிகவும் இன்பம் பயப்பதாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்விதமான இன்பக் கிழுகிழுப்பை ஏற்படுத் தும் தமிழ் நாட்டார் பாடல்கள் மட்டக் களப்பு மாவட்டத்தில் தமிழர், இஸ்லாமியர் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தனது விருப்பினை பாடல் மூலம் தன் இதயத்தில் பதித்தவளுக்குத் தெரியப்படுத் துவதாக அமைவது சில பாடல்கள்.

காதலர்கள் தங்கள் மனத்திலுள்ளவற்றை ஒளிவு மறைவின்றிக் காட்டுவது போன்றது கிராமியக் காதல் பாடல்கள். தான் கொண்ட காதலை வெளிப்படையாகவே காட்ட விரும் புகின்ற காதலன் அவளிடம் தனது விருப்பி னைக் கூறி அதற்கான சம்மதத்தைப் பெற விளைகின்றான், அவன் அவளை அழைக் கின்றான். ஆனால் எப்படி அழைப்பது என்பதில் அவளுக்கு சற்று தடுமாற்றம். என்ன சொல்லிக் கூப்பிட தங்கை என்றால் அது தவறு, மனைவி அல்லது துணைவி என்று அழைக்க இன்னும் அது கைகூட வில்லை. எனது எதிர்கால மனைவி என்பதா? அன்பே என்பதா, எப்படி அழைக்கலாம், அவளிடமே கேட்டுவிடு வோமே என்னும் முடிவுக்கு அவன் வரு கின்றான். உன்னை எப்படி எப்படி எல்லாமோ அழைக்கலாம். ஆனால் உனது விரும்பம் எதுவோ அதனை எனக்குச் சொல் என்பதாக அவனது வினா அமைகின்றது: ‘வாழைப்பழம் எந்தன் வலதுகையில் சர்க்கரையே ஏலம் கராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்? எனது அன்பிற்குரியவளே நீ இன்றி என் வாழ்வில்லை, என்னால் உன்னைப் பிரிந்து வாழ முடியவில்லையே என்ற ஆதங்கத்தை அவளிடம் தெரியவைக்கும் பாணியில்: “தங்கக் கிளியே என்ரை தாய்மாமன் ஈன்ற கண்டே மையிட்ட கண்ணே உன்னை மறந் திருக்கக் கூடுதில்லை” எனவும் “மானே மயிலே மாமி பெத்த மரகதமே தேனே திரவியமே என்மனது ஏங்குதடி உன்னை நினைச்சு” எனவும்“குஞ்சு முகமும் உந்தன் கூர்விழுந்த மூக்கழகும் நெற்றி இளம் பிறையும் கண்ணே நித்திரையில் தோணு துகா” எனவும் “காலி விளைபாக்குக்கும் கழுதாவளை வெற்றிலைக்கும் ஏலம் கிராம் புக்கும் ஏற்றதுகாண் உன் எழில் வாய்” எனவும் தனது மனதில் அவள் உடல் அங்கம் அனைத்தும் பதிந்துள்ளதை எடுத்துக் காட்டி அவளை அணு அணு வாக ரசிப்பதனைக் குறிப்பிட்டு அவளின் அழகினை விமர்சிக்கும் விமர்சனாகவே மாறிவிடுகின்றான். பல பக்கங்களில் அன்றி சில குறிப்புக்களிலேயே அவளின் அழகை வர்ணிக்க இத்தகைய பாடல் வரிகள் மிகையாக அமைகின்றன.



தனது காதலியிடம் தான் வருவதற்கு உள்ள பல தடைகள் இடைவினைகள் பற்றிக் குறிப்பிடுகின்றான். உன்னிடம் ஓடோடி வர எனக்கு ஆசைதான். ஆனால் வரமுடிய வில்லையே. இடையே பல தடைகள் காணப்படுகின்றனவே. இவற்றை எல்லாம் தாண்டி வரமுடியவில்லையே. எங்கும் ஒரே தடையாக, முட்டுக்கட்டையாக அதாவது உன்னை யாரும் நெருங்கமுடியாத அளவிற்கு பாதுகாப்பாக வைத்திருக்கிறார் களே உனது பெற்றோரும் சகோதரங்களும். நான் எப்படி வருவதென்று தெரியவில்லையே என்ற குறிப்பை அவளுக்கு உணர்த்தி அவளை வழிசமைக்கும் வண்ணம் கேட் கின்றான். “சுற்றிவர வேலி சுழலவர முள் வேலி எங்கபுள்ளை நான் வரட்டும்” எனவும் அவள் நீ ஆண்மகன் தானே துணிந்து வா என்று பதில் சொன்னாளோ என்னவோ அவனது முயற்சி திருவினையாக்கவில்லை.

“எங்கும் ஒரு வேலி எதாலே புள்ளை நான் வரட்டும்” என்று தனக்கும் அவளுக்கும் இடையே உள்ள தடைகளைக் குறிப்பிடுகின் றார். இலக்கியங்களில் மட்டுமா உவமானம், உவமேயம். இங்கும் அது நன்கு விளை யாடுகின்றது. பெற்றோரைப் பெண்ணின் வேலியாக, பாதுகாவல் அரணாகக் குறிப் பிடப்படுகின்றது. தன்னிடம் வருவதற்கு இத் தடைகள் ஒரு காரணமா? நீ துணிந்தால் வரலாம் என்னும் பொருள் படப்பெண் தனது விருப்பைத் தெரியப்படுத்துவதாக அமைகின்றன அதற்கான விடைகள்:

“காவல் அரணோ மச்சான் கள்ளருக்கு முள்ளரணோ? வேலி அரணோ மச்சான் வேணுமென்ற கள்ளனுக்கு?” அதாவது துணிந்தவனுக்கு தூக்குமேடை துச்சம் என்பார்களே அது போன்று நீ துணிந்தால் என்னை அடையலாம். இவை எல்லாம் ஒரு அரணா? அது மட்டுமன்றி வருவதற் கான சில உபாயங்களையும் உணர்த்தி அதற்கான வழியையும் சொல்லிக் கொடுக் கின்றாள். அவனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு இருக்கின்ற அவனது காதலி: “வெற்றிலையைக் கைப்பிடித்து வெறும் புளகை வாயிலிட்டு சுண்ணாம்பு இல்லை யென்று சுற்றிவரலாகாதோ?” சும்மா வெற்றி லையைக் கையிலை வைத்துக்கொண்டு கொஞ்சம் சுண்ணாம்பு தாருங்கள் என்று கேட்டு வரலாம் தானே! எனது பெற்றோர் இருக்கும் நேரத்திலேயே நீ வரலாம் தானே? என்று அவள் வழி காட்டுகின்றாள். “நித்திரைக் கண்ணிலையும் நினைவிலையும் தோணுவது கலிமா (ஐந்து) விரலும் மச்சான் கல்பதித்த மோதிரமும்” என்று உன் நினை வாகவே நான் இருக்கின்றேன் என்று உணர்த்துகின்றாள். அது மட்டுமன்றி பெண் ணின் அழகினை ஆண்கள் வர்ணிப்பது போன்று ஆணையும் வர்ணிக்கும் பாங்கு இந்தக் கிராமியப் பாடல்களில் உண்டு. விரகதாகத்தில் கட்டுண்டு காதல் வயப்பட்ட வள், நீதான் எனது நாதன் உன்னில் நான் மயங்கிவிட்டேன், நீதான் என்வாழ்வு என்ப தனை உணர்த்துவதாக அவள் குறிப்பு: “வட்டமுகமும் உந்தன் வடிவிலுயர் மூக்க ழகும் கட்டு உடலும் மச்சான் என்கருத்த ழியச் செய்யுதுகா” என்று அவள் அவனின் கட்டுடல் பற்றிக் குறிப்பிட்டு அவனை வர்ணி க்கின்றதோடு உன் நினைவாகவே இருக் கின்றேன் என்பதனை உணர்த்துகின்றாள்.

அவனும் விட்டுவிடுவதாக இல்லை. அவளை நோக்கி ஒரு போடு போடுகின்றான். அவ ளின் உடல் மினுமினுக்கின்றது. அழகில் ஒலிக்கின்றது என: “தங்கத்தகடோ எந்தன் தகதகத்த பொன்தகடோ வெள்ளித்தகடோ உன்னை விலைமதிக்கக் கூடுதில்லை” அவள் மிக விலையுயர்ந்த சந்தன மரத்தை நீ அணுக வேண்டுமாயின் இந்த இடத்தில் போய்ப் பார்க்கலாம் என்று, தான் நீர் மெள்ளப்போகும் இடத்தையும் நேரத்தையும் குறிப்பிடுகின்றாள்:“சந்தன மரத்தை மச்சான் சந்திக்கவேணும் எண்டால் பூவலடிக்கு மச்சான் பொழுதுபட வந்திடுங்கோ” அது மட்டுமன்றி நீ எனது வீட்டுக்கு அண்மை யில் வந்து ஒரு சிறு சத்தம் எழுப்பினால் நான் எழுந்து வரமாட்டேனோ என்று உணர்த்துகின்றாள்: கடப்படியில் வந்து நின்று காளை கனைக்குமென்றால் எங்கி ருந்தபோதும் நாகு எழுந்து வரமாட்டாதோ”. களவு வழியில் சந்தித்துக்கொண்ட தலை வனையும் தலைவியையும் கண்டுகொண்ட வர்கள் அதனை பெண்ணின் தாய் தந்தை யருக்கு உணர்த்தும் தன்மை மிகவும் சுவை தருவதாகவும் கவி நயம் சொட்டு வதாகவும் அமைந்து காணப்படுகின்றது. “வெள்ளைக் கிடா நாம்பன் வீசு கொம்பன் தாமரையன் பள்ளத்து வெள்ளாமையை பால்பறக்கத் தின்னுதங்கே”. அதாவது மிக அழகான மாவெள்ளை நிறத்தை உடைய வன் உனது மகளின் காதலன், பார்ப்ப தற்கு மிடுக்கான தோற்றமுடையவன், தாமரைப் பூப்போன்ற முகத்தை உடைய வன் நீ விதைத்து வளர்த்த பயிரை மேய் கின்றது என்று மறைமுகமாகக் கூறும் ஆற்றல் சர்வசாதாரணமாக உவமான உவ மேயங்களைக் கூட்டி இரட்டைப் பொருளில் தரும் தன்மை கிராமியப்பாடல்களின் மெருகை மேம்படச் செய்கின்றன. இதனைக் கேள்வியுற்ற தந்தை கோபத்தோடு வந்து இந்த நேரத்தில் இவ்வளவு தடைகள், காவல்கள் இருந்தும் இதற்குள் யாரோ ஒருவன் வந்துள்ளானே அவன் யார் என்று தந்தை கோபாவேசமாக தாயிடமும் மகளிடமும் கேள்வி எழுப்புகின்றார்.

“திடுதிடென்று மழை பொழியத் திட்டியெல் லாம் தண்ணி நிற்க மருதையடி நாய் குலைக்க அங்குவந்த கள்ளன் யாரோடி”.

தனது மனதுக்கினியவள்தனியாகப் போகும் போது தனது விருப்பத்தினை அவள்மீது கொண்ட காதலை அந்தக் காளை இவ் விதம் வெளிப்படுத்துகின்றது: “மான்போல் நடைநடந்து மயில்போல் சிறகொதுக்கி தேன்போல் குதிகிளம்பி என்ரை சின்ன வண்டு போறதெங்கே” தனது காதலனுக் காகக் காத்திருக்கும் கன்னி அவன் வரு கைக்காகக் காத்திருக்கின்றாள். அவனது வரவின் ஒலியைக் கேட்க இடையூறாக கடல் அலையோசை, கிணற்றிலிருந்து நீர் அள்ளும் ஒலி என்பனவற்றோடு மற்றவர் களின் கண்களில் பட்டுவிடாமல் இருப்ப தற்கு அவளுக்கு இருளும் தேவைப்படு கின்றது. எனவே அவள் இயற்கையிடம் கேட்கின்றாள்: “கடலே இரையாதே கற் கிணறே பொங்காதே நிலவே எறியாதே என் நீல வண்டார் வருமளவும்” கன்னிமை அடைந்துவிட்டாள், பருவக் கோளாறு காதல் தேவனின் மலர்க்கணை வீச்சுக்கு இலக்காகி விட்டால் விரகதாகம் தூண்ட அவள் தூதுவிடுகின்றாள். அன்பாகப் பழ கும் ஆதங்காக்காவிடம்: “ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக்கண்டால் சொல்லி டுங்கோ பூவரசம் கன்னியொன்று பூ மலர்ந்து போச்சுதென்று” என ஆணும் பெண்ணும் சேர்வதிலே சுகம் எத்தனையோ அப்படியே இந்தக் காதல் பாடல்களும் அமைகின்றன. இளவயதுக்கன்னியை மன திலிருத்தி தனது உள்ளக்கிடக்கையை வெளிக்கொண்டுவரும் பாணியில் பாடப்பட இதற்கு பெண்ணாக பதில் தரும் பாணியிலும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்கள் காட்டும் களவழிக் காதல் முறைகளை நாம் கிராமிய வாழ்க் கையில் காணும் பாங்கில் இவை அமைந் துள்ளன. உண்மையான வாழ்வியலோடு ஒன்றிவிட்டவையாக காதல் காவியங்களாக இவை மக்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து விடுகின்றன.



# சிறுகதை - வசீகரம்

- ராபியா குமாரன் -

நேர்முகத் தேர்வுக்காக காத்திருந்த அன்வரின் மொபைல் போன் ஒலித்தது. போனை ஒன் செய்த அன்வர் "சொல்லுடா.." என்றான்.

"எங்கடா இருக்க... இண்டர்வியூ போனியே என்னாச்சு.." என்றான் எதிர் முனையில் பேசிய அன்வரின் நண்பன் ரமேஷ்.

"மூணு ரவுண்ட் கிளியர் பண்ணிட்டேன்டா.. கடைசி ரவுண்ட் ஹெச்.ஆர். ரவுண்டுக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேன்..." என்றான் அன்வர்.

"ஓ.. ஓ.கே.டா.. நல்லா பண்ணு.. ஆல் தி பெஸ்ட்... நான் அப்பறமா கோல் பண்றேன்" என்று ரமேஷ் கூறியதும், "தங்க்யூடா.." என்று பதிலளித்துவிட்டு போனை கட் செய்தான் அன்வர்.

ஹெச்.ஆர். அறைக்கு வெளியே காத்திருந்த அன்வருக்கு உள்ளே இருந்து அழைப்பு வந்ததும் எழுந்து அறையினுள் சென்றான்.

"மேய் ஐ கம் இன் சார்..."

"எஸ்.. கம் இன்.. ப்ளீஸ் டேக் யுவர் சீட்..."

"தங்க்யூ சார்..."

"குரூப் டிஸ்கஷன்ல ரொம்ப நல்லா இங்கிலீஷ்ல பேசுனீங்க... இந்த ரவுண்ட்லையும் இங்கிலீஷ்லையே பேசி உங்க இங்கிலீஷ் நொலேஜை டெஸ்ட் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. சோ.. நாம தமிழ்லையே பேசலாம்.." என்றார் ஹெச்.ஆர்.

"சரிங்க சார்..." என்றான் அன்வர்.

"உங்களோட சர்டிபிகேட் எல்லாம் பார்த்தேன்.. நல்ல மார்க் வாங்கியிருக்கீங்க ... உங்களோட ப்ராஜக்ட்டும் ரொம்ப நல்லா இருந்தது. கிட்டத்தட்ட உங்களுக்கு இந்த வேலை கிடைச்ச மாதிரிதான். நீங்க எதிர்பார்க்கிற சம்பளமும் கிடைத்துவிடும்.."

"தங்க்யூ சார்..."

"ஆனால் கம்பெனி ரூல்ஸ் படி தாடி வைக்கக் கூடாது. தாடியை எடுக்குறதுக்கு உங்களுக்கு ஓகேன்னா இப்பவே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை வாங்கிக்கலாம்..." என்றார் ஹெச்.ஆர்.

"சொரி டு ஆஸ்க்.. எதற்காக சார் தாடியை எடுக்கணும்..." என்றான் அன்வர்.

"இது கம்பெனி ரூல்ஸ்... ஏன் எதற்கு என்றெல்லாம் கேள்வி கேட்க முடியாது..."

"ரூல்ஸா இருந்தாலும் அதுக்கு ஒரு காரணம் இருக்குமே சார்... தாடியால என்னோட வேலை ஏதும் தடைப்படுமா..? தாடி வைக்கிறதுனால என்னோட திறமையோ, கற்கும் திறனோ குறையப் போகுதா..? ஏதாவது நியாயமான காரணம் இருந்தால் தானே எதையும் செய்ய முடியும்..?"



"ஓ.. ஓகே.. நீங்க எதற்காக தாடி வச்சுருக்கீங்க.. அதுக்கு என்ன காரணம்... ?" என்று ஹெச்.ஆர் கேட்ட கேள்விக்கு,

"தாடி வைக்கிறதுனால நிறைய நன்மை இருக்குது சார்.. அதனாலதான் வச்சுருக்கேன்.." என்று பதிலளித்தான் அன்வர்.

"நன்மையா..? தாடி வைக்கிறதுனாலையா..? சும்மா ஏதாவது சொல்லணும் என்பதற்காக நன்மை அது, இதுனு சொல்லாதீங்க.." என்று நக்கலாய் சிரித்தார் ஹெச்.ஆர்.

"இல்லை சார்.. அப்படி இல்லை.."

"தெரியும் மிஸ்டர் அன்வர்.. நீங்க ஒரு முஸ்லிம், உங்களோட மத வழக்கப்படி தாடி வச்சுருக்கீங்க இதுதானே உண்மை..?"

"இஸ்லாமிய வழக்கப்படி தாடி வைக்க வேண்டும் என்று இருந்தாலும் அது ஏதோ மூட நம்பிக்கையாலோ, அர்த்தமற்றோ சொல்லப்பட்டது இல்லை சார். விஞ்ஞானப் பூர்வமாக பார்த்தால் உடல் ஆரோக்கியத்தில் தாடி முக்கியப் பங்கு வகிக்கிறது. அதன் காரணமாகத்தான் தாடி வைக்கும்படி இஸ்லாம் சொல்லுது..."

"வாட் யூ ஆர் டாக்கிங் அன்வர்.. அழகா ஷேவ் பண்ணி முகத்தை பளபளப்பா வச்சுக்காம அசிங்கமா தாடி வளர்க்கிறதுல என்ன ஆரோக்கியமான விடயம் இருக்கு..?"

"நிறைய இருக்கு சார்.. தாடி நமது முகத்திற்கு ஒரு கவசம் மாதிரி.. தாடி வைக்கிறதுனால முகம் எப்பொழுதும் குளிர்ச்சியா இருக்கும்.. கன்னமும், தாடையும் பாதிக்காமல் தாடி பாதுகாக்குது... தாடி முகத்துல படர்ந்து இருக்குறதுனால Sebaceous என்ற சுரப்பி சுரக்கிறது. இந்த சுரப்பி கரும் புள்ளிகள், முகப் பருக்கள் ஏற்படாமல் பாதுகாக்குது. தாடி வளர்க்கிறதுனால சூரிய ஒளிக் கற்றைகள் நேரடியாக சருமத்தை அடைவதை தடுத்து தொண்டை, பற்களின் ஈறுகள் சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்க்கமுடியும். பல்வலி வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. ஒளிக் கற்றைகள் நேரடியாக முக சருமத்தை அடையும்போது தோல் வலுவிழந்து முகத்தில் சுருக்கம் ஏற்பட ஆரம்பிக்கும். தாடி வைத்தால் சின்ன வயதிலேயே முகத்தில் சுருக்கம் ஏற்பட்டு வயதான தோற்றம் ஏற்படாது. முக்கியமா சுவாசக் கோளாறுகள் இருக்காது. இது எல்லாமே விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மைகள் சார். அதனால்தான் முஸ்லிம்கள் தாடி வைத்திறதுக்கு முக்கியத்துவம் கொடுக்குறாங்க.."

'வாவ்.. தாடி வைக்கிறதுல இவ்வளவு நல்ல விடயம் இருக்கா.. கிரேட்.. எனக்கு எவ்வளவோ முஸ்லிம் பிரண்ட்ஸ் இருக்காங்க.. அவங்களிடம் ஏன் தாடி வைக்கிறீங்கனு கேட்டா.. சும்மா.. இஸ்லாத்துல தாடி வைக்க சொல்லிருக்கு.. அதனால வச்சுருக்கோம்னு சொல்லுவாங்க.. இந்த அளவுக்கு தாடியைப் பற்றி யாரும் விளக்கிச் சொன்னது இல்லை.. தங்க்யூ.. எல்லாம் சரிதான்.. ஆனால் தாடி வைக்கிறது பார்க்க அசிங்கமா இருக்குமே...?"

"அது உங்களோட பொய்ண்ட் ஒஃப் வியூ சார்.. உங்களோட தனிப்பட்ட ரசனை. என்னைப் பொறுத்தவரை தாடி வைக்கிறது தான் எனக்கு அழகா இருக்கு. உங்களோட ரசனையும், மத்தவங்களோட ரசனையும் ஒண்ணா இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. எப்படிப் பார்த்தாலும் உங்களோட கருத்து தவறு சார். ஆண்களுக்கு தாடிதான் சார் அழகு. Robert J. Pellegrini என்ற கலிபோர்னிய யுனிவேர்சிட்டி மனோதத்துவ நிபுணரின் ஆராய்ச்சியில் தாடி வைத்திருப்பவர்கள்தான் தோற்றத்தில் கம்பீரமாகவும், அழகாகவும், கவர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதாக கண்டுபிடிச்சுருக்காரு. சொல்லப்போனா நிறைய அறிஞர்களும், சாதித்தவர்களும் தாடி வச்சுருக்காங்க.. சோக்ரடீஸ், சாள்ஸ் டார்வின், ஆபிரகாம் லிங்கன், தாகூர், பெரியார் இப்படி மற்ற மதத்தினரும், கடவுளே இல்லைன்னு சொன்னவங்களும் தாடி வச்சுருக்காங்க. அவங்களெல்லாம் அழகா இல்லையா..? ஏதும் சாதிக்கலையா..? தாடிக்கும், மதத்திற்கும் முடிச்சு போடுவதும், தாடியை அலங்கோலமாகப் பார்ப்பதும் சரியான அணுகுமுறை இல்லை சார். மோர் ஓவர் தாடி வைக்கிறது என்னோட தனிப்பட்ட உரிமை. என்னோட உரிமையைவிட்டுக் கொடுத்தால் தான் இந்த வேலை எனக்குக் கிடைக்கும்னா அப்படிப்பட்ட வேலையே எனக்கு தேவையில்லை சார்.."

"யெஸ்.. நவ் ஐ அக்ரி.. புரிஞ்சுக்கிட்டேன்.. தாடிக்கு பின்னால் இவ்வளவு விடயங்கள் இருக்கிறது இப்பதான் எனக்குத் தெரியுது. தங்ஸ் அன்வர். உங்களோட தைரியமான பேச்சும், பரந்த அறிவும், நல்ல சிந்தனையும் தான் எங்க கம்பெனிக்குத் தேவை. வேலை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தனி மனித உரிமைதான் முக்கியம் என்று பேசிய உங்களோட மன தைரியமும், துணிச்சலும், கொள்கையும் ரொம்பப் பிடிச்சுருக்கு.. யூ ஆர் செலக்டட்.. இன்னும் ரெண்டு நாள்ல வேலையில் ஜொயிண்ட் பண்ணிடுங்க.."

"தங்க் யூ சார்.." என்ற அன்வரின் முகத்தில் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது.

இருவரும் கைகுலுக்கி விடை பெற்றனர். வேலை கிடைத்த மகிழ்ச்சி அன்வரின் மனதிலும், தாடியே முகத்திற்கு வசீகரம் சேர்க்கிறது என்ற உண்மையைப் புரிந்து கொண்டதன் மகிழ்ச்சி ஹெச்.ஆரின் மனதிலும் நிரம்பியது. இரண்டு நாட்கள் கழித்து அன்வர் வேலையில் ஜொயிண்ட் பண்ண வந்தபோது ஹெச்.ஆரின் முகத்தில் தாடி அரும்பத் தொடங்கியிருந்தது.

# இயற்கையும் மனிதனும்

இரு பந்துகளோடு இறைவன் ஆணைப் படைத்தான்
ஒரு பொந்தோடு அவனே பெண்ணையும் படைத்தான்
இருவரும் சேர்ந்து குடும்பத்தைப் படைத்தனர்
குடும்பங்கள் யாவும் ஒன்று சேர்ந்து இனத்தைப்படைத்தன
அடிபடும் இனங்கள், அலட்சியஞ் செய்தன. இயற்கையின் மதிப்பை
காட்டை அழித்து நாடாக்கியும், களனிகள் அழித்து வீடாக்கியும்
கண்டபடி நடந்து, குப்பைகள் குவித்தனர், காற்றையும் மாசுபடுத்தினர்
இயற்கையன்னை சீற்றங் கொண்டாள், இதனால்
அடைமழையும், அடங்காக்காற்றும், அதிக வெள்ளமும்
சூறாவளியும் சுழற்காற்றும் சுட்டெரிக்கும் வெய்யிலும்
சுனாமியும், வெடித்துக்கிளம்பும் எரிமலையும்
எங்கும் தாண்டவமாடின, ஏராளமான மக்கள்
மடிந்து போயினர், ஆறாத்துயரால் சிலர் அவதிப்பட்டனர்
எனவே இயற்கையை மதிப்போம், சூழலைப் பாதுகாப்போம்
என்ற சகற்பம் யாவரும் செய்வோமாக!



- துரையூரான் -



# பாலாவின் ஓவியங்கள்

- மைதிலி தயாநிதி -

பாலா பாலச்சந்திரன் அவர்களின் ஓவியங்கள் (acrylic paintings) ரொறன்ரோ ரிச்மண்ட் ஹில்லில் உள்ள மில் பொண்ட் கலையகத்தில் (Mill Pond Art Gallery) டிசம்பர் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பிரயாணம் செய்வதில் ஆர்வமும், காடுகளில் முகாமிட்டு இயற்கையின் மடியில் அமைதி காண்பதில் விருப்பும் கொண்ட பாலா கனடாவிலும் ஏனைய



நாடுகளிலும் தான் கண்டு அனுபவித்த நாட்டுப்புற, நகர்ப்புறக் காட்சிகளை ஓவியங்களாக வடித்துள்ளார். நிலக்காட்சி, மனிதர்கள், விலங்குகள், பறவைகள், மலர்கள் என அவர் சித்திரப் பொருள்கள் வேறுபடுகின்றன. ஓவிய அனுபவங்களும் பார்வையாளர்கட்கேற்ப வேறுபடலாம். இவ்வகையில் கவிதைக்கும், ஓவியத்திற்கும் அதிக வேறுபாடில்லை. இரண்டுமே குறியீடுகளால் உருவாக்கப்படுபவை. வெவ்வேறு புரிதல்களுக்கு உட்படுத்தப்படுபவை.

இவரது நிலக்காட்சி ஓவியங்கள் விசேட கவனம் பெறத் தகுந்தவை. இவற்றுட் பல மனித உருவங்களை உள்ளடக்கியுள்ளன. இவை மனிதரை இயற்கையின் அங்கமாகப் பார்க்க முயல்வனவாயும், 'செயலற்ற மோன நிலையில்' மனிதர் இயற்கையுடன் ஒன்றி நிற்பதை உணர்த்துபவையாயும் எனக்குத் தோற்றுகின்றன. விசேட நுட்பத்துடன் படைக்கப்பட்ட மழைநாள் ஓவியமும், மற்றும் கனேடிய இலையுதிர்கால ஓவியமும் மனம் கவர்ந்தவை. ஒன்ராரியோ ஆர்ட் கலறியில் உள்ள குதிரை வண்டி ஓவியங்களை நினவுபடுத்தும் பாலாவின் Tired, sweetie? என்ற தலைப்பிடப்பட்ட ஓவியம், மனிதக் குழந்தையிடத்து மிருகங்கள் வாஞ்சை காட்டுவதாய் அமைந்துள்ளது. தொலைவில் உயர்ந்துதெரியும் மண்ணிற மலைகள்,பசிய இலை மரங்கள் என்பனவற்றின் பின்னணியில் கவனத்தினை ஈர்க்கும் மையப் புள்ளியாய் விளங்கும், ஒரு பக்கச்சுவரின் பகுதி ஒன்று உடைந்து விழும் நிலையில் உள்ள மனிதனால் அமைக்கப்பட்ட ஒரு சிறுவீடு கொண்ட ஓவியம் பார்ப்பவருக்கு வெவ்வேறு எண்ணங்களை உண்டாக்க வல்லது. மனித முயற்சிகளின் பலவீனங்களைச் சுட்டி நிற்பதாக எனக்குப் பட்டது.

பாலா அதிக மன அழுத்தம் கொடுக்கும் வேலையினின்று இளைப்பாறிய ஒரு இயந்திரப் பொறியியலாளர் ஆவர். ஓவியம், கரிம வேளாண்மை (organic farming) எனும் இருதுறைகளிலும் தற்பொழுது முனைப்புடன்



ஈடுபட்டு வருபவர். அவர் தன் வாணாளில் முதன்முதலில் ஓவியத்தினை முறையாகப் பயிலத் தொடங்கியது ரொறன்ரோவில், அதுவும் 65 வயதில் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்தான். இளைப்பாற்றுக் காலத்தில் கிடைக்கும் நேரத்தினை மகிழ்ச்சியாகக் கழிக்கும் நோக்கில் ஓவியப் பயிற்சி வகுப்புகளிற்குச் செல்ல ஆரம்பித்தவர்.

ஓவியம் மூலமாக முன்பொருபோதும் உணர்ந்திராத தனது ஆளுமையின் புதிய பரிணாமம் ஒன்றினைத் தான் கண்டடைந்திருப்பதாகவும், இளைப்பாற்று வாழ்க்கை தான் முன்பு நினைத்திருந்ததை விட மிகவும் ஆனந்தமானதாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார். தொடர்ந்தும் ஓவியப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் பாலா ஓவியக் கலை மூலமாகப் பல்வேறு சமூகங்களிலிருந்து புது நட்புகளையும் தான் பெற்றிருப்பதாகக் கூறுகின்றார்.

பாலா ஆக்கத்திறன் கொண்ட முதுமை (Creative aging ) எனும் சமூகவியலாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்தாக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுத்து வருபவர். முதுமையானது தனி நபர் ஒருவரின் வளர்ச்சிக்கும், ஆக்கத்திறன் விருத்திக்கும்,

(தொடர்ச்சி 42 ஆம் பக்கம்...)

JOBS! JOBS! JOBS!

Reach
Personal Recruitment Services

JOB OPENINGS IN SCARBOROUGH, TORONTO ,CONCORD, MISSISSAUGA & BRAMPTON

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவுக்கு புதிதாக வந்தவர்கள், மொழி பிரச்சனை உள்ளவர்கள், தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம்

The following are positions for which we offer temporary, part-time, contractual and full-time

- General Labour
- Electricians
- Mechanics
- Millwrights
- Office Assistants
- Information technology
- Accounting
- Transportation
- Industrial Construction
- Forklift Operators
- Manufacturing
- Skilled Tradesmen
- Construction
- Truck Drivers
- Machine Operators
- CNC Operators
- Receptionists

Reach Personal Recruitment Services
1585 Markham Road Suite 406
Office: 416.901.6253 Cell: 647.533.0492
email: reachprservice@gmail.com Website: www.reachprs.com

# நான் சொல்வதைப் போலவே வாழ்கிறேன்

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 243

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897

லலிதா புருடி



நான் சொல்லும் கதை எனது உண்மையான வாழ்வைப்பற்றியது தான் என்பதை அங்கீகரித்ததும் எனது சுயதகுதியை நன்கு புரிந்து கொள்வேன்.

இங்கே பார்! உனது கதையை இன்னொரு முறை கேட்கஒருவருக்குமே விருப்பமில்லை. ஆனால் உனக்கு விருப்பமில்லாத இந்த நிலையிலிருந்து ஏன் நீ விலகிப் போகவில்லை, விட்டுப்போக முடியாமல் இருக்கிறது. பிரச்சனையை விட்டு முன்னேற ஏன் கஷ்டமாயிருக்கிறது என எல்லோருக்கும், நீ சொல்வது கேட்கும் எவருக்கும் நீ சொல்லிக் கொண்டு திரிகிறாய். உன் மனதைப் புண்படுத்த விருப்பமில்லை. ஆனால் உண்மை என்னவென்றால், நீ சொல்வதைக் கேட்க ஒருவருக்குமே விருப்பமில்லை.

இத்துன்பகரமான நிலையிலிருந்து விடுபட நீ செய்த அல்லது செய்யாத யாவற்றிற்கும் நீ பொறுப்பில்லை. வேறு யாரோதான் காரணகர்த்தா என உனக்கும், பிறருக்கும் நீ நீரூபிக்கப் பார்க்கிறாய் போலிருக்கிறது. ஆனால் நீ சொல்வதை ஒருவருமே நம்பவில்லை. நீயும் நம்பவில்லை போல்தான் தெரிகிறது. அதனால் தான் உனது அந்தக் கண்ணீர்க் கதையை, துன்ப சாகரத்தை நாடக பாணியில் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இனிப் போதும், இதை நிறுத்து!

உ ன க் கு




இழைக்கப்பட்ட அநீதிகளையெல் லாம் செய்வதற்கு உனது எதிரி அவ்வளவு கெட்டவனல்ல. உனது கதையின் கருவைக் காணவில்லையே? ஒரே சிக்கலாகவல்லவா இருக்கிறது? விவரித்து விளக்குவதற்குப் பதிலாக உனது தவறுகளின் காரணத்திற்கான பிரலாபமாகவல்லவா உனது கதை இருக்கிறது? விரும்பிய வாழ்வை நீ அமைக்காததற்கான பொறுப்பை நீ ஏற்காது உனது கதையால் உனது பயத்தையும் தோல்வியையும் மறைக்கப் பார்க்கிறாய் போலல்லவா தோன்றுகிறது? நீ நன்றாகத்தான் கதை சொல்கிறாய். திடீர் திருப்பங்களுடன் சுவராஸ்யமான கதை. காப்பாற்றப்பட வேண்டிய பல பலிக்கடாக்கள். ஆனால் உனது தகுதியை நிர்ணயிக்க வேண்டியது நீதான் என்றபடியால் நான் ஒன்று சொல்கிறேன். உனது கதையை நீயே இன்னுமொரு தடவை திருப்பி எழுது. இப்போ முன்னொரு காலத்தில் என்று ஆரம்பிக்காதே.

உனது கதையில் பழைய பல்லவியையே மீண்டும் மீண்டும் இன்றுவரை நீ பாடிக் கொண்டு வந்திருக்கலாம். உனது முன்னேற்றத்தை தடுத்திட எவரோ, ஏதோ உன்னைப் பிடித்து வைத்திருக்கின்றது என நீ சாக்குப் போக்குக் காரணம் காட்டி வந்திருக்கலாம். இன்று ஒரு புதிய கதையை உனக்கு நீயே சொல்ல ஆரம்பித்து விடு. உனது கதையில் முதல் சொற்களாக ‘இன்று நான்’ என ஆரம்பித்து உனது சிருஷ்டிப் புறாவைக் கட்டவிழத்துப் பறக்க விடு.

**என் வாழ்வின் வெற்றி என் கைகளில் தான் இருக்கிறது என்பதால் என் கதையை திருப்பி எழுதும் முயற்சியில் இன்றுமுதல் ஈடுபடப்போகிறேன்.**



# தவறு செய்தால் தான் மனிதன்!

## நடிகர் விஜய் சேதுபதி நேர்காணல்

### சந்திப்பு: கண்ணன்

“சாதாரண குடும்பத்தை சேர்ந்த எனக்கு இன்று நல்ல நடிகன் என்ற அடையாளமும் தமிழ் ரசிகர்களின் அன்பும் கிடைத்திருக் கிறது. ஆனால், ஆரம்பத்தில் கும்பலில் ஒருவனாக நின்றபோது, நடிப்பு வரவில்லை என்று நிராகரிக்கப்பட்டவன் நான். தொலைக் காட்சி தொடரில் நடிக்கும்போது முகத்தில் எந்தவித உணர்ச்சி வெளிப்பாடும் எனக்கு வராது. ஸ்டில் கேமராவுக்கு முன்னாடி நிற்கும்போதுகூட பயந்திருக்கிறேன். சீதா, டெல்லிகணேஷ் போன்ற மூத்தவர்களுடன் நடித்தபோது நிறையவே பயப்படுவேன். தாழ்வு மனப்பான்மை இருக்கும். இயக்குநர் சி.ஜே. பாஸ்கர், “யாரைப் பார்த்தும் பயப் படாதே” என்று அறிவுரை கூறியிருக்கிறார். இப்படி கற்றுக்குட்டியாக இருந்தவனுக்கு திரைப்படம் எப்போது புரிய ஆரம்பித்ததோ அப்போதே பிடித்த தொழிலாகவும் மாறியது. சாப்பாட்டுக்கு மட்டும்தான் திரையுலகம் என்று நினைத்தேன். ஆனால், இன்று ஒரு தொழிலாக நேசிக்கிறேன்.” “எல்லா தரப் பினருக்கும் பிடித்த நடிகராக இருக்கிறீர்கள். இந்த வெற்றியை எப்படி உணர்கிறீர்கள்?” என்று கேள்விக்கு விஜய் சேதுபதி அளித்த பதில்தான் இது. யதார்த்தமாகவும் இயல் பாகவும் பேசுகிறார் விஜய் சேதுபதி.

‘மக்கள் செல்வன்’ பட்டத்திற்கு ஆகச்சிறந்த பொருத்தம் விஜய் சேதுபதி. அரியலூர் மாணவி அனிதா தற்கொலை செய்த சம்பவம் எல்லோரையும் போலவே அவர் மனதையும் பிசைந்திருக்கிறது. ஆனால், மற்றவர் செய்யாத ஒரு காரியத்தை விஜய் சேதுபதி செய்தார். கல்வி வசதியில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கும் அரியலூர் மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 50 லட்சம் ரூபாய் அளித்தார். விஜய் சேதுபதியின் கருணை உள்ளத்திற்கு இது ஒரு சோறு பதம்தான். எந்த விளம்பரமும் இல்லாமல் நிறைய உதவிகளைச் செய்து வருபவர் விஜய் சேதுபதி என்பது, கோலிவுட் வட்டத்திற்கு நன்றாகவே தெரியும். ஒரு சாதாரண நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்து, சராசரி மாணவனாக வளர்ந்து வந்த விஜய் சேதுபதி, இன்று தமிழ் திரையுலகில் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், ரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, நல்ல கலைஞனாக ஒளி வீசிக்கொண்டிருக் கிறார். அவருடன் ஒரு சந்திப்பு.



**வித்தியாசமான பாத்திரங்களை தேர்வு செய்து நடிக்கிறீர்கள். அலட்டிக்கொள்ளாமல் அசால்ட்டா எல்லாவற்றையும் பண்ணுகிறீர்கள். எப்படி?**

எனக்குள் இருந்த எதிர்மறை எண்ணங்களை கடந்துதான் இந்த இடத்துக்கு வந்திருக் கிறேன். நல்ல கேமரா, நல்ல வசனம், நல்ல தொழில்நுட்பக் கலைஞர்கள் இருந் தால் மட்டும் நல்ல நடிப்பு வந்திடாது. அது அம்மா சாப்பாடு மாதிரி. சமையலோடு அம்மாவுடைய அன்பும் ஈடுபாடும் சேர்வதால் தான் அந்த சாப்பாட்டுக்கு அப்படியொரு ருசி கிடைக்கிறது. ஒரு செயலை ஈடுபாட்டு டன் செய்யும்போது, அந்த ஈடுபாடே உங்க ளைக் கையை பிடித்து அழைத்துக் கொண்டு போகும். அது தனி அனுபவம்.

**ஆனால், நடனமாடும் போது திணறுகிறீர்களே?**

ஆமாம், நடனத்தில் தட்டியாகத்தான் இருக்கிறேன். இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமா வருகிறது. ஆட ஆட வந்திடும் என்று நினைக்கிறேன்.

**திரைக்கு வருவதற்கு முந்தைய உங்கள் வாழ்க்கை பற்றி சுருக்கமாக சொல்ல முடியுமா?**

எனக்கு ராஜபாளையம்தான் சொந்த ஊர். அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, தங்கையுடன் என்னையும் சேர்த்து ஆறு பேர் கொண்ட அழகான குடும்பம் எங்களு டையது. எங்கள் வீட்டில் இருந்து கொஞ்ச

(தொடர்ச்சி 41 ஆம் பக்கம்...)





# 366 நகைச்சுவைத் தொடர் ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



ரூபன் என்றோ வாங்கிக் கொடுத்த செல்போனையே உலகர் பார்த்துக்கொண்டிருந்தார். வழமையாக பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி, சித்திரை புதுவருடம், தீபாவளி...
எந்த தினமென்றாலும் முதலில் முரகேசரின் கோல் வரும். ஆனால் இன்றோ முருகேசருக்கு இன்றைக்கும் நாளைக்கும் வித்தியாசம் தெரியாமல் முக்கியமாக தான் யாரென்று தெரியாத நிலை. உலகர் இடையிடையே கோல்பண்ணி கதைத்தால்தான் உண்டு. முருகேசரைப்போல தன்னை மறந்து தன்நாமம் கெட்டு வாழ்பவர் எத்தனைபேர்? நாம் அவர்களை தெரிந்தும் தெரியாமல் வாழ்கிறோம்.



பொங்கல் விழா உலகெங்கும் பல்வேறு கோணத்திலும் பார்வையிலும் கொண்டாடப்பட்டது. ஆங்காங்கே வசதிக்கேற்ப இந்தமாதம் முழுவதும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.




கும்பத்திற்கு எத்தனை மாவிலை, எத்தனை பாக்கு, தலை வாழையிலை, எந்தப்பக்கம் வைக்கவேணுமென்று தெரியாமல் மரணச்சடங்கிற்கு வைக்கும் கும்பம்போல் (அமங்கலம்), மங்கல நிகழ்ச்சிக்கு (மங்கலம்) கும்பம் வைத்து பொங்கிய பலர் உண்டு.

சக்கரை சாதத்துடன் சலாமி சோசேச் குளிரான குடிவகையுடன் பொங்கி விழுபவர் பலபேர்.
மக்கள் பொங்குகிறார்களோ இல்லையோ பலரின் மனம் பொங்குகிறது.
உலகர் குழாமிற்கு பொங்கல் அமளிதுமளி இன்னும் முடியவில்லை




“ஐ கான்ற்..பிலீவ் திஸ்...” (என்னாலை நம்பவே முடியவில்லை)
“லுக் அற்..திஸ்” என்றபடி வந்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி. தனது செல் போனில் சீனாவில் கலப்படம் செய்து உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விற்கப்படும் பிளாஸ்ரிக் அரிசி மற்றும் மோசடி இறைச்சிவகை எல்லாவற்றையும் காட்டி ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் திகைத்துப்போனார்கள். உலகர் இதனை பெரிதுபடுத்தவில்லை. எப்போதே பத்திரிகையில் படித்துவிட்டார்.



இன்ரநெற், ஈமெயில், வடஸ்அப் அதாவது இவை இருந்தால்தான் கவுரவம், அந்தஸ்து என நினைப்பவர் மத்தியில் செல்போன் இல்லாமல் குறிப்பிட்ட நவீன தொலைத்தொடர்புகள் இன்றி பல லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தின, வார, மாதப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலக்கண இலக்கிய சமய சரித்திர புத்தகங்களை படித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்.



நாங்கள் நெல்லு அறுவடை செய்து சூரியனுக்கு பொங்கி படைச்சு நன்றி தெரிவிக்கிறோம். ஆனால் சீனாவிலை பிளாஸ்ரிக் அரிசிசெய்து உலகெல்லாம் விற்பனைக்கு அனுப்பினம். அவை அது செய்யிற பக்ரறியளுக்கு முன்னாலை கோலம் போட்டு பொங்க வேண்டியதுதான் என சொல்லிச்சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா.





இதற்கிடையில் வாயால் பந்தல்போட்டு வட்ஸ்அப்பில் வடைபாயாசம் செய்து பேஸ் புக்கில் வாழ்த்தும் லைக்கும் போட்டு நடுச்சாமத்தில் பல் விளக்காமல் படுக்கையிலிருந்தபடி பந்தங்களுக்கு பானையில் பொங்கி வருவதுபோல யாரோ உருவாக்கிய அனிமேசன் படங்களை அனுப்பி ஒவ்வொரு நிமிடமும் வரும் லைக்குகளை பார்த்து மகிழும் பரவச உலகம் இது. காலம் மாறிப்போச்சு!

உலகரின் மனம் உலகவலம் வந்தது. உலகமகா யுத்தத்தில் ஐரோப்பிய மக்கள் பாதிக்கப்பட்டதுபோல் யாரும் பாதிக்கப்படவில்லை. இன்று ஐரோப்பிய நாடுகள் சிதைந்த நாட்டை சீராக்கி வளப்படுத்தியது மட்டுமல்ல உலகநாடுகளில் இருந்துவரும் அகதிகளை அரவணைக்கின்றனர். நம்பிக்கையில்லாதவர்களை திருப்பியனுப்புகின்றனர்.

அகதியாக வந்தவர்களுக்கு இருப்பிடம், கல்வி, வேலைவாய்ப்பு குறிப்பாக மறுவாழ்வளிக்கின்றனர். உலக அரங்கில் ஆங்காங்கே அரசியல் பங்கேற்பும் பங்களிப்பும்... தமிழர் முத்திரை பதிக்கின்றனர்.ஆனால் பல நாடுகளில் தினம்தினம் சண்டை, ஆர்ப்பாட்டம், கலவரம், கொலை, கொள்ளை நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இலங்கை இந்திய அரசியலால் அன்றுமுதல் இன்றுவரை இறந்த இழந்த உயிர்கள் எத்தனை? அண்மையில் இலங்கைக்கு சமாதானம் நல்லாட்சியென ஏதோ ஒரு நாடு சான்றிதள் வழங்கியுள்ளது.

கடந்தவாரம் தமிழக தொலைக்காட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பான இடம் தமிழ்நாடென்று முக்கிய அரசியல்வாதி குறிப்பிட்டுள்ளனர்.
ஜெயலலிதா மரீனா கடற்கரையில் சசிகலா பெங்களூர் சிறையில் அப்படியானால்? அவர்களும் பெண்கள்தானே?



நான் எப்ப வருவேன் எப்பிடி வருவேன் என யாருக்கும் தெரியாது. ஆனா வரவேண்டிய நேரத்தில் வருவேன். ---ரஜனி
எல்லாம் சிவமயம். எனக்கு எல்லாம் பயமயம். - கமலஹாசன்



உலக அரங்கில் அரசியலும் சினிமாவும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்துள்ளன. செக்கண்ட்புளோர் செல்லம்மா தொடங்கினா... அரசியல் எண்டா சினிமா சினிமா எண்டா அரசியல். உலகர் சினிமா உலகினுள் சற்று நுழைந்தார். சீனி..மா..விலையான காலத்திலும் தவறாது எத்தனை சினிமா பார்த்திருக்கிறார்.



அமெரிக்காவின் 40ஆவது ஜனாதிபதியாக இருந்த றொனால்ட் றீகன் பிரபல நடிகர் .....ஆண்டுகள் ஜனாதிபதி பதவியில் இருந்தவர்.




ஒஸ்ரியாவில் பிறந்த ஆர்னோல்ட் சுவாசினேகர் அமெரிக்காவின் பிரபல நடிகர். கலிபோர்னியா மாநிலத்தின் 38ஆவது கவர்னராக இருந்தவர்.
சிவாஜி கணேசன் காமராஜருடன் நீண்டகாலம் அரசியலில் இருந்திருக்கிறார்.



டாயானாவின் இரண்டாவது மகன் விரும்பியிருப்பது ஒரு மேகன். இவர் ஒரு அமெரிக்க பிரஜை, நடிகை. லண்டனில் திருமணம் இந்த வருடம் மே மாதம் 18ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இனிமேல் பக்கிங்கெம் பலஸில் படப்பிடிப்புக்கள் நடந்தாலும் நடக்கும்.



எம்.ஜி.ஆர் (மருதுார் கோபால கிருஸ்ணன் ராமச்சந்திரன்) இலங்கையில் கண்டியில் பிறந்து தமிழ்நாடு சென்னையில் வாழ்ந்தவர். 1977- 1987. தமிழக முதலமைச்சராக 10 வருடங்கள் இருந்தவர்.
சமீபகாலமாக தமிழக அரசியலில் நடிக நடிகைகள்..கதாநாயகன் வில்லன் கொமெடியன் என அரசியலில் குதித்துள்ளனர். பலர் குதித்ததிலிருந்து மீளவேயில்லை. பலர் வாழ்வையே தொலைத்து விட்டு நிற்கின்றனர்.




இனி 2018க்கு வருவோம். கமல் ரஜனி அரசியல் பிரவேசம்.....ஒருபுறம்..ஜெயலலிதா மரண துப்புதுலக்கல் மறுபுறம். சசிகலாவின் தொடர் விசாரணைகள்.
சனி மாறுகிறதோ..குருமாறுகிறதோ இல்லையோ இவர்கள் மாறமாட்டார்கள்.

ஜனவரி 15 - 31.




16. அபிராமிப்பட்டர் தினம்.

17. மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்த தினம். 1917 ஆண்டு.



20. இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பமானது

25. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (நினைவுதினம்)





30. மகாத்மா காந்தி நினைவு தினம்

30. தைப்பூசம்

# இரவு தேவதை

அந்தி சாயும் நேரம்
வண்ணங்கள் வழி
நாணத்துடன்
பவனி வருகிறாள்


தன் வெளிச்ச உதடுகளை
மூடியபடி
மௌனமாய் வருகிறாள்

கறுப்பழகியவள்
பிறை சூடியன்றோ
கிரங்கடிக்கிறாள்

வெளிச்ச வரங்கள்
தந்து
வசியம் செய்கிறாள்

நட்சத்திரக் கவிச்சுடரில்
தீயாய்
ஜொலிக்கிறாள்

வெண் நுரைகளை
கால்களில் அணிந்து
நர்த்தனமாடுகிறாள்
கடலலைகளில்



அவளின்
தழுவல்களில்
பூமி அழகாகிறது

அதிகாலைப்
பனித்துளிகளில்
வண்ணமாய் மிளிர்கிறாள்

இதயத்தில் நிறைகிறாள்
இரவு தேவதை!

இரா சத்திக்கண்ணன்

# தவறு...

39 ஆம் பக்கத்தொடர்ச்சி

தூரத்திலேயே இருந்த பள்ளியில்தான் படித்தேன். தாத்தா தமிழ் வாத்தியார். அப்பா காளிமுத்து பொறியியலாளர். ஆனாலும், எனக்கு படிப்பு பெரிதாக வரவில்லை. 5-ஆம் வகுப்புக்குப் பின்னர் எங்கள் குடும்பம் சென்னைக்கு இடம்பெயர்ந்தது. முதலில் அயனாவரத்தில் ஒரு வீட்டில் குடியேறினோம். நான்கு ஐந்து மாதங்களில் அந்த வீட்டை காலி பண்ணிவிட்டு கோடம்பாக்கம் சென்றோம். அங்கேயும் நான்கைந்து வீடுகள் மாற்றிவிட்டோம். கோடம்பாக்கம், சாமியார்



மடத்தில் உள்ள எம்.ஜி.ஆர். பள்ளியில்தான் படிப்பை தொடர்ந்தேன். பத்தாம் வகுப்புக்குப் பின்னர் 11-ஆம் வகுப்பில் என்னை ஆங்கில வழி படிப்புக்கு மாற்றினார்கள். அது எனக்கு மேலும் சிரமமாக இருந்தது. அப்பா ஒருநாள் கூப்பிட்டார். "மனிதனாகப் பிறந்தால் ஏதாவது லட்சியம் இருக்கணும்டா. உன்னுடைய வாழ்க்கையிலும் ஏதாவது லட்சியம் வைத்துக்கொள். அப்போதுதான் எதிர்காலம் பிரகாசமா இருக்கும்" என்று சொன்னார். என்னைக் குறித்து அவருக்கு நிறைய கவலைகள் இருந்திருக்கும் என்று இப்போது உணர்கிறேன்.

பள்ளிப் படிப்புக்குப் பின்னர் கல்லூரியில் சேர்ந்தபோது பகுதி நேர வேலை பார்க்கலாம் என்று எண்ணினேன். அப்பாவின் பாரத்தை குறைப்போம் என்று அண்ணா நகரில் இருந்த 'லைஃப் ஸ்டைல்' துணிக் கடையில் 'சேல்ஸ் பாய்' வேலைக்குச் சேர்ந்தேன். சிறிது நாட்களில் அங்கிருந்து விலகி ஒரு துரித உணவுக் கடையில் வேலைக்கு சேர்ந்தேன். அதுவும் சிறிது காலம்தான். அதன்பின்னர்தான் ந. முத்துசாமியின் 'கூத்துப்பட்டறை' நாடகக் குழுவில் கணக்கு எழுதும் வேலை. அங்கிருந்து தடம் மாறி தொலைக்காட்சி தொடர்களில் துணை நடிகனாக முகம்காட்டினேன். அதன் பின்னரான கதை எல்லோருக்கும் தெரியும்.

தவறு செய்தால்தான் மனிதன். தவறு செய்யவேண்டும். பின்னர் அதை உணர்ந்து மன்னிப்பு கேட்கவேண்டும். ஒருவன் வாழ்க்கையில் எல்லாமே நடக்க வேண்டும். இல்லையென்றால் வயதான காலத்தில் தனியாக உட்கார்ந்திருக்கும்போது யோசித்துப் பார்க்கக்கூட எதுவும் இருக்காது. சிறு வயதில் தெரிந்தோ தெரியாமலோ நான் செய்த தவறுகளை இப்போது நினைத்துப் பார்க்கும்போது சிரிப்பாக இருக்கும். இப்போது பிரபல நடிகர். ஆனால், வயசாகும் போது பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இருக்காது. பிள்ளைகள் அவர்கள் வாழ்க்கையைத் தேடி ஓடும்போது எனக்கு சொந்த



மாக என்னுடன் இருப்பது என் நினைவுகள் மட்டும்தான்.

உங்களுடைய பொழுதுபோக்கு என்ன? தனியாக கார் ஓட்டப் பிடிக்கும். கேலிச் சித்திர படம் பார்ப்பேன். 'மிக்கி மவுஸ்', 'டாம் அண்ட் ஜெர்ரி' ரொம்ப பார்ப்பேன். என்றைக்காவது ஒருநாள் அந்த கேலிச் சித்திரங்களாகவே மாறிவிட மாட்டோமா என்கிற ஆசை இருக்கிறது. மனிதனால் உருவாக்கப்படும் அந்த உலகத்தில் சிரிப்பும் மகிழ்வும் மட்டும்தான் இருக்கிறது. ஆனால், நாம்தான் அவற்றைத் தொலைத்துவிட்டோம்.

## தைத்திங்கள் திருநாள் கனடாவில் தமிழ்மரபுத் திருநாள்



தமிழ்த்தாய் மக்கள் நாம் என்போம்
தமிழே எங்கள் மூச்சு என்போம்
மூத்த மொழிகளில் தமிழ் மொழியே
முதலில் வந்த மொழி என்றுரைப்போம்

எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நாம்
எங்கள் தாய் மொழி தமிழ் என்போம்
வேற்று மொழிதனை கற்றாலும் நாம்
வேண்டிய வேளையில் மட்டும் பேசுவோம்

எம்மவரை நாம் எங்கேதான் கண்டாலும்
எங்கள் மொழி தமிழிலே பேசிடுவோம்
வருவோரை வணக்கம்கூறி வரவேற்போம்
விடைபெறும் போது நன்றிகூறி அனுப்பிவைப்போம்

சொந்த நற்தமிழ்பண்பாடுகளில் அவை
சொல்லும் பழம் வரலாறுகளை படித்திடுவோம்
தமிழால் எங்களை நாம் இணைத்திடுவோம்
தமிழில் இசைபாடி என்றும் மகிழ்வோம்
வாழ்க தமிழ் வளர்க தமிழ்



கவிநாதம் பரந்தாமன்




# பாலாவின்

37 ஆம் பக்கத்தொடர்ச்சி

புதிய ஆற்றல்கள், வாழ்க்கை குறித்த புதிய மனநிலைப் பாங்குகள் என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்றதொரு காலம் எனும் கருத்தினையே ஆக்கத்திறன் கொண்ட முதுமை என்பது குறிக்கின்றது. ஓவியக்கலை மூலமாகப் படைப்பாற்றல்களைக் கூர்மைப்படுத்தி வருவதுடன், தனது சமூகத்தளத்தினையும் பாலா விரிவுபடுத்தி வருகின்றார்.



ஈழத்தமிழர்களிடையே ஓவியங்களுக்குப் பெரிய வரவேற்பு இருப்பதில்லை என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவுகின்றது. இதற்கான காரணங்கள் ஆராயப்படவேண்டியவை. "ஓவியத்தைப் பார்த்துப் பழக்கபட்ட பரிச்சயம் ஈழத்தமிழ் மக்களுக்கு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அத்தோடு ஓவியத்தை ஒரு கலை வடிவமாகத் தமிழ் மக்கள் அங்கீகரித்து இருப்பதாகவும் எனக்குத்தோன்றவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையப்பட்டு நல்லூர் சட்ட நாதர் கோவிலின் வாயிலில் கவினுறவே காட்சி தந்த வனப்பு மிகு ஓவியங்கள் பல வற்றின் மீது சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு



வெள்ளையடிக்கப்பட்டு விட்டது. ஆலயத்திற்கு அழகையும், தனிசிறப்பையும் கொடுத்துக் கொண்டிருந்த, காலவெள்ளத் தால் அழியாத ஓவியங்களுக்கே அந்த நிலை என்றால் எம்மவர் ஓவியக்கலையில் காட்டிய அக்கறையையும், அவர்தம் ரசனையையும் எண்ணிப்பாருங்கள்" என்று ஓவியர் மாற்கு செவ்வியொன்றில் வருத்தத்துடன் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது (படைப்பும் தேடலுலகமும், ஓவியர் மாற்கு சிறப்பு மலர், 1987, பக்கம் 1). அந்நிலை இன்று மாறியுள்ளதா என்று சொல்வதற்கில்லை "என்ன பிரயோசனம்?" என்ற கேள்வியே ஒரு முயற்சியைத் தொடங்குவதா இல்லையா என்பதை நிர்ணயிக்கின்றது. பிரயோசனம் என்பது காசு, பணம், பேர், புகழ் எனும் புற வெகுமானங்களை மையமாக வைத்தே வரையறுக்கப்படுகின்றது. எனவே, முயற்சி ஒன்றில் பயனாளிகளின் எண்ணிக்கை முக்கியமான தொன்றாகக் கணிக்கப்படுகின்றது. ஆனால் புற வெகுமானங்களுக்குக் கொடுக்கும் மதிப்பினை திறமைக்குச் சவாலாகும் வேலை ஒன்றினைத் தீவிர முயற்சி மூலம் நிறைவேற்றுதலால் உண்டாகும் மனநிறைவு, மகிழ்ச்சி முதலான அக வெகுமானங்களுக்கு அளிப்பது குறைவு. அதனால், வயது செல்லச் செல்லப் புதிதாகக் கற்கவும், புதிய முயற்சிகளில் ஈடுபடவும் பெருந்தயக்கம் ஏற்படுகின்றது. இத்தயக்கங்களையெல்லாம் அறவே துறந்தவர் பாலா. ஓவியம் மூலமாகத் 'தன்னை' உணரும் பாலா நண்பர்களின் ஊக்குவிப்பில் மகிழ்கின்றார்.

டிசம்பர் 23-24 ஆம் திகதிகளில் ஸ்காபரோ சிவிக் செண்டரில் நடைபெற்ற Inclusive Arts Fest எனும்கண்காட்சியிலும் இவர் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இவருடைய ஓவியங்கள் மக்கன்ஸி ரிச்மண்ட் ஹில் வைத்தியசாலையின் அவசர உதவிப்பிரிவில் (Urgent Care Centre, Mackenzie Richmond Hill Hospital) டிசம்பர் 18 முதல் மூன்று மாதங்களுக்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

art by bal (https: //www.facebook.com /ArtbyKKBal/posts_to_page/)எனும் முகநூலிலும் இவரது ஓவியங்களை ஆர்வமுடையோர் பார்வையிடலாம்.







FOR ALL YOUR
MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Best Rates & Advice
You Can Trust!
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca
MORTGAGE ALLIANCE

